வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.




புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 கார்த்திகை திங்கள் 6-ம் நாள் (22—11—1959) ஞாயிற்றுக்கிழமை ஐ.அவ்வல் பிறை 20 இதழ் 25

# சர்வகட்சிப் பராமரிப்பு அரசாங்கம்....

## அதில் கூடத் தமிழரசுக் கட்சி பதவியேற்க மாட்டாது

### 'சமஷ்டி அரசமைப்பு ஏற்படும் காலம் அதிக தூரத்திலில்லை'

—எஸ். ஜே. வி.

(சுதந்திரன் நிருபர்)

"ஒரு சர்வகட்சிப் பராமரிப்பு அரசாங்கம் (An All Party Caretaker Government) ஏற்பட்டால்கூட அதில் பதவியேற்கத் தமிழரசுக் கட்சி முன்வரமாட்டாது. எங்கள் இலட்சியம் சமஷ்டி அரசாங்கம் ஆகும். சமஷ்டி அரசாங்கம் ஏற்படும் வரை நாங்கள் எவரும் எந்தப் பதவியையும் ஏற்கமாட்டோம். சமஷ்டி அரசமைப்பு ஏற்படும் காலம் அதிக தூரத்திலில்லை" என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுதந்திரனுக்கு அளித்த ஒரு விசேஷ பேட்டியின் போது மிகுந்த உறுதிப்பாடுடன் கூறினர்.

இன்றுள்ள சூழ்நிலையில் தஹநாயகா அரசாங்கம் அதிககாலம் நீடிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இச்செய்தியை சுதந்திரன் நேயர்கள் படிக்கும்போதே அரசாங்கத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிடலாம். நிதியமைச்சர் திரு ஸ்டான்லி டி சொய்ஸா தாமாகவே ராஜினமாச் செய்துவிடலாம் அல்லது திருமதி விமலா விஜயவர்த்தன மந்திரிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதுபோல் அவரும் கவர்னர் ஜெனரலால் நீக்கப்பட்டுவிடலாம். அன்றி, பாராளுமன்றமே கலைக்கப்பட்டுவிடலாம். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை தான் நீடிக்கிறது.

நிதியமைச்சர் உடனடியாக நீக்கப்பட்டால் அரசாங்கம் மேலும் சிறிது காலம் குற்றுயிரும் குறையுயிருமாக இயங்கலாம் என்றும் கருதப்படுகிறது.

இதற்கு மாருகப் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அல்லது அரசாங்கம் ராஜினமாச் செய்தால் கீழே தரப்படும் வகைகளில் ஆட்சி நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

1. பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, திரு தஹநாயகா தமக்குப் பிடித்தமான ஒரு மந்திரி சபையை வைத்துக் கொண்டு அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை, மூன்று நான்கு மாதங்கள் ஒரு பராமரிப்பு அரசாங்கத்தை நடத்தலாம்.
2. பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின் கவர்ணர் ஜெனரல் ஆட்சியதிகாரங்களைத் தம் கையில் எடுத்துக்கொண்டு பொலிஸ் இராணுவ பலத்துடன் ஒரு தனியதிகார ஆட்சியை நடத்தலாம்.
3. கவர்ணர் ஜெனரல் தமக்குப் பிடித்தமானவர்களைக் கொண்டு ஒரு இடைக்கால அரசாங்கத்தை நிறுவி அதன் கையில் ஆட்சியதிகாரங்களை ஒப்படைக்கலாம்.
4. கவர்ணர் ஜெனரல் எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து ஒரு அரசாங்கத்தை அமைத்து நாட்டின் ஆட்சி அதிகாரங்களை நடத்தும்படி கோரலாம்.
5. பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின், அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறும் வரை, ஒரு சர்வகட்சி பராமரிப்பு மந்திரி சபையை அமைத்து அதன் கையில் நாட்டின் சகல ஆட்சி அதிகாரங்களையும் ஒப்படைக்கலாம்.



திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம்

சர்வ கட்சி பராமரிப்பு அரசாங்க மந்திரி சபை அமைக்கும் நிலைமை ஏற்பட்டு அதில் பதவியேற்குமாறு தமிழரசுக் கட்சியும் அழைக்கப்பட்டால், "பதவி ஏற்பீர்களா?" என்று சுதந்திரன் நிருபர் கேட்டபோது தான் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆரம்பத்தில் கூறியவாறு பதிலிறுத்தார்.

அரசினர் பாடசாலை

## தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் உபதலைவர் ராஜினமா

### புது நிர்மானம் செய்யத் தீர்மானம்

சுதந்திரன் செய்திக்கு ஒருவர் மறுப்பு

கடந்த வாரச் சுதந்திரனில் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பற்றி வெளியிடப்பட்டிருந்த செய்தி உண்மைக் கலப்பற்றதாகவும், வெளியூர் அங்கத்தவர்கள் சங்கத்தைப் பற்றித் தப்பெண்ணம் கொள்ளக்கூடியதாகவும் இருந்ததாக, மேற்படி சங்கக் கொழும்புக் கிளையின் காரியதரிசி என்று தம்மைக் குறிப்பிடும் திரு வ. கந்தையா என்பவர் எழுதியிருக்கிறார்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது:-

"செய்தியில் சுதந்திரன் நிருபர் குறிப்பிட்டது போல் சங்கப் பெயர்ப்பலகை மறையவுமில்லை; பைல் கட்டுகள் பரனுக்குப் போகவுமில்லை. இவ்வித செய்தி சுதந்திரன் நிருபருக்கு எவ்விதம் கிடைத்தது என்பதே வியப்பூட்டுவதாக இருக்கிறது. இதற்கு முன்பும் பல முறைகளில் வந்த பத்திரிகைச் செய்திகள் உண்மைக்கு மாருனவையாகவும், ஆழ்ந்த நோக்கின் சங்கப் பொதுச் செயலாளருக்குச் சாதகமானவையாகவுமே காணப்பட்டன"—இவ்வாறு திரு. வ. கந்தையா என்பவர் எழுதியிருக்கிருர்.

இதுபற்றிச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. சு. தியாகராசாவிடம் கேட்

(8-ம் பக்கம் பார்க்க)

## கோப்பாய்த் தேர்தலில் சமசமாஜக் கட்சி

### கொக்கரித்தது போல் அபேட்சகரை நிறுத்தாதது ஏன்?

(நமது யாழ்ப்பாண நிருபர்)

யாழ்ப்பாணம் நவ. சமசமாஜிகளின் தந்திரம் திரு. எஸ். எச் பேரின்பநாயகத்திடம் பலிக்கவில்லை. அவரை எப்படியும் ஏமாற்றிக் கோப்பாய் இடைத்தேர்தலில் தம் கட்சி அபேட்சகராகப் பிடித்துத் தள்ளிவிட முயன்ற சமசமாஜிகள் கடைசியில் தாமே ஏமாந்தனர்.

மேற்படி இடைத்தேர்தலைப் பொறுத்தவரை எத்தகைய சிந்தனையுமற்றிருந்த பேரின்பநாயகத்தை அவர்கள் தம்மாயவலையில் வீழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## அசுத்த இரத்தம்?

### வேதனை தரும் பல பயங்கரமான நோய்களுக்குக் காரணமாகிறது!



இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் அகற்றப்படாவிட்டால் அவை அங்கு பெருமளவில் தேங்கிக்கிடந்து நச்சுத் தன்மையை உண்டாக்கி விடுகின்றன. அதனால் கடுமையான வியாதிகள் பல ஏற்பட ஏதுவாகின்றன.

- வாத நோய்கள்: இடுப்புப் பிடி, சந்து, வாதம், கீல்வாயு, கைகால் பூட்டுகளில் பிடிப்பு—நோவு.
- இரத்த நாள இறுக்க நோய்: இரத்தக் கொதிப்பு, இரத்தக் கட்டுத் தொந்தரவுகள்.
- மந்தமான இரத்த ஓட்டம்: சோர்வு, பித்த மயக்கம், அசதி, நரம்புத் தடிப்பு, நரம்பு சுருளல், புண், பிளவை, கட்டி.
- சரும வியாதிகள்: பருக்கள், தேமல்கள், சொறி சிரங்குகள் (ECZEMA)
- மூலம்: உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம்.




ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(Richelet's Blood Purifier)

இரத்தத்தை சுத்திகரிக்கவும், அதற்கு சக்தியூட்டவுமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது உடம்பில் எந்தப் பாகத்திலுமுள்ள நோய்நஞ்சையும் நீக்கி உடம்பைச் சீர்படுத்துகிறது. உள்ளூர ஏற்பட்ட நச்சுத் தன்மையால் உண்டாகும் நோய்களின் வலிகள்—வருத்தங்கள் படிப்படியாக ஒழிக்கப்படுகிறது இம் மருந்தினல். மேலே சொன்ன எந்த ஒரு வியாதியால் கஷ்டப்படும் நோயாளியும் ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் உபயோகிக்கவேண்டும். பூரண சுகம், பலம், சந்தோஷம் அப்பொழுது நிச்சயம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சிஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில் அமரர் கு. வன்னியசிங்கம்:

# உயர் பதவிக்காகப் பந்தமும் பாதபூசையும்

## உதவி மந்திரிக்கு பத்திரிகை அறிக்கை தயாரித்து கொடுக்கிறார் ஒருவர்

## பாடப்புத்தக மொழி பெயர்ப்பில் ‘பலே பிஸ்னஸ்’ செய்கிறார் இன்னொருவர்

## அரசகரும மொழித் திணைக்களத்தில் உள்ள மூன்று தமிழ் உத்தியோகத்தரின் நிலை

**காலஞ் சென்ற தமிழ்த் தலைவர், கோப்பாய்க் கோமான் திரு கு. வன்னியசிங்கம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய இறுதிப் பேச்சின் கடைசிப் பகுதி இங்கு தரப்படுகிறது.**

காங்கேசன்துறைப் பிரதிநிதி (திரு செல்வநாயகம்) அரசியலமைப்பைத் திருத்துவதற்கான தெரிவுக் குழுவிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட பிரேரணையிற் பேசும்போது அரசாங்க மொழித் திணைக்கள நியமனங்கள் பற்றிப் பேசினேன். பிரதம மந்திரி கொடுக்கும் அறிவுறுத்தல்களை விசேட கொமிஷனரும் அவருடைய பிரதிக் கொமிஷனரும் உதாசீனம் செய்கிறார்கள் எனவும், அரசாங்க மொழிப் பகுதியிலுள்ள தமிழ் உத்தியோகத்தர்யாவரையும், ஒரு புதிய திணைக்களம் அல்லது ஒரு புதிய பிரிவை ஆக்கும் நோக்கத்துடன், வேறொரு பிரிவுக்கு மாற்ற வேண்டுமெனப் பிரதம மந்திரி கொடுத்த கட்டளையையே அவமதித்துத் தமக்கு வேண்டிய மூவரை மாற்றாது வைத்திருக்கின்றனர் எனவும் அப்பொழுது எடுத்துக் காட்டினேன்.

### சொந்த வேலை செய்கிறார்கள்

மொழி பெயர்ப்பு அத்தியட்சகர் மொழி பெயர்ப்பாளர், ஆராய்ச்சி உதவியாளர் ஆகிய மூவரையுமே ரீட் அவெனியூ அலுவலகத்தில் வைத்திருக்கின்றனர். ஆராய்ச்சி உத்தியோகத்தர் மொழி பெயர்ப்பாளர்கள் மூவர் மொழிபெயர்ப்பு அத்தியட்சகர் ஒருவர் ஆகியோர் புல்லர்ஸ் வீதியிலுள்ள தன் மொழி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். ஆராய்ச்சி உத்தியோகத்தருடனிருந்து வேலை செய்ய ஆராய்ச்சி உதவியாளர் புல்லர்ஸ் வீதி அலுவலகத்திற்கு மாற்றப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய உத்தியோகத்தர் மூவரும் ரீட் அவெனியூவிலுள்ள அரசாங்க மொழி அலுவலகத்தில் என்ன வேலை செய்கிறார்கள் என்பதைப் பிரதம மந்திரியிடமிருந்து அறிய விரும்புகிறேன். அவர்களுக்கு அங்கே வேலை எதுவுமில்லையெனவும், தம் சொந்த வேலை ஏதாவது செய்கிறார்கள் அல்லது காலத்தை வீணே கழிக்கிறார்கள் எனவும் அறிகிறேன்.

திரு ஸ்டான்லி டி. சொய்சா: இவர்கள்தானா அத் தமிழ்ப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள்?

திரு கு. வன்னியசிங்கம்: ஆம். அம் மூவரும் மற்றத் தமிழ் உத்தியோகத்தருடன் வேலை செய்வதற்கு அனுப்பப்படவில்லை. அவர்கள் ஒரு பிரத்தியேகமான விசேட இடத்தில் விடப்பட்டிருக்கிறார்கள். என்ன நோக்கத்துடன் என்பது தெரியவில்லை. அவர்கள் எந்த விதமான வேலையும் செய்யவில்லை யென்பது நம்பகமாகத் தெரியும்.

### ஒருவர் செய்யும் விசித்திர வேலை

இம் மூவரில் ஒருவர் பாராளுமன்றக் காரியதரிசிகளுக்குப் பத்திரிகை அறிக்கைகள் எழுதிக் கொடுப்பதிலும், ஒரு பாராளுமன்றக் காரியதரிசிக்கு வைக்கப்படும் வரவேற்பு உபசாரங்களின்போது பேசுவதிலும் விசேட கவனம் செலுத்தி வருகிறார். ஆராய்ச்சி உத்தியோகத்தர் பத்திரிகைக்குச் செய்தி எதையோ கொடுத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு இப்பொழுது ஒரு விசாரணை நடைபெற்று வருவது எனக்குத் தெரியும்; ஆனால் பாராளுமன்றக் காரியதரிசி ஒருவருக்கு நடைபெறும் வரவேற்பு வைபவங்களில் அரசியற் பேச்சுக்கள் பேசும் ஆராய்ச்சி உதவியாளர் மீது ஏதாவது நடவடிக்கை யெடுக்கப்படுகிறதா வென்பதை அறிய விரும்புகிறேன். அரசாங்கத்தை ஆதரித்துப் பேசும் அரசாங்க உத்தியோகத்தருக்கு இவ்வரசாங்கம் உற்சாகமளித்து வருகிறதா?

திரு தேமிஸ்: நீங்கள் குறிப்பிட்ட பாராளுமன்றக் காரியதரிசி யார்?

திரு வன்னியசிங்கம்: தொழில் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி.

திரு. தேமிஸ்: திரு. எதிர்மன்னசிங்கமா?

### பந்தமும் பாதபூசையும்

திரு வன்னியசிங்கம்: ஆம். பாராளுமன்றக் காரியதரிசி ஒருவரைக் கௌரவிக்க ஒழுங்கு செய்யப்படும் வைபவங்களில் கலந்துகொண்டு, சமஷ்டிக் கட்சியைத் தாக்கித் தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் பேசும் அரசியற் பேச்சுக்கள் நியாயமானவையென இந்த அரசாங்கம் கருதுகிறதா? இத்தகைய உத்தியோகத்தர்மீது ஏதாவது நடவடிக்கை யெடுக்கப்படுகிறதாவென அறிய விரும்புகிறேன். ஒரு சிலருக்குப் பந்தம் பிடித்து உயர் பதவிகள் பெற எத்தனிக்கும் உத்தியோகத்தர் மீது நான் குறை கூறவில்லை; அத்தகைய உத்தியோகத்தரைத் தட்டிக்கொடுத்துவிட்டு பத்திரிகைக்கு ஏதோ செய்தி கொடுத்தாரென மற்றொரு உத்தியோகத்தர் மீது நடவடிக்கை யெடுப்பதையே நான் கண்டிக்கிறேன். ரீட் அவெனியூவிலுள்ள உத்தியோகத்தர் மூவரும் உயர் அதிகாரிகளுக்குப் பாதபூசை செய்து தம் உத்தியோகத்துக்குரிய வேலை யெதுவும் செய்யாது, ஆனால் நேர்மையாக வேலை செய்பவர்கள் போலத் திரிகின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

### மொழி பெயர்ப்பு வேலையில் ஒப்பந்தம்

இந்த உத்தியோகத்தர் பாடப் புத்தக மொழி பெயர்ப்பு வேலையை ஒப்பந்தத்தில் [illegible] ன் அவர்களுக்கு வேறு வேலை எதுவும் அலுவலகத்தில் இல்லாமையால் பாடப் புத்தக வேலைகள் செய்து வேறு சம்பளம் பெறுகிறார்கள். அது மாத்திரமன்றி தாம் எடுக்கும் பாடப் புத்தக மொழி பெயர்ப்பு வேலைகளை வேறு சிலருக்கு உப ஒப்பந்தமாக கொடுத்து, அவர்களுக்குச் சிறு தொகையை மாத்திரம் வழங்கிவிட்டு, பெருந் தொகைகளைத் தாமே சுவீகரித்துக்கொள்ளுகின்றனர்.

### மொழிபெயர்ப்பு மூழி பெயர்ப்பாகும்

மொழி பெயர்ப்புக்கெனப் பாடப் புத்தகங்களைத் தெரிந்தெடுக்கும் முறை திருப்திகரமாகவில்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். திரு வீரவர்த்தனவின் பொருளாதார நூலைத் தமிழில் மொழி பெயர்க்கும்படி வண. குணானந்ததேரோவிடம் கொடுக்கப்பட்டது. இவருக்குத் தமிழறிவோ அதிகமில்லை; பொருளாதார அறிவு அதனிலும் குறைந்ததே. பரீட்சைகளுக்கென ஒரு குறிப்பிட்ட பொருளாதார நூல் விதிக்கப்படாமையால் ஒரு சிங்கள நூலைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியமில்லை. சிங்களத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட தமிழாக்கத்தை பொருளாதார அறிவில்லாத தமிழ் உதவிக் கொமிஷனர் பரிசீலனை செய்கிறார். ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் சிங்களத்திலாக்கி, சிங்களத்தை மீண்டும் தமிழாக்கிச் செய்யும் இரட்டிப்பு மொழி பெயர்ப்புக் கடைசியில் மூழிபெயர்ப்பாகவே முடியுமென அஞ்சுகிறேன்.

### ஆலோசனைச் சபை வேண்டும்

இத் தொடர்பில் பிரதம மந்திரியாருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். மொழி பெயர்க்க வேண்டிய பாடப் புத்தகங்களைத் தெரிவு செய்யவும், மொழி பெயர்ப்பு வேலைகளைப் பொதுவாக மேற்பார்வை செய்யவும் உதவக் கூடியதாக, கல்விமான்களையும் இச் சபைப் பிரதிநிதிகள் சிலரையும் கொண்ட தமிழ் ஆலோசனைச் சபை ஒன்றையும் சிங்கள ஆலோசனைச் சபை ஒன்றையும் நிறுவுவது சிறந்தது எனக் கருதுகிறேன்.

பாடப் புத்தகப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர் நிலைமை பற்றியும், அரசாங்க மொழிப் பகுதியிலுள்ள உத்தியோகத்தர் நிலைமை பற்றியும் இச் சபைக்கு எடுத்துக் கூறுமாறு பிரதம மந்திரியாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். சிங்களப் பிரிவுக்கும் தமிழ்ப் பிரிவுக்கும் எவ்வகையாக உத்தியோகத்தர் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனர், தமிழ்ப் பிரிவில் மேலும் சில உத்தியோகத்தரை நியமிப்பதற்கு அவர் என்ன நடவடிக்கை யெடுக்கப் போகிறார் என்பது பற்றியும் கூறுதல் வேண்டும்.

### சன்மானம்

மேலும் இரண்டு சிறு விடயங்கள் பற்றிக் கூறி என் பேச்சை முடிக்க விரும்புகிறேன். முதலாவது விடயம் மொழித் தகைமைக்காகக் கொடுக்கப்படும் உபகாரப் பணம் பற்றியது. சிங்கள மொழிப் பரீட்சையிற் சித்தியெய்துபவருக்குக் கொடுப்பதுபோன்ற சன்மானம் தமிழ்ப் பரீட்சையிற் சித்தியடைவோருக்கும் கொடுக்கப்பட வேண்டும். இவ் விடயமாக நான் முன்னொரு [illegible] பேசியபோது நியாயமான அளவு உபயோகத் தமிழ் மொழி மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர் இவ்விடயம் பற்றிக் கவனிப்பதாக நிதிமந்திரியார் வாக்களித்தார். அம் மசோதா இப்பொழுது நிறைவேற்றப்பட்டு விட்டபடியினால் இச் சன்மானம் கொடுக்கும் விடயம் உடனடியாகக்" கவனிக்கப்பட வேண்டும்.

### புகையிரதப் பகுதி சுற்றறிக்கை

அடுத்ததாக, புகையிரதத் திணைக்களம் விடுத்த ஒரு சுற்றறிக்கையை பிரதம மந்திரியாரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன் 1959; ஜூன் 2-ம் தேதி SB/M (1959) இலக்கச் சுற்றறிக்கையில் பின்வருமாறு காணப்படுகிறது.

“1961-ம் ஆண்டு தொடக்கம் கடிதத் தொடர்புகள் யாவும் சிங்களத்திலேயே யிருக்க வேண்டுமெனவும் வேறு மொழியிலுள்ள கடிதத் தொடர்புகள் சட்ட விரோதமானவையாகும் எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆகையால் முதலில் இத்திணைக்களத்துள் நடைபெறும் கடிதப்போக்குவரத்தை 1-7-59 தொடக்கம் சிங்களத்தில் நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.”

"சட்ட விரோதமானவையாகும்" என்றிருப்பதைக் கவனியுங்கள்.

### நியாயமான உபயோகம் எங்கே?

இயன்றவரையில் கடிதத் தொடர்புகள் சிங்களத்தில் இருக்க வேண்டுமென்றிருந்தால் அதை நாம் விளங்கிக் கொள்ளலாம்; ஆனால் சிங்களத்தில் அல்லாத கடிதத் தொடர்புகள் சட்டவிரோதமானவையெனக் கொள்ளப்படுமாயின் தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் எங்கே வருகிறது? வேறு மொழியில் கடிதத் தொடர்புகள் வைப்பது சட்டவிரோதமெனக் கொள்ளப்படுமாயின் உங்கள் உத்தியோகத்தரும் உங்கள் அரசாங்கமும் தமிழ் மொழியைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை யென்பதற்கு வேறென்ன அத்தாட்சி வேண்டும்? இதற்குப் பிரதம மந்திரியார் விடை தருவாரா?

### இந்தியாவின் முன் மாதிரி

இவ்விடயத்தில் இந்தியா காட்டியிருக்கும் முன்மாதிரியைப் பின்பற்றுவது எமக்கு நன்மை பயக்கும். இந்தியா இந்தி மொழியை அரசாங்க மொழியாக்குவதற்கு விதித்த கால எல்லையை எத்தனையோ முறை ஒத்தி வைத்துவிட்டது. அதுவுமன்றி, கடைசியாக விடுத்த அறிவித்தலின்படி, இந்தியை அரசாங்க மொழியாக்கும் திட்டம் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம்தானும் இந்தி மொழியை அரசாங்க மொழியாக்க வேண்டுமா வென்பதையும் அப்படியாயின் எப்பொழுது அவ்வாறு ஆக்க வேண்டுமென்பதையும் இந்தி பேசாத மக்களே தீர்மானிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு. இதுவே இந்தியாவிலுள்ள நிலை. இம் முறையை நாமும் இங்கே பின்பற்ற முடியாதா?

### நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுப்பதா?

சிங்கள, தமிழ்ப் பாடப் புத்தகங்களையும் இலக்கியங்களையும் விருத்தியடையச் செய்வதற்கும், இந் நாட்

(15-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, படர்கள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், “ஆனந்தா தைலத்தை”த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நமக்குத் தொழில் கவிதை

## "சிரித்தாளே அந்தச் சிலை"

ஆதவனும் உச்சியிலே, மாமதியம் பன்னலுக்கே
ஏது புதினமென? எட்டினேன்—பாதி
எரித்த விழிதாழ்த்தி என்நெஞ்சைக் கிண்டிச்
சிரித்தாளே அந்தச் சிலை

—ஏ. எஸ். மணியம், பத்தேவ

கரும்பும் கசந்து கனியும் புளித்து
வருந்துகிறேன் வந்திடுங்கள் இன்றே—பொருந்தும்
உரித்துடைய மைத்துனரே, உத்தமரே, என்று
சிரித்தாளே அந்தச் சிலை

—ச. திருப்பதி, குருநாகல்

நெரித்தாள் புருவத்தை! நெஞ்சை நெருப்பால்
எரித்தாள்! இறக்க இருந்தேன்!—வருத்தம்
நிறுத்த நினைத்தாளோ என்னவோ மெல்லச்
சிரித்தாளே அந்தச் சிலை

—திருச்சி ஆனந்தன், திருச்சி

நீலக் கருவிழியே நெஞ்சில் உனையிருத்தி
காலமெலாம் தேன்சுவைத் தின்பமுற—பாலை
வெறுத்தும் பசிதீர இங்குவந்தேன் என்னச்
சிரித்தாளே அந்தச் சிலை

—க. சுப்பிரமணியம், காரைநகர்

சாதிமத பேதம் தகர்த்து, முழுமனதாய்க்
காதலித்த வெண்ணையே கைப்பிடித்து—நீதி
நிறுத்துமுங்கள் வீரம் நிகரற்றதென்று
சிரித்தாளே அந்தச் சிலை

—"வன்னியூர்க் கவிராயர்", இலுப்பைக்குளம்

கருங்குழலுஞ் செவ்விழியுங் காளையர் கண் வாங்கும்
பெருந்தனமுஞ் சிற்றிடையுங் கொண்ட—அரம்பை
விரிக்காத தன்வலையில் வீழ்வாரைக் கண்டாள்;
சிரித்தாளே அந்தச் சிலை

—மு. வைத்தியலிங்கம், கொழும்பு—12

வண்ணமுகங் காட்டி வரிவண்டுக் கண்ணுலென்
எண்ணமதைக் கொண்ட எழிலரசை—நண்ணி
வருத்துவதோ என்றேன்; வளமாக நின்று
சிரித்தாளே அந்தச் சிலை

—"வளவன்" கொழும்பு—6

சிற்பியினுற் தோற்றுவித்த சித்திரமென் றேநினைந்
தற்புதம் பொங்க அருகணைந்தேன்—கற்றை
விரித்த கருங்கூந்தல் வீழ்ந்தசைய எள்ளிச்
சிரித்தாளே அந்தச் சிலை

—ஆ. க. கதிரேசன், வதிரி

உடலழகால் மாந்தர் உளம்பறிக்கச் சிற்பி
திடமுடனே செய்த சிலையைத்—தடவத்
தரித்திருந்த ஆடைத் தலைப்பைப் பிடித்துச்
சிரித்தாளே அந்தச் சிலை

—க. வே. கதிர்காமவேல், வதிரி

காதல் மொழிகாணேன் காரிகைதன் மெல்லுடலில்
வாதை யுறக்கண்டேன் வாட்டமுறப்—போதை
கருவிழிமே லாடக் கனவுலகில் வந்து
சிரித்தாளே அந்தச் சிலை

—ச. சரோஜா, குருநகர்

பேசா மடந்தையாள் பேரெழிலாள் என்மேலே
வீசாத கண்ணுள் விரைவாள்முன்—காசாய்
விரித்து விரித்துயான் வீசினேன் மெல்லச்
சிரித்தாளே அந்தச் சிலை

—யோகி பர்நாந்து, மட்டுநகர்

வேர்வை பெருக வெயிலென்றும் பாராமல்
ஆர்வமுடன் வீட்டை அடைந்தேன்நான்—பார்வை
எரித்ததும் எண்ணுதென் நெஞ்சம் கொளுத்தி
சிரித்தாளே அந்தச் சிலை

—சோ. இராசேந்திரம், ஈச்சந்தீவு

வீட்டுப் படியேறி வேலிமேல் பூ முகத்தைக்
காட்டி மலர்த்திக் "களுக்" கென்று—மாட்சி
விரித்த பவள இதழ் வெண்முத்துக் காட்டிச்
சிரித்தாளே அந்தச் சிலை

—நா. ஏரம்பமூர்த்தி, எருவில்

ஊரார் அறியாமல் உற்ருரும் காணுமல்
மாருத காதல் மலராக—நேராய்த்
திரித்த குழல்புரளச் சென்ருேடி நின்று
சிரித்தாளே அந்தச் சிலை

—சி. பொன்னுத்தம்பி, செங்கலடி

ஓடைநீ ராடி உயிர்கொத்தி மின்னுமெழில்
ஆடையிலே போயெழலித்தாள் ஆருயிராள்—ஏடு
விரித்து மலர்சிலிர்க மின்னிற் பகலாய்ச்
சிரித்தாளே அந்தச் சிலை

—பாலகுரு சின்னச்சாமி. மட்டுநகர்

ஆதவன்போய் ஆழ்கடலைச் சேர்ந்துடன் இன்புற்ருள்
காதலரே! என்றெனது காதருகே—காதல்
எரியுண்ணக் கண்மலர் மென்கணைக ளேவச்
சிரித்தாளே அந்தச் சிலை

—பொ. பாலசுப்பிரமணியம், கொழும்பு

கள்ளம் குழியக் கரிய விழிகளிலே
மின்னும் குறும்பு மிகவோங்க—மென்மை
அரும்பும் அதரம் அகலத் திறந்து
சிரித்தாளே அந்தச் சிலை

—வேலாயுதம் தங்கராஜா, தம்பலகமம் [illegible]

தொகுத்தவர்: கவிஞர் "மஹாகவி"

# கேட்டுப் பாருங்கள்

## குயுக்தி



துரைராஜு, முள்ளோயா

கே: திரு எம். கே. தியாகராஜ பாகவதர் என்ன நோயால் இறந்தார்?

ப: மனநோயால். லக்ஷிமிகாந்தன் கொலை வழக்கில் சிறைப்பட்டபோதே பாகவதர் மனமுடைந்தவரானுர். அதன் பின்னுல் அவர் தேறியதேயில்லை.

ஃ

எஸ். எல். சவுந்தரநாயகம், இலுப்பைக்குளம்

கே: புரட்சி நடிகர், புரட்சி எழுத்தாளர் என்றெல்லாம் இருப்பதைப்போல இலங்கையில் யாராவது புரட்சிப் பேச்சாளர் உளரா?

ப: புரட்சிப் பேச்சாளர் இல்லை. புரட்டுப் பேச்சாளர் உளர். அத்தனை அரசியல் வாதிகளும் புரட்டுப் பேச்சாளர்கள்தாமே!

ஃ

வன்னியூர் கவிராயர், இலுப்பைக்குளம்

கே: ஒருவர் எழுத்தாளர் ஆவதற்கு எத்தனை கதை கட்டுரைகள் எழுத வேண்டும்?

ப: எதுவுமே எழுத வேண்டியதில்லை. பேனவைத் தொடாதவர்கள் எல்லாம் எழுத்தாளர் மாநாடுகளில் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டு ஜம்பமடிக்கும் காலம் இது!

ஃ

க. தனலட்சுமி, உரும்பிராய்

கே: இலங்கையில் இப்போது காதல் கலியாணங்களின் தொகை அதிகரிக்கிறதாமே......?

ப: அப்படியானுல் யாழ்ப்பாணத்திலுள்ள கலியாணத் தரகர்களின் கதி......?

ஃ

ஆர். கே. எஸ். மணியம், பாறை

கே: வீரர்கள் பலரின் புகழைப் பாடிய பாரதியார் வீரபாண்டிய கட்டப்பொம்மனைப்பற்றிப் பாடாத காரணம் என்ன?

ப. எல்லார் புகழையும் தாமே பாடிவிட்டால் தமக்குப் பின்னே தோன்றும் கிராமணியார் யார் புகழைப் பாடிப் புகழடைவார் என்று பாரதியார் விட்டிருக்கலாம்!

ஃ

மு. பத்மநாதன், மட்டக்களப்பு

கே: தமிழ்ப் படவுலகில் நடிப்பில் உன்னத ஸ்தானம் வகிக்கும் மூன்று நடிகைகளை வரிசைப்படி கூறுங்கள்.

ப: பத்மினி, என். எம். ராஜம், சரோஜா.

ஃ

அ. பஞ்சாட்சரம், வட்டக்கட்சி

கே: சிறை என்ருல் என்ன?

ப: இந்த நாட்டில் 'சிறீ' அழித்தால் கிடைப்பது.

ஃ

கே. எம். முஸ்தபா, கல்முனை

கே: முதலியார் காரியப்பர், முஸ்தபா, ஏ. எம். ஏ. அஸீஸ், ராஸிக் பரீத், மாக்கான் மரிக்கார், மந்திரி மரிக்கார்—இவர்களில் நீங்கள் மதிக்கும் முஸ்லிம் தலைவர் யார் குயுக்தியாரே!

ப: யாருமில்லை. எல்லோ[illegible] [illegible] அடிக்கடி [illegible]பவர்கள், புரட்டுபவர்கள், [illegible] [illegible]வர்கள். என் மதிப்புக்குரிய ஒரே ஒரு முஸ்லிம் தலைவர் டாக்டர் எம். ஸி. எம். கலீல்தான். அவர் அரசியல் கொள்கையை நான் ஏற்காவிடினும் அவருடைய நிலையான கொள்கையைக் கண்டு அவரைப் பாராட்டுகிறேன்.

ஃ

ஏ. ஆர். எம். நிசார், தெமட்டகொட

கே: அரசியலில் மாணவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

ப: பதினெட்டுவயதுவரை அரசியலை அறிந்துகொள்ள வேண்டும். அதற்குமேல் அவசியம் கலந்துகொள்ள வேண்டும். அப்படிச் சட்டம்கூடச் சொல்லுகிறதே.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

ஃ

மு. பட்சமுத்து, சியாங்கொல்[illegible]

கே: உங்கள் மாதச் சம்பளத்தை எத்தனை நாள் தட்டுப்பாடு இல்லாமல் வைத்துச் செலவழிக்கிறீர்கள்?

ப: எத்தனை நாளா? மணித்தியாலக் கணக்கில்கூட அது என் கையில் தங்குவதில்லையே. காலையில் முதலாளி என் கையில் கொடுக்கிருர், மாலையில் நான் என் சகதர்மிணி கையில் பைசா குறையாமல் அப்படியே கொடுத்துவிடுகிறேன். இல்லாவிட்டால் அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

ஃ

செல்வி கோமளா ராஜன், கொழும்பு

கே: இலங்கை வந்திருக்கும் சினிமா நடிகர் எம். கே. முஸ்தபா எப்படிப்பட்டவர்?

ப: நல்ல குணசித்திர நடிகர். உணர்ச்சியைக் கொப்பளித்து நடிப்பதில் உன்னத நிலைமையை அடைந்திருப்பவர். "சிவகெங்கைச் சீமை" என்ற படத்தில் அற்புதமாக நடித்துள்ளார். அவரைக் கடந்த வாரம் சந்தித்தபோது "அந்தப் படத்தில் எப்படித் தங்களுக்கு அவ்வளவு உணர்ச்சியோடு நடிக்க முடிந்தது?" என்று கேட்டேன். அதற்கு அவர் "ஏன், நான் சிவகெங்கைச்சீமையில்தானே திருமணம் செய்திருக்கிறேன்" என்ருர். அவர் உணர்ச்சியை எங்கிருந்து பெறுகிருர் என்ற இரகசியத்தை அறிந்து கொண்டேன்.

ஃ

க. கிருஷ்ணபிள்ளை, கோளாவில்

கே: நான் ஒரு பெண்ணின் காதலுக்காகத் தவிக்கிறேன். அவள் என் பேச்சைக் கேட்க மாட்டேன் என்கிருளே......

ப: ஐயோ பாவம். அவள் காது இனி யாகிவிட்டாளா?

ஃ

கே. பரமசாமி, யாழ்ப்பாணம்.

கே: காதலில் பிடிப்பை ஏற்படுத்துவது உள்ளத்து உறவா? உடலின் உறவா?

ப: உடலின் உறவு ஏற்படாதவரை காதல் ஸ்திரம் பெறுவதில்லை. சதா தத்தளித்துக் கொண்டுதானிருக்கிறது. நங்கூரம் இடாத கப்பலைப்போலே.

ஃ

செ. குமாரசாமி, கொழும்பு.

கே: இந்தியப் பாடகர் மாரியப்பா என்பவர் கொழும்பில் நாடகம் போடுகிருராமே, பார்த்தீர்களா?

ப: நாடகமா அது? "பவளக்கொடி" என்று ஒரு பத்தாம் பசலி ஆட்டம் போட்டார்கள். "நிறையக் குடி" என்று பெயரிட்டிருந்தால் நன்ருயிருந்திருக்கும்.

ஃ

பெ. ராசலட்சுமி, பரந்தன்.

கே: புலித்தேவன் என்ருல் யார்?

ப: உயிருட்டி எழுப்பப்பட்ட பழைய வீரர்களுள் வெகு சீக்கிரம் செத்துப் போனவன் புலித்தேவன்.


# அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானுல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
( Spermatone Compound )

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

'மோடர்ன் கிளினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

கூட்டாயமாக நடைபெறும் என நாம் முன்னர் குறிப்பிட்டனவெல்லாம் நிறைவெய்துவதைத் தமிழ் மக்கள் யாவரும் நேரே காண்கின்றனர். "நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மாட்டார்கள்" என்று கூறினோம். இச் சட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக்கு மேலாய்விட்டது. ஒன்றும் நடைபெறவில்லை. இச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்குச் சிங்களம் மட்டுஞ் சட்டம் இடங்கொடுக்காது என்று சட்ட வரைவாளர் தமது தீர்ப்பை அளித்துவிட்டார் என்கின்றனர். இந்த அரசாங்கத்தின் காலத்தில் நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் நடைமுறைக்கு வரவே வராது. இப்பொழுது நடக்குங் காரியங்களைப் பார்க்கும்பொழுது இச்சட்டம் இப்பொழுதே மறைந்து விட்டது என்பதைப் பாடசாலை சிறுரும் இலகுவில் அறிந்துகொள்ளலாம். இப்பொழுதுள்ள தகநாயக்கா அரசாங்கம் நிலைத்து நின்றால்—நிலைத்து நிற்கும் என்பதிற் சந்தேகமில்லை—இதன் வாழ்வு முடியும் 1961 இன் முற்பகுதிக்கிடையில் தமிழ் மொழிச் சட்டம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிடும் எனலாம்.

## பிரதமர் சுற்றறிக்கை

"இந் நாட்டிலே தமிழருக்குப் பல குறைகளிருக்கின்றன. அவர்கள் பட்ட துன்பங்களை நீக்குவேன்" என மார்தட்டிப் பிரலாபித்த திரு. தகநாயக்கா இப்பொழுது உத்தியோக மொழி பற்றி ஒரு சுற்றறிக்கையினை விடுத்துள்ளர். இச் சுற்றறிக்கையின் விளைவு என்ன? இதனால் ஊகிக்கப்படவேண்டிய இல்லை, இல்லை, தெளிவாகப் புலப்படுகின்ற உண்மை யாது? இவ்வறிக்கையை வெளியிடுமாறு தூண்டியவர்கள் யாவர்? இவற்றைத் தமிழ் மக்கள் யாவரும் நன்கு அறிதல் வேண்டும். அறிந்தாற்றான் வெள்ளம்வருவதற்கு முன் அணை போலலாம்.

## ஒற்றுமை வேண்டும்

இப்பொழுது சிறு மழைதான் பெய்துளது இனித்தான் பெரு வெள்ளம் வரப்போகிறது. இந்த வெள்ளத்தைத் தடுப்பதற்குத் தமிழர் ஒற்றுமைப் பட்டு ஒரு கொடியின் கீழ் ஒரு குரலோடு போராடல் வேண்டும். தமிழியக்கத்திற் சேர்ந்து தமிழை அரசாங்க அலுவல்களிலும் வியாபார நிலையங்களிலும் வாழ வைத்தல் வேண்டும் இனியாகுதல் தமிழர் ஒன்று பட்டு அரசியற்றுறையிற் போராடுவார்களா? தமிழ் இயக்கமும் எல்லாத் தமிழர்களையும் அழைக்கிறது. உடனே ஆயிரக்கணக்கில் சேருங்கள்.

## நான்கு வகையினர்

வியாபார நிலையங்கள்யாவும் உத்தியோக மொழியாகிய சிங்களத்திலேயே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும், அரசாங்கமும் அவற்றுடன் சிங்களத்திலேயே தொடர்பு கொள்ளுமென்றும் தம் கையொப்பமிட்டு ஒரு சுற்றறிக்கையினை முதலமைச்சர் இப்பொழுது வெளிப்படுத்தி இருக்கிறார். அரசாங்கத்துடன் தொடர்பு கொளபவர்களை அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பொது மக்கள், தொழில்-வியாபார நிலையத்தினர் எனப் பிரிக்கலாம்.

## அரசாங்க உத்தியோகத்தர்கள்

அரசாங்கம் தன் உத்தியோகத்தர்களைச் சிங்களத்தில்—உத்தியோக மொழியில்-அலுவல்களைச் செய்யுமாறு கட்டளையிட்டது. தமிழர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களாயிருப்பதால் தமக்குத் தெரியாத மொழியில் அலுவல்களைச் செய்ய முடியாது எனத் தமிழ்த் தலைவர்களும் பொது மக்களும் இக்கட்டளையை எதிர்த்தார்கள். "சிங்களம் மட்டுமே" எனுஞ் சட்டம் நிறைவேற்றப்படுமுன் அரசாங்கத்திற் சேர்ந்த தமிழ் உத்தியோகத்தர்கள் ஆங்கிலத்திலே கடமை புரியலாம். இனிச்சேரும் தமிழருக்குச் சேரும் பொழுது சிங்களம் தெரிய வேண்டும் எனுங் கட்டுப்பாடில்லை. ஆனால இப்படிச் சேர்ந்தவர்கள் மூன்றாண்டுகளுக்குள் சிங்களப் பரீட்சையிற் சித்தியடையாவிடின் அவர்கள் உத்தியோகத்தினின்றும் விலக்கப்படுவரென்று அரசாங்கம் கூறிற்று. இதனையும் தமிழர் எதிர்த்துக் கொண்டேயிருக்கின்றனர்.

## அடிமைப் பழக்கம்

அரசாங்க உத்தியோகத்தரைப் பொறுத்தமட்டில் இதுதான் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை ஏனையோரைப் பொறுத்த அள[illegible] பார நிலையத்தினர்-அவரவர் எழுதும் மொழியில் மறுமொழி அனுப்புவதாகப் பாராளுமன்றத்தில் காலஞ்சென்ற முதலமைச்சர் கூறியுள்ளார். சிங்களத்தில் எழுதுவோருக்குச் சிங்களத்திலும், தமிழில் எழுதுவோருக்குத் தமிழிலும் அரசாங்கம் மறுமொழி அனுப்புங் கடப்பாட்டை உடையதாயிருந்தது. இந்த உண்மையையும், இதனால் தமிழருக்கிருந்த வாய்ப்பையும் அறியாமலும், அறிந்தும் உணர்ச்சியில்லாமலும் தமிழ் மக்களிற் பெரும்பாலோர் தமிழிலே அரசாங்கத்தோடு தொடர்பு வைக்காமல் ஆங்கிலத்திலேதான் தொடர்பு கொண்டனர் இந்தஅடிமைப் பழக்கத்தையும் தன்மானமற்ற செயலையும் ஒழித்து எல்லாத் தமிழர்களையும் அரசாங்கத்துடன் மட்டுமன்றி வியாபார நிலையங்கள் முதலியவற்றுடனும தமிழிலே தொடர்பு வைக்கச் செய்வதற்காகவே தமிழியக்கத்தை நடத்தி வருகிறோம்.

## அரசாங்கத்தின் அதிகார மமதை

இப்பொழுது அரசாங்கம் தான் செய்பவற்றை மட்டுமன்றிப் பிறர் செய்பவற்றையும் சிங்களத்திலே செய்யுமாறு வற்புறுத்தத் தொடங்கிவிட்டது; இதனால் தன் உத்தியோகத்தர்களை மட்டுமன்றிப் பிறரையுங் கட்டாயப்படுத்துகிறது. அரசாங்கம் தனக்குரிய அதிகாரத்தை நெறிமுறை கடந்து பயன்படுத்திப் பிறரையும் அடக்கி ஆளுதற்கு முயல்கிறது. "ஒரு நாட்டின சொந்த மொழிகளிலே என்னுடன் தொடர்புகொள்ள வேண்டாம், நான் சொல்லும் மொழி உங்களுக்குத் தெரியாதென்றாலும் அதிலே தான் தொடர்பு கொள்ள வேண்டும்" என்று உலகில் எந்த அரசாங்கமும் பிறரை இதுவரை கட்டாயப்படுத்தவில்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் இப்பொழுது நீதியொடுபடாத இந்தச் செயலில் இறங்கியுளது இது அரசாங்கத்தின் அதிகார மமதைக்கு மட்டுமன்றிப் பிறருடைய அடிப்படை உரிமைகளை அது சிறிதும் பொருட்படுத்தாமைக்கும் ஓர் எடுத்துககாட்டு எனலாம்.

இப்படிச் செய்வதால் வியாபார நிலையங்களில் இனித் தமிழருக்கு வேலை கிடையாமற் செய்து அவர்களுடைய இடங்களிலுஞ் சிங்களவரை நியமிக்கச் செய்யலாம் என்று அரசாங்கம் எண்ணுகிறது.

## இது சவால்

வியாபார நிலையங்கள் தமிழரின்றி வேலை செய்ய முடியாது என்பதை உணர்வதற்கும், தமிழருக்கு வேலை கொடுப்பதைத் தொடர்ந்து செய்வதற்குமாகவே தமிழ்ப் பெருமக்கள் யாவரையும் வியாபார நிலையங்களுடனும் தமிழிலே தொடர்பு கொள்ளுமாறு தமிழியக்கம் ஓயாமற் குரல் எழுப்பிக்கொண்டு வருகிறது.

இப்பொழுது அரசாங்கம் வருவித்துள்ள நிலைமை விரைவில் வரும் என்று தெரிந்தே நாம் வியாபார நிலையங்களுடனும் தமிழிலே தொடர்பு வைக்குமாறு தூண்டினோம். அரசாங்கம் இப்பொழுது தமிழருக்குத்தான் சவால் விடுத்துளது. எனவே, தமிழர்கள் திரண்டெழுந்து இனிமேலாகுதல் வியாபார நிலையங்களுடன் தமிழிலே தொடர்பு கொள்ளல் வேண்டும் என்றும் மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

## நிலைமை இன்னும் மோசமாகும்

அரசாங்கத்தின் இச் சுற்றறிக்கை தெளிவாகப் புலப்படுத்தும் உண்மை யாது? இனித் தமிழ் மக்களுக்கும் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பப்படும். ஆங்கிலத்தில் அரசாங்கத்துடன் தொடர்பு வைக்கும் தமிழர்களுக்கு மட்டுமன்றித் தமிழிலே தொடர்பு வைப்பவர்களுக்கும் சிங்களத்திலேதான் மறுமொழி அனுப்பப்படும் என்றும் அறிவித்தல் விரைவில் வெளியாகும். இதனை அடுத்து, 1960க் கடைசியில் பொது மக்கள் யாவரும் சிங்களத்திலேயே அரசாங்கத்துடன் தொடர்பு வைக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்படுவதும் எதிர்பார்க்கத்தக்கதே இக் கொள்கையைப் பகிரங்கமாக அறிவிக்காமல் சிறிது சிறிதாக நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சிகள் இப்பொழுதே நடைபெறுகின்றன எனக் காரியந் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

## புது வெறிக் குரல் எழுப்பபபடலாம

பிரதமர் தகநாயக்கா "பாசா பெரமுன (மொழி முன்னணி) என்ற மந்திரியானவர். மொழி வெறியின ஆற்றலை அறிந்தவர். அவர் அடுத்த தேர்தலில் அரசியல் ஆதிக்கத்தின் உச்சப்படியை அடைதற்கு விரும்பினால் '1961 இல் இலங்கை மக்கள் எல்லோருக்கும ஒரே யொரு உத்தியோக மொழி" என்ற கூக்குரலைப் பயன்படுத்த மாட்டார் என்று எப்படி நம்ப முடியும்?

## தூண்டுதல் காரணம்

மொழித்துறையிலே தமிழருக்குள்ள குறைகளை நீக்க முயல்பவர்போலத் தம்மைக் காட்டிக்கொண்ட முதலமைச்சர் இந்தச் சுற்றறிக்கையை இவ்வளவு விரைவில் வெளியிட்ட காரணம் யாது? தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். செய்தியறிந்த தொண்டர் ஒருவர் எழுதுகிறார்: "பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கையை அழிக்குமாறு சத்தியாக்கிரகம் செய்ய புத்த பிக்குகளை உற்சாகப்படுத்தி அனுப்பிவைத்த குழுவினரே-இலகுவில் ஏமாறும் திரு க. நடேசனைத் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினருக்கு மாறாக இந்துப் பல்கலைக் கழகததைக் கேட்குமாறு தூண்டிவிட்ட குழுவினரே-பிரதமர் தகநாயக்காவையும் இவ்வளவு விரைவில் மொழிக்

(5-ம் பக்கம் பார்க்க)


## ஆஸ்த்மாவால் அவதிப்படும் அன்பர்களுக்கு....

ஆஸ்த்மா என்ற நொய்வு ஏற்படுவதற்கு மார்ச்சளி, மூக்கடைப்பு, இருமல், காலநிலை, மூச்சடைப்பு, மூத்திரக் கோளாறுகள் என்பன போன்ற பல காரணங்கள் உண்டு காரணம் எதுவானாலும்........................

### ஆஸ்த்மடிக்கா

வியாதியைப் பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்திரவாதம்.

பாவித்த அன்பர்கள் கூறுவதைக் கேளுங்கள். வணக்கத்துக்குரிய பிதா தோமஸ் (டிரெகடர் ஜெனரல்) ரோசரி ஆஸ்ரமம் வாசவிளான் எழுதுகிறார்.

தங்களது ஆஸ்த்மடிக்காவைப் பாவித்ததில் என் வியாதியஸ்தர் பெரிதும் குணமடைந்துள்ளார் என்பதை—நன்றியுடன் தெரிவிக்கிறேன்—என் வாழ்த்துக்கள்—ஆஸ்த்மடிக்காவுக்கு

**Rev. Fr. B. A. Thomas (O. M. I.)**
Rosary Asthrama,
VASAVILAN.

எனக்கு வயது 50 க்கு மேலாகிறது—கொழும்பில்உள்ள பெரிய கம்பெனி ஒன்றில் சித்திர விபிகையாக Draughtsman) வேலை பார்க்கிறேன்.

சென்ற 20 வருட காலமாக ஆஸ்த்மா—மாரடைப்பு, மார்ச்சளி, இரவில் தூக்கமின்மை இவைகளால் பெரும் கஷ்டப்பட்டுள்ளேன். நான் காணாத டாக்டர்கள் இல்லை. எவ்வளவோ ஊசிகள் போட்டும் பலனில்லாமலிருந்த எனக்கு ஆஸ்த்மடிக்கா 3 பாட்டில்கள் பூரண குணமளித்துள்ளது. என்பதை கடவுள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.

எஸ். ஏ. தோமஸ்,
87, தெலங்கபாத ரோட்,
வத்தளை.

**S. A. Thomas,**
87, Telangapatha Road,
WATTALA.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, இருமல் இவைகளுக்கு ஆஸ்மடிக்கா ஒரு நவீன சஞ்சீவி.

3 அல்லது 4 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண குணமடையும் என்பது உத்திரவாதம்.

| | | |
|---|---|---|
| ஆஸ்த்மடிக்கா | சாதாரணம் | ரூ. 5/- |
| ஆஸ்த்மடிக்கா | ஸ்பெஷல் | ரூ. 15/- |

(மிக உபாதைத் தரக்கூடிய ஆஸ்த்மாவுக்கு)

வி. பி. பி. தனி

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

## மொடர்ன் கிளினிக்,

255, காலி ரோட்,
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்
பம்பலப்பிட்டிய
கொழும்பு—4.

கடுகண்ணாவையில் கிடைக்குமிடம்:

**டி. பி. குஞ்சிமூசா & கோ,**
கடுகண்ணாவை.

சம்மாந்துறையில் கிடைக்குமிடம்:

**எம். வெள்ளைத்தம்பி,**
புடவை வியாபாரம்,
3-ம் குறிச்சி,
சம்மாந்துறை.



## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி **1183**,
கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம்

குரு—பரன்

குளிரின நகையொடும் அணிநகையொளியெனக்
குவிழலை தளதளெனக்
குனிநுதலடியினில் இருகயல் புரள்செயக்
குழல்மலர் கமகமெனக்
கனிநடமிடுமவள் துடியிடை தனிலொரு
கவின்மணி வடமசையக்

காற்றில் மிதந்தெனை நோக்கி நடந்து
கனவிலுதித்திடுவாள்,
கவிதையெனும்பனி மலரிதழ் அழுதொடு
காட்சியளித்திடுவாள்.

● ● ●

மடநடை கிளிமொழி குயிலிசையிவைபுது
மதுவெறி தருபவை தான்
மயிலென அவள்நடம் இடுகையில் எழுமொலி
மனமயலுறுவது தான்
படபடவெனுமவள் உதடுகள் நிறைவுறு
பனிரசமவை கவி தான்

பருகிடநினைவுறில் எனையொருதடவை
பார்த்து நகைத்திடுவாள்
பார்வையிலாயிரம் இன்கதைகூறிப்
பரவசமாக்கிடுவாள்.

● ● ●

விழியதனொளியினில் எனதுயிர் பிடிபட
விறு விறு வெனுமுணர் வில்
மிகைபடு நடையொடு மவளெதிர் குறுகுவன்
மிகுமிகு மாசையொடு
நெழிவுறுமிடையது பொடிபடுவது மிக
நிச நிச மெனவிறுக

நெஞ்சொடணைத்தொரு கொஞ்சமளித்து
நிமிர்ந்திடுவாள் இதழில்
நிறைவுறு புதுமது பிறிதுமோர் தரமென
நெஞ்சு தவித்திடுமே!

வேறு

காலனோடு போராடி மடக்குவேன்
காயும் ஞாயிறை என்வசமாக்குவேன்
மூலமாய் உலகு ஆக்கும் பிரமனின்
முன்னிலே சென்று பந்தயம் கட்டியே,
"ஞாலமீது கலைஞன் கனவிலே
நர்த்தனமிடும் பாவையைப் போலொரு
கோலமங்கை படைக்கமுடியுமா?
கூறு" என்றிட உள்ளம் துடித்திடும்!

● ● ●

அண்டகோடி அனைத்தையும் ஓர்கையில்
ஆசையோடொரு பந்தெனத் தாங்கியே
கொண்டுவந்தவள் காலடிமீது
குதிக்கிறேன் இது சத்தியம்! சத்தியம்!!
கொண்டலேறிக் குதித்திதைச் சாதிப்பேன்
கொட்டும்மாரி எனக்கிறை பன்னீர்காண்
என்று கூறித் துடிக்கும் என் நெஞ்சம்அவ்
வேந்திழையாள் தரிசனத்தின்பின்.

# தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையில் தீவிர நடவடிக்கை எடுக்குமாறு தூண்டிவிட்டனர். இக் குழுவினர் பிரதமர் பண்டாரநாயகாவின் உயிருக்கு அழிவு தேடுவித்தனர். பிரதமர் தகநாயக்காவை மேலும் மேலும் நெருக்கி 1961க்குள் சிங்களத்தையே தமிழ்ப் பகுதிகளின் அரசாங்க அலுவலகங்களிலும் உத்தியோக மொழியாகவும் ஆக்குவிப்பார்கள் என்பதிலே சந்தேகமில்லை —இப்படி அந்தத் தொண்டர் தெரிவித்திருக்கிறார்.

இக் குழுவினருக்கும் திருவாளர் தகநாயக்காவுக்கும் "அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாகும்" எனும் பொருளுரையையும் "மறந்தும் பிறன் கேடு சூழற்க சூழின் அறஞ் சூழும் சூழ்ந்தவன்கேடு" எனும் பொய்யாமொழியினையும் நினைவூட்டுவது பொருத்தம் என்று தோன்றுகிறது.

தமிழ் மக்களே, திரு நடேசன் போலச் சூழ்ச்சிப்படுகுழியில் விழுந்து மங்காமலும், "ஓட்டார் பின் சென்று" கையேந்திப்பிச்சை கேட்காமலும், மானத்துடன் தமிழைப் போற்றித் தமிழிலே தங்கள் அலுவல்களைச் செய்யுமாறு கேட்க வேண்டியுள்ளது.

மானங்கெட்டு மரியாதையிழந்து உண்டிருந்து வாழுதற்கு உரைப்போரை "மருந்தோ மற்றூன் ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்தவிடத்து" என்று வள்ளுவரே வினவுகிறார்.

இங்கு கூறியவற்றின் உண்மையைச் சந்தேகிப்பவர்களுக்கு இந்த இதழைப் பேணி வைத்து 1961ஆம் ஆண்டிலே மீண்டும் படித்துப் பார்க்குமாறு கூறுகிறோம்.

### தமிழியக்கத்தில் சேருங்கள்

தமிழியக்கத்திலே சேர இன்னுந் தயக்கமா? உங்கள் பெயர், தொழில், வயது, முகவரி முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம், மே/பா, சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு. எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

(இடநெருக்கடிகாரணமாக தமிழியக்கத் தொண்டர்களின் பெயர்[illegible] வெளியிடப்படவில்லை. அடுத்த வாரம் அவை தொடர்ந்து தரப்படும்.)



அறிமுகப்படுத்துகிறோம்

# இலக்கியச் 'சிற்பி' சரவணபவன்

("காந்தன்")

இலங்கையில் ஒரு சஞ்சிகை வெளியிடுவது இலகுவான காரியமா? பகிரதப் பிரயத்தனம்; பலர் பல தடவைகளில் முயன்று தோல்வி கண்டுவிட்ட பணி. ஆனாலும், துடிக்கும் இலக்கிய ஆர்வத்தால், துணிவோடு இத்துறையில் இறங்கி, வெற்றிகரமாக ஒரு ஆண்டு காலம் இலக்கிய இதழ் ஒன்றை இளைஞர் ஒருவர் நடத்தி வருகிறார். இந்த இலக்கிய அன்பர் தான் 'கலைச் செல்வி' நிர்வாக ஆசிரியர் திரு சி. சரவணபவன் அவர் ஒரு பீ. ஏ. பட்டதாரி; யாழ்-திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணியாற்றுகின்றார்.

### தோற்றம்

சமாரான உயரம்; அதற்கேற்ற உடற்கட்டு; சிவந்த நிறம்; சிரித்த முகம்; மேல்நோக்கி வாரிவிடப்பட்ட அடர்த்தியான சிகை; வெள்ளை வேஷ்டி; நாஷனல் சேட்டுக்குமேலே கழுத்தைச் சுற்றிப் போடப்பட்ட சால்வை; மூக்குக் கண்ணாடி; கையில் ஒரு பைல்-இப்படித் தோற்றமளிக்கும் இவரை வட பகுதியில் நடைபெறும் இலக்கிய விழாக்களில் எவருமே காணத்தவறியிருக்க மாட்டார்கள். ஏனையவர்களுக்கு 'சிற்பி' என்ற புனைப் பெயர், எழுத்துலகத்தில் தெரியாமலிருக்க முடியாது.

### இளம் பராயம்

இவர் சிவசுப்பிரமணிய ஐயர்-சௌந்தர்ராம்பாள் தம்பதிகளின் மகன்; சொந்த ஊர் கந்தரோடை. பிறந்த தேதி 28-2-1933. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி-இவர் பயின்ற கல்லூரிகள். சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் சேருமுன் இரண்டாண்டுகள் ஒரு குமாஸ்தாவாகவும் இவர் இருந்திருக்கிறார்.

### எழுத்து ஆர்வம்

மாணவராயிருக்கும் போதே திரு சரவணபவன் இலக்கியத் துறையில் இறங்கிவிட்டார். பிறகு சென்னை கிறிஸ்தவக் கல்லூரி செலையூர் மன்றத்தார் வெளியிட்ட 'இளந் தமிழன்' இதழின் ஆசிரியராகவும் கடமைபுரிந்தார். இளமையில் எழுத்துத் துறையில் ஈடுபட்டதுமட்டுமல்ல, தம் திறமைக்குச் சான்றாக பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார். ஔவை தமிழ்ச் சங்கத்தார் நடத்திய கட்டுரைப் போட்டியில் இவர் பரிசு பெற்றார். இலங்கையில் 'உதயம்' சிறுகதைப் போட்டியிலும் கலந்துகொண்டு முதற் பரிசு பெற்றவர் திரு 'சிற்பி.'

### படைப்புகள்

இவர் 1956 முதல் தான் தீவிரமாக எழுதிவருகிறார். இதுவரை 30 சிறு கதைகள், 40க்கு மேற்பட்ட கட்டுரைகள், 15 கவிதைகள் வரை படைத்துள்ளார். 'உனக்காக, கண்ணே!' என்ற தொடர் கதையையும் இவர் இப்போது எழுதி வருவதுதெரிந்ததே.

'அகிலனை'த் தம் ஆதர்ச எழுத்தாளராக மதிக்கும் திரு சரவணபவன் தமக்கே [illegible]ணியில் சிறுகதைகளைச் சிருட்டித்து, கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டுவதில் வல்லவர். "ஏன் படைத்தாய் இறைவா?" எனக் கேட்கும் மஞ்சுளாவின் குமுறல் எத்தனையோ பேரின் இதயத்தைத் தொட்டது. "பிறந்த மண்" "அண்ணு," "அழுதைப் பொழியும் நிலவு,"—இவரின் சிறந்த சிருட்டிகள். சிறு கதைகளில் இவர் கையாழுவது கனிரென்ற கம்பீரமான நடை. அதில் குத்தல் இருக்காது. குழைவும் தெளிவும் நெளியும்.

'நீதி வென்றது', 'பாசம்' என்ற இரு நாடகங்களையும் எழுதி அரங்கேற்றியுள்ளார்.

### கட்டுரைகள்

கட்டுரைகளை அளவில் அடக்கமாக, ஆணித்தரமான கருத்துக்களைப்புகுத்தி ஆவேசமாக எழுதுவார். 'கலைச் செல்வி' தலையங்கங்கள் அதற்குச் சான்று 'பாபு வந்தாராம்!' படித்துவிட்டு அது பத்திரிகைத் தலையங்கமா அல்லது குடாநாட்டின் குமுறலா? எனப் பலர் கேட்டுக்கொண்டனர்!

'ஈழத்துச் சிறு கதைகள்' தொகுப்பை வெளியிட்டது. இவர் கொண்டுள்ள இலக்கிய அக்கறைக்கு ஒரு பெரும் உதாரணம்.

### பலருக்கு 'அண்ணு'

இலக்கியம் படைப்பது மட்டுமல்ல, புதிய எழுத்தாளர்களையும் சிருட்டிப்பதில் முனைந்துள்ளார் சிற்பி-கலைச் செல்வி மூலம் வடக்கிலுள்ள பல கல்லூரிகளில், மாணவர்கள் தம்மை எழுத்துலகில் வளர்த்துவிடும் "அண்ணு" வாக இவரை மதிக்கிறார்கள்.

அகிலன், கி. வா. ஜ, மு. வ, ஜெக சிற்பியன், ஜெயகாந்தன், சு. இராசநாயகன், உதயணன், முருகையன், முடியரசன் ஆகியோரின் படைப்புகள் இவர் விரும்புபவை.

பிடித்தமானவை: கர்நாடக சங்கீதம், சுதந்திரன் குமுதம் ஆசிரியத் தலையங்கங்கள்.

வெறுப்பவை: துப்பறியும் நாவல்கள், தற்புகழ்ச்சி.

# பிரதமருக்கு கண்டனக்கடிதம்

## முஸ்லிம் வர்த்தகர் சங்கம்

வர்த்தக ஸ்தாபனங்கள் அரசாங்கத்தோடு வைத்திருக்கும் கடிதத் தொடர்புகளைச் சிங்களத்தில் மாத்திரம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் சமீபத்தில் வர்த்தக ஸ்தாபனங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதை வன்மையாகக் கண்டித்திருக்கிறது மட்டக்களப்பு இலங்கை முஸ்லிம் வர்த்தகர் சங்கம்.

சங்கம் பிரதமர் திரு. தஹநாயகாவுக்குத் தனது கண்டனத்தை ஒரு கடித மூலம் தெரிவித்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:—

"இன்றைய சூழ் நிலையில் உங்கள் நடவடிக்கை வர்த்தக ஸ்தாபனங்களை மோசமான நிலைக்கு உட்படுத்திவிடும்; நாட்டு வர்த்தகத்தை மட்டுமல்லாமல் பொது மக்களையும் அது பாதிக்கக் கூடும். வர்த்தகத் துறையின் நலனுக்கு எதிராக நீங்கள் முட்டுக் கட்டை போடுவது கூடாது. புனராலோசனை செய்யுங்கள்"— இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.


தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

**நேத்திர லோக**

உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

**நேத்திரலோக தைலம்**

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை தூண்டுகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

**டபிள்யு. கே. ஜினதாஸ,**
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்ரேட், புறக்கோட்டை
கொழும்பு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# சப்பித் துப்பிய கரும்பு சக்கைகூட ஜப்பானில் வண்ணப் பொம்மையாகிறது

## ஈழத்தில் கைத்திறனும் மூலப் பொருளும் பெருமளவில் இருந்தும் தொழில் வளரவில்லையே!

## திட்டமும் அதிக நாட்டமும் கூட்டு முயற்சியும் இல்லாததே முக்கிய காரணம்

ஒரு நாட்டில் பெரிய தொழிற்சாலைகள் இருப்பதால் மட்டும் அது பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடைந்து விட முடியாது. கூடவே சிறு கைத் தொழில்களும் குடிசைத் தொழில்களும் இருந்தால்தான் பொருளாதாரம் முன்னேற்றமடையக் கூடும். பெரிய கனரகத் தொழிற்சாலைகளில் எல்லோருக்கும் வேலை கிடைக்க முடியாது. தொழில் நுட்பமும் நுணுக்கமும் தெரிந்தவர்களுக்கே வேலை கிடைக்கும். சிறு தொழில்கள் நிறுவினல் சாதாரணமாக விஷயம் தெரியாதவர்கள் கூட அங்கு வேலை பெற்று தொழிற் கருவிகளையும் இயந்திரங்களையும் அவை வேலை செய்யும் விதத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

### ஜப்பான்

ஜப்பான் முழுக்க முழுக்கச் சிறு கைத்தொழில்களையே நம்பித் தன் பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டது. அதன் பிறகுதான் அது ஒரு பெரிய உலக வல்லரசாக முடிந்தது. சாதாரணமாகச் சொல்வார்கள்: நாம் கரும்பைக் கடித்து சாப்பிட்டுவிட்டு அதன் சக்கையைக் கீழே போட்டு விடுகிறோம். ஜப்பானில் அந்தச் சக்கைகளையெல்லாம் ஒன்று சேர்த்து, இரண்டு மூன்று வர்ணம் தீட்டி விளையாட்டுப் பொம்மைகள் செய்து உலகச் சந்தையில் உலவவிடுகிறார்கள். இதைப் போலவேதான் ஜப்பானில் பல சிறு கைத் தொழில்கள், ஒன்றுக்கும் உபயோகமில்லை என்று எறிந்து விடும் பொருள்களிலிருந்து தோன்றி வளர்ந்து பொருளாதாரத்தை வளப்படுத்துகின்றன.

### சுவிட்சர்லாந்து

சுவிட்சர்லாந்தும் சிறு கைத்தொழில்களைப் பெரிதும் நம்பியே தன் பொருளாதாரத்தை வளர்த்து வருகிறது. அங்கே தழைத்து ஓங்கிவரும் சிறு கைத் தொழில்களில் மிகவும் முக்கியமானது கடியாரம் செய்தலாகும். சுவிட்சர்லாந்தில் வீட்டிற்கு வீடு இத் தொழிலில் ஈடுபட்டுள்ளது. கடியாரத்திற்கு வேண்டிய பாகங்களைக் குடிசைத் தொழில் போல் வீடுகளில் தயாரித்துக் கொடுப்பார்கள். பெரிய கடியாரத் தொழிற்சாலைகள் அவற்றைக் கொண்டு கடியாரங்களை உற்பத்தி செய்து, உலக முழுவதும் தங்கள் பெயரை நிலை நாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

### டென்மார்க்

டென்மார்க்கில் பால் பண்ணை ஒரு பெரிய தொழிலாகும். பெரும் இயந்திரத் தொழிற்சாலைகளும் இந்தத் தொழிலிடம் போட்டி போட முடியவில்லை அங்கு.

**அ. விஜயன் விக்டோரியா பி. ஏ.**

பால் பண்ணை சம்பந்தப்பட்ட பல சிறு தொழில்கள் டென்மார்க்கில் செழித்தோங்கி வளர்ந்திருக்கின்றன. உலகத்தில் பால் சம்பந்தப்பட்ட தொழிலில் டென்மார்க்குடன் யாரும் போட்டியிட முடியாது.

### மேலை நாடுகளில் பொருளாதார வளம்

இது போல் மேலை நாடுகளில் ஒவ்வொரு நாட்டிலும் சிறு சிறு கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய வசதியும், வாய்ப்பும், மூலதனமும், நடத்துவதற்குத் தேவையான தொழில் நிபுணர்களும் பெரிய இயந்திர சாதனங்களும் இல்லாத காரணத்தால் அவர்கள் சோம்பிக்கிடக்காமல், தங்களாலியன்ற அளவில் சிறு தொழில்களை ஆரம்பித்துப் பெருக்கி அதன் மூலமே பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளால் கிடைக்கக் கூடிய பொருளாதார வளத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

### திட்டம் வேண்டும்

நம் நாட்டில் ஏராளமான சிறு கைத்தொழில்களும் குடிசைத் தொழில்களும் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களும் அறிவாற்றலும் இருந்தாலும், இத் தொழில்கள் ஆங்காங்கு முன்னேறியிருந்தாலும், திட்டமான முறையிலே, இலாபம் தரக் கூடிய வகையிலே, உலகச் சந்தையிலே போட்டியிடக் கூடிய வழியிலே இத் தொழில்கள் முன்னேற்றமடையவில்லை. சிறு குடிசைத் தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் பல, மேல் நாடுகளில் ஏராளமாக வாங்கப்படுகின்றன என்னும் செய்தியை நாம் புதினப் பத்திரிகைகளில் படிக்கும் போது இத் தொழில்களை நல்ல முறையில் திட்டமிட்டு வளர்த்தால் நாம் எவ்வளவு தூரம் நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்க முடியும் என்பது தெற்றென விளங்கும். அது மட்டுமல்ல இத்தகைய சிறு தொழில்களை கிராமங்களில் ஊக்குவிப்பதால் வேலையற்ற பல்லாயிரக்கணக்கான கிராமவாசிகள் வயிற்றில் பால் வார்த்து அவர்களது பொருளாதார வாழ்க்கையை வளம்படுத்தவும் முடியும்.

### சிறு கைத்தொழில்கள்

சிறு கைத்தொழில் என்பது சிறிய இயந்திரங்களின் உதவியைக் கொண்டு, மனிதர்களின் கை நுட்பத்தினால் எளிதில் செய்யக்கூடிய தொழிலாகும். புட்டிகளுக்கு வேண்டிய கார்க்குகள் அல்லது உலோகத்தால் செய்யப்பட்ட மேல் மூடிகள் செய்வது. ஆணிகள், தீக்குச்சிகள் செய்வது, செருப்புத் தோல் பைகள் செய்தல், அட்டைப் பெட்டிகள் செய்தல், மட்பாண்டங்கள், உயர்ந்த ரக ஜாடிகள், கூஜாக்கள் வனைதல், மரம் சம்பந்தப்பட்ட தொழில்கள், பூவேலைகள் செய்தல், கூடை பாய் முடைதல், கயிறு திரித்தல, பிரம்பில் சுளைவ முதலியன செய்தல், பித்தளை செம்பு, தகரம் முதலியவற்றைக் கொண்டு பாத்திரங்கள் செய்தல்முதலிய எண்ணற்ற தொழில்கள் சிறு கைத் தொழில்களாகக் கருதப்படுகின்றன.

### முன்னேற்றம் இல்லாததன் காரணம்

இவற்றில் தொழில் நுட்பம் தெரிந்து இலாபகரமாகச் செய்யத் தெரியாமலும், பெரிய இடத்து தொழிலதிபர்களின் போட்டியாலும், தேவையான சிறிய இயந்திரங்கள் கிடைக்காததாலும் சிறு தொழில்கள் இலாபகரமாக முன்னேற்றமடையவில்லை. அரசாங்கத்தின் ஆதரவுடனும் கூட்டுறவு இயக்க அடிப்படையிலும் சிறு தொழில்கள் கிராமங்களில் நிறுவுவதற்கான வழிவகைகளை ஆராயவேண்டும். நம் நாட்டுக் கிராமங்களில் சிறு தொழில்களை நிறுவப் பல வசதிகளும் மூலப் பொருள்களும் நிறையக் கிடைக்கின்றன. அவற்றையெல்லாம் பயன் படுத்தி ஆங்காங்கே தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி கிராம மக்கள் தாங்களாகவே பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணலாம். பிறருடைய தயவை எதிர்பாராமல் கிராமப் புறங்களிலுள்ளோர் மானமாகத் தங்கள் வாழ்க்கையை நடாத்துவதற்கு சிறு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கொள்கை தலை சிறந்த பொருளாதாரக் கொள்கையாகும்.

### என்ன செய்யலாம்?

ஈழ நாட்டில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு நூற்றுக் கணக்கான சிறு தொழில்களை நடாத்தலாம். சிறு கைத்தொழில்களை முன்னேற்றுவித்தல் மூலம் இந் நாட்டுக் கிராமப் புறங்களில் வாழும் எண்ணற்ற ஏழை மக்களுக்குப் புனர் வாழ்வு அளிக்கலாம் என்பதும் கூட நினைவிருக்கவேண்டும். அப்படியானால் நாம் செய்ய வேண்டுவது யாது? எடுத்ததற்கெல்லாம் அரசாங்க உதவியை எதிர்பார்ப்பதென்பது அவ்வளவு நல்லதன்று. சிறு கைத்தொழில்களை நிறுவுவதற்கு அரசினர் உதவ முன்வர வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளக் கூடியதொன்றெனினும் அந்தந்தக் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து அரசாங்க உதவியை எதிர்பார்க்காமல், தங்கள் சொந்த மூலதனத்தையும் மூளையையும் கொண்டு, அந்தந்தக் கிராமத்தில் கிடைக்கக் கூடிய இயற்கை வசதிகளைக் கொண்டு சிறு சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்.

### மூலதனமும் திட்டமும்

சுமார் ஐயாயிரம் ரூபா மூலதனம் இருந்தால் இத்தகைய கைத்தொழில்களை ஆரம்பித்துவிடலாம். ஆங்காங்கு வேண்டியதும் தேவைப்படுவதுமான பொருள்கள், கருவிகள் எவையென்று முதலில் மதிப்பீடு செய்துகொண்டு, பின்னர், அத்தகைய பொருள்களைச் செய்ய வசதிகள் அக்கிராமங்களை உள்ளடக்கிய மாவட்டத்திலேயே கிடைக்கின்றனவா என்று ஆராய்ந்து, பின்னர் அந்தந்தத் தொழில்களைத் துவக்க வேண்டும். அப்படி ஆரம்பிக்கும் போது ஒரே தொழிலைப் பல கிராமங்களைச் சேர்ந்தவர்களும் செய்தல் கூடாது.

### போட்டி கூடாது

உதாரணமாக பல கிராமங்களடங்கிய ஒரு மாவட்டத்தில் 'பிரஷ்' செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைத்தால், எல்லோரும் பிரஷ் செய்ய ஆரம்பித்துவிட்டால் அவ்வளவு பிரஷ்களும் விற்பனையாவது கடினமே. ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் பிரஷ் செய்யலாம்; மற்றொரு கிராமத்தைச் சேர்ந்தவர் வர்ணம் பூசுவதற்கென உயர்ந்த ரக பிரஷ்கள் செய்யலாம்; மற்றொரு கிராமத்திலுள்ளோர் தட்டெழுத்து இயந்திரம், கண்ணாடிக் கருவிகள், சுடுநீர்ப் புட்டி முதலியவற்றைக் கழுவுவதற்குப் பயன்படும பிரஷ்கள் செய்யலாம். இப்படிப் பலவிதமாகப் பிரித்துக் கொண்டு சிறு கைத் தொழில்களை நிறுவி, தங்களுக்குள் ஓர் உடன்பாட்டுடன் தொழில் புரிந்தால் உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்வது எளிதாக இருக்கும்.


### பனம் பொருட்கள்

மற்றொரு உதாரணத்தையும் நோக்குவோம். ஈழ நாட்டில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்றன. பனையை ஒரு கற்பகத் தரு என்று சொல்வார்கள். பனை மரத்தில் தேவைக்கு உதவாத பாகம் எதுவுமில்லை. பனை மரங்கள் நிறையவிருக்கும் கிராமப்புறங்களிலுள்ளோர் அம் மரங்களிலிருந்து கிடைப்பனவற்றைக் கொண்டு சிறந்த இலாபகரமான சிறு தொழில்களைச் செய்யலாம் கருப்புக்கட்டி காய்ச்சுதல், பனாட்டு செய்தல் மற்றும் பல தின் பண்டங்களைச் செய்தல் என்பன ஒருபுறமிருக்க, பனை மரத்திலிருந்து கிடைக்கும் பனை யோலையிலிருந்து பிறநாட்டார் விரும்பி வாங்கும் மணவுக்கு, கணவைக் கவரு மனவுக்கு வடிவான பல பொருள்களைச் செய்யலாம்.

இவற்றையெல்லாம் எல்லாக் கிராமங்களிலுள்ளவர்களும் ஒரே மாதிரியாகச்

(9-ம் பக்கம் பார்க்க)

கெம்பீரமாக தோற்றமளிக்கவேண்டுமா?
அணியுங்கள்
மௌலானு சாரங்களை
இலங்கையிலும் அரை நூற்றாண்டுக்கு மேல் அழியாப் புகழ்பெற்று இன்னமும் எழிலுடன் ஒப்புயர்வற்று சிறந்தோங்குவன
மௌலானு சாரங்கள்



MOULANA (Ceylon) Ltd.
மௌலானு (சிலோன்) லிமிட்.,
இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இருளடைந்து கிடக்கிறது நாடகக்கலை!

## ஏன் இந்த நிலை?

### ஆர்வம் போதாது—பணபலம் குறைவு மேடை, மண்டப வசதி இல்லை

### இலங்கை கலைக் கழகம் முயன்ருல் நிலைமையை நிச்சயம் சீர்செய்ய முடியும்

இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்கள் வாழும் இந்த நாட்டிலே 25 நாடகம் வேண்டாம். ஒன்றே ஒன்று தானும் 'இதோ ஈழத்தின் நாடகம்' என்று பெருமையாக எடுத்துச் சொல்ல, நடித்துக் காட்ட நம்மிடம் உண்டா? ஈழம் என்ன கலை வாடை காணுத பாலைவனமா? ஏன் இந்த நிலை?

கலையின் ஒரு பிரிவுதான் நாடகம். காவியம், ஓவியம், சிற்பம்போன்ற லளித கலைகளில் ஒன்ருன பரதக் கலையிலிருந்து கிளைத்தது நாடகம்.

#### காவியமும் ஓவியமும்

காவியக் கலைக்கு ஒருசில கவிராயர்கள் கைகொடுத்து வருகிருர்கள். எப்படியோ பிழைத்திருக்கிறது அது ஓவியக் கலை இன்று மறந்த கலையாகவே ஆகிவிட்டது. கோடுகளையும் புள்ளிகளையும் போட்டுவிட்டு ஓவியம் என்று காட்டுகிருர்கள். முண்டச் சித்திரங்களையும் அரைகுறை நிர்வாணப் படங்களையும் போட்டுவிட்டு அவை மறுமலர்ச்சிச் சித்திரங்கள் என்று காட்டுகிருர்கள். வயனல்வென்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் சித்திரங்களைப் பார்த்தால் இந்த உண்மை தெரியவரும்.

#### சிற்பம்

சிற்பக் கலையைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. எத்தனையோ கற்கோயில்களையும் எண்ணற்ற எழில் சிற்பங்களையும் வடித்த தமிழன் நாட்டிலே—தலைநகரிலே, மரீனு பீச்சிலே காந்திச் சிலை என்று சொல்லி குரங்குச் சிலை ஒன்றை வைத்திருக்கிருர்கள். இங்கே, பாராளுமன்றத்துக்கு முன்னுல் காலஞ்சென்ற பிரதமர் டி. எஸ். சேனநாயகாவின் பெயரில் பூதச் சிலை ஒன்றை வைத்திருக்கிருர்கள். சிற்பக் கலையின் துரதிர்ஷ்டம் இது.

#### பரதம்

பரதக் கலையிலே ஆடல், பாடல் நாடகம் மூன்றும் அடங்கும். ஆடலும் பாடலும் உள்ள அளவுக்குக்கூட இந்த நாட்டிலே இன்று இல்லை நாடகம். ஏன்? அதற்கு விடை காணுவதற்கு முன்னுல் நாடகம் நமக்கு அவசியந்தானு என்பதைப் பார்க்க வேண்டும்.

#### ஏன் நாடகம்?

நாடகத்தை எல்லோரும் பொழுதுபோக்கு சாதனம் என்று சொல்லுகிருர்கள். உண்மைதான். ஆனுல் அதன் பயன் அதற்கு மேலும் உண்டு. மக்களின் அறியாமையைப் போக்குவதற்கு நாடகத்தைப் போன்ற சிறந்ததொரு சாதனம் வேறில்லை. இன்னும், மக்கள் பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமுதாய சீர்திருத்தத்துக்கும்கூட நாடகத்தைப் போன்ற நல்லதோர் சாதனம் வேறு இல்லை இன்று.

நாடகத்திலே ஓவியம் உண்டு. காவியம் உண்டு, சிற்பம் உண்டு. ஆடல் உண்டு. பாடல் உண்டு. எல்லாமே இருப்பதனுல் பார்ப்பவர்கள் தத்தமக்கு வேண்டியதை அனுபவிக்கமுடிகிறது. ஆக, எல்லாவற்றையும் ரஸிக்கக் கூடிய ஒருவரும், அதே வேளையில் உதாரணமாக, வேறு எதுவும் வேண்டாம் நல்ல 'டான்ஸ்' இருந்தாலே போதும் என்று எண்ணுபவரும்கூட நாடகத்தைப் பார்த்து அனுபவிக்கலாம். ஏனெனில் அவருக்கு வேண்டிய 'டான்ஸ்' நாடகத்தில் உண்டு. மற்ற அம்சங்களை தனியாகவும் கூட்டாகவும் விரும்புபவர்கள் நிலையும்இப்படித்தான். எனவே நாடகங்கள் ஏன் என்ற கேள்வி எழ நியாயமில்லை.

**கே. கே. இரத்தினசிங்கம்**

(1) நாட்டுக் கூத்து (2) வானொலி நாடகம் (3) மேடை நாடகம் (4) படிக்கும் நாடகம் என நான்கு பிரிவாக நம்மிடம் உண்டு நாடகம்.

#### நாட்டுக் கூத்து

ஆட்டமும் அணியும் பாட்டும் நாட்டுக் கூத்திலே முக்கியமாகக் கவனிக்கப்படுவன. கிராமப்புறங்களிலே நாட்டுக்கூத்துகள் பேணி வளர்க்கப்பட்டு வருகின்றன வட மோடி, தென் மோடி என்று இரண்டு வகைகள் நாட்டுக்கூத்திலே. இரண்டுக்குமே கிராக்கி தான் இங்கு.

#### வானொலி நாடகம்

வானொலி நாடகம் ஒலியை மூலதனமாகக் கொண்டது. வளர்ச்சி குன்றிவிட்டது. தளர்ச்சி கண்டுவிட்டது ஏன் என்று கேட்டால் 'கலை வளர்க்க நாம் இங்கு இல்லை. புதியவர்களுக்கு எல்லாம் பயிற்சி அளிப்பது நமது பொறுப்பு அல்ல. பழகியவர்களுக்குத் தான் கலையகத்திலே இடம். திறமை உள்ளவர்களை வைத்தே நிகழ்ச்சிகளை நடத்துகிறேம்' என்று உரியவர்களிடமிருந்து பதில் வருகிறது. திறமை உள்ளவர்கள் என்று அவர்கள் கொள்பவர்களால வானொலி நாடகங்கள் சிறப்படையக் காணேமே! கலை வளர்க்க அவர்கள் தயாராயில்லை என்று வெளிப்படையாகச் சொல்லும்போது என்ன செய்யலாம்?

#### படிக்கும் நாடகம்

[illegible] இருக்கிறது. [illegible] உணர்ச்சி மிக முக்கியமாக [illegible] வேண்டிக்கிடக்கிறது. படிப்பவர் உள்ளத்தை இறுகப் பற்றிக் கொண்டு தன்னேடு இழுத்துச் செல்லத்தக்க உணர்ச்சிமயமான சம்பவச்சேர்க்கை, அல்லது கதைப் போக்கு தேவை.

#### மேடை நாடகம்

மேடை நாடகத்தில் நடிப்புத்தான் முதலில் வைத்து எண்ணப்படுவது. நாடகம் அல்லது டிராமா (Drama) என்ற சொல்லுக்கு பொருள் கொடுத்த மொழி கிரேக்கம். அந்த மொழி வழி நின்று பார்த்தால் A doing is a drama. அதாவது (மேடையில்) ஏதாவது ஒன்று செய்யப்படுமானுல் அல்லது தொழில்படுத்தப்படுமானுல் அது நாடகம் என்று ஆகும்.

#### நாடகம் எப்படி உருவாகிறது

ஒரு பையன், ஒரு புத்தகக் கட்டு, ஒரு மேசை—இவை நாடகம் அல்ல. இரண்டு பையன்கள், ஒரு புத்தகக் கட்டு; ஒரு மேசை—இவை நாடகம். வேறுபாடு இங்கே தான் இருக்கிறது. இரண்டு பையன்கள் சேரும்போது மனித சுபாவம் செயல்படுகிறது. மனித சுபாவம் செயல்படுவதிலிருந்துதான் நாடகம் உருப்பெறுகிறது.

ஒரு பையன் இருந்தாலும் மனித சுபாவம் செயல்பட முடியும் என்பது ஒரு பகுதியாரின் வாதம். அதுவல்ல இங்கு முக்கியம். Human nature in action is the material out of which drama springs. அதாவது மனிதசுபாவம் செயல்படும்போதுதான் நாடகம் உருவாகிறது—இந்த உண்மையைத்தான் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.

#### இன்பியல் நாடகவகைகள்

நாடகத்தை இன்பியல் நாடகம் (Comedy) என்றும் துன்பியல் நாடகம் (Tragedy) என்றும் இரு பெரும் பிரிவுகளாக மேல்நாட்டவர்கள் வகுத்துள்ளார்கள். இன்பியல் நாடகங்களிலே ஒன்பது வகைகள்: (Farce, Melodrama, Serious comedy, Heroic comedy, Romantic comedy, Comedy of manners, Sentimental Comedy, Comedy of intrigue Light comedy.

#### துன்பியல் நாடகங்கள்

துன்பியல் நாடகங்களிலே 4 வகைகள்: Ancient classic tragedy, Neoclassic tragedy, Elizabethian tragedy, Romantic tragedy. இவை ஒவ்வொன்றுக்குமிடையே மிக நுண்ணிய வேறுபாடுகள்

இன்பியலும் துன்பியலும் கலந்த நாடகத்தை Tragicomedy என்று அழைக்கிருர்கள். இவை தவிர நாடகங்களை இன்னும் சுமார் 25 வகைகளாக மேல்நாட்டவர்கள் நாடகங்களை வகுத்து வைத்திருக்கிருர்கள். நாம்...?

#### வெற்றிக்கு அவசியம் வேண்டியவை

மேடை நாடகம் வெற்றி பெற வேண்டுமானுல் நாடகக் கதை(Story), குணசித்திர உருவகம் (Character), சந்தர்ப்ப சூழ்நிலைப் புனைவு (Situation), குறிக்கோள் (Theme), உணர்ச்சி நிலை (Mood)—இந்த ஐந்திலும் அதிமுக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கதை நல்ல கருவை (Plot) வைத்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கதையை மேடையில் விரிக்கும் பாத்திரம் பெருமளவில் செய்கையை (Action) துணைகொள்ள வேண்டும். செய்கைத் துணையோடு கதை விரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் நெருக்கடிகள் (Crisis) தோன்றச் செய்ய வேண்டும். அடுத்து என்ன நடக்குமோ என்ற ஐயப்பாடும் ஆவலும் (Suspense) பார்ப்பவர்களுக்கு ஏற்படும் வண்ணம் செய்ய வேண்டும்.

அதேவேளையில் நாடகத்தின் குறிக்கோள் தடம் புரண்டுபோகாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும். குறிக்கோளோடு பல பெரும[illegible]

(10ம் பக்கம் பார்க்க)

# திருக்குறள்-சிங்கள மொழி பெயர்ப்பு

## சாகித்திய மண்டலத்துக்குத் தமிழ் மறைக் கழக வேண்டுகோள்

"திருக்குறளைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பிக்க இலங்கைச் சாகித்திய மண்டலம் முடிவு செய்திருப்பதை எமது தமிழ் மறைக் கழகம் வரவேற்கிறது; எமது கழகம் திருக்குறளைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பிக்க முன்னரே ஒழுங்கு செய்துள்ளது; மொழி பெயர்ப்பு வேலையும் தொடங்கிவிட்டது."

என்று தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பத்திரிகைகளுக்கு வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறுகிருர்.

கலாசார அலுவற் பணிப்பாளருக்குத் தமிழ் மறைக் கழகம் அனுப்பிய கடிதம் பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது:-

#### மொழி பெயர்ப்பு

"எமது தமிழ்மறைக் கழகம் சென்ற சில ஆண்டுகளாகத் திருக்குறளைச் சிங்களத்திலே மொழி பெயர்ப்பிக்க முயன்று வந்துளது. எமது வேண்டுகோட்படி அருட்டிரு தம்மரத்தின தேரோ திருக்குறளை மொழி பெயர்த்துத் தருதற்கு உடன்பட்டார். அவர் இப்பொழுது இவ்வேலையில் ஈடுபட்டுளர். அடுத்த ஆண்டில் (1960) மொழி பெயர்ப்பை முடித்துத் தருவதாகவும் அவர் எமக்கு எழுதியிருக்கிருர். இம் மொழி பெயர்ப்பாளர் முன்னர் மணிமேகலையையும் சிலப்பதிகாரத்தையும் மொழிபெயர்த்துளர். எனவே திருக்குறளை மொழி பெயர்த்தற்கும் இவர் மிகுந்த தகுதியுடையவர் என்பதை யாவரும் ஒப்புவர்.

#### சாகித்திய மண்டலம் செய்யலாம்

எனவே இம் மொழி பெயர்ப்பைச் சாகித்திய மண்டலம் ஏற்றுப் பதிப்பித்தல் நன்று. அன்றேல் இதனை வெளியிடுதற்கு எமது கழகத்துக்குப் பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேம். அடுத்த ஆண்டு யூன் திங்களில் நடைபெறும் எமது கழகத்தின் எட்டாவது திருக்குறள் மாநாட்டில் இம்மொழி பெயர்ப்பு நூலை வெளியிடுதற்கும், மொழி பெயர்ப்பாளரைப் போற்றுதற்கும் யாம் திட்டமிட்டுளேம். இலங்கைச் சாகித்திய மண்டலம் இம்மொழி பெயர்ப்பை அச்சிடுவித்தாலும் அதனை எமது திருக்குறள் மாநாட்டில் வெளியிட்டு ஆசிரியரை போற்றுதற்கும் இசைகிறேம்.

#### கழகப் பணி

திருக்குறளை உலகெங்கும் பரப்புதற்கும், உலகத்து மொழிகள் யாவற்றிலும் அதனை மொழி பெயர்ப்பித்தற்கும் எமது கழகம் சென்ற பல ஆண்டுகளாக முயன்று வருகிறதென்பதையும், ஆண்டு தோறும் திருக்குறள் மாநாடுகளையும் தமிழ்மறைத் தேர்வுகளையும நடத்தி வருகிற தென்பதையும, திருக்குறள் பற்றி இரு நூல்களை வெளியிட்டுளள தென்பதையும் உங்களுக்கு அறிவிக்க விரும்புகறேம.

இம்மொழி பெயர்ப்பைப் பற்றிச் சாகித்திய மண்டலம நினைப்பதற்கு முன்னரே இத்துறையில் சில ஆண்டுகளாக முயன்று [illegible] கழகத்தை [illegible] நீங்கள் பின்பற்ற [illegible]கள் என்றெண்ணுகிறேம்."


**ஆங்கிலம்**

ஆங்கிலம் அழகாக பேச, வாசிக்க, எழு[illegible] ஆறே மாதங்களி[illegible] படிக்க விரும்பினு[illegible] இலவச விபரங்[illegible]களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோ[illegible]
723, மருதானை ரோ[illegible]
கொழும்பு-10.
த. பெட்டி 649.



உங்கள் நீடித்த எழிலுக்கு

**'எலேட்'**

சுப்பர்லோன் ஜோர்ஜட் என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல் மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

**எலேட்**

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்க[illegible] வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

**குண்டன்மால்ஸ்**

லிமிட்டெட்,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 நவம்பர் மாதம் 22-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## விஷமிகளின் வதந்தி

இலங்கை அரசியலில் இவ்வாரம் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. நிதியமைச்சர் திரு ஸ்டான்லி டி. சொய்ஸா மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறுமா? அதனால் அவர் வெளியேற்றப்படுவாரா? அல்லது அரசாங்கம் கவிழுமா? பாராளுமன்றம் கலைக்கப்படுமா? அன்றிப் புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் படி எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்படுவாரா?

இவ்வாறெல்லாம் பொது மக்கள் கேள்விகளை எழுப்பிக்கொண்டு அவற்றிற்கு விடை காணுவதற்காகத் துடிதுடிக்கிறார்கள். தினப் பத்திரிகைகளைப் புரட்டுகிறார்கள். கருத்தைத் தீட்டிக்கொண்டு தெருப் பேச்சுக்களைக் கிரகிக்கிறார்கள். என்ன நடக்கப்போகிறது என்பதை அறிவதில் அபரிமிதமான அக்கறையும் அங்கலாய்ப்பும் காட்டிவருகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாருடைய கவனத்தையும் இன்று ஈர்த்திருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி எப்படி நடந்து கொள்ளப்போகிறது என்ற எண்ணமாகும்.

சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, கலகத்தில் புளுகுபவர்களைப்போல, சிலர் வீண் வதந்திகளைக் கிளப்பிவிடுகிறார்கள். தமிழரசுக் கட்சியின் விரோதிகள், சந்தர்ப்பத்தை அனுசரித்து, கட்சியின் மீது பழிவாங்கிவிடலாம் என்று பொய்ப் பிரசாரங்களை செவியோடு வாயாகப் பரப்பிவருகிறார்கள். கட்சிக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணிவிடலாம் என்ற நம்பிக்கையில் கட்டுக் கதைகளுக்குக் காதும் மூக்கும் வைத்து ஆதாரமற்ற பச்சைப் பொய்களை ஏடுகளாக அச்சுப் போட்டு வெளியிடுகிறார்கள் வேறு சிலர்.

இந்த அலைகளின் மத்தியில் தமிழ்ப் பொது மக்கள் உண்மை நிலை எதுவென்று தெரியாமல் சற்று உலமருதல் வியப்பில்லை யன்றோ!

தமிழரசுக் கட்சியைத் தாக்கும் நோக்குடன் கிளப்பப்பட்டிருக்கும் அபாண்டமான வதந்திகளுள் பாரதூரமானவை இரண்டு:

தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து மந்திரிப் பதவிகளை ஏற்கப்போகின்றது என்பது முதல் வதந்தி.

எதிர்க்கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் மீது தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்து வாக்களிக்கப் போகிறது என்பது இரண்டாவது வதந்தி.

இந்த இரண்டு வதந்திகளுக்கும் நேரடியாகப் பதிலிறுக்க வேண்டிய கடப்பாடு தமிழரசுக் கட்சிக்கு மாத்திரமல்ல சுதந்திரனுக்குமுண்டு என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

சுதந்திரன், ஒரு சுதந்திரமான, தனிப்பட்ட பத்திரிகையாக இருந்த போதிலும், தமிழரசுக் கட்சி தோன்றிய நாள் தொட்டு அது சார்ந்து நிற்கும் சமஷ்டி அரசியல் தத்துவங்களையும், சுயநிர்ணய, சுயாட்சிக் கோரிக்கைகளையும் சுதந்திரன் ஆதரித்து நின்றிருக்கிறது; ஆதரவளித்து வந்திருக்கிறது.

1949 க்குப் பின் நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களின் போது தமிழ்ப் பொது மக்கள் தமிழரசுக் கட்சியைத்தான் ஆதரிக்க வேண்டும் என்று தக்க காரணங்களைக் காட்டிச் சிபார்சு செய்திருக்கிறது. எனவே, தமிழரசுக் கட்சியின் நடத்தைக்குப் பதில் கூறவேண்டிய பொறுப்புச் சுதந்திரனையும் சார்ந்ததாகும். இந்த மாபெரும் பொறுப்பினைச் சுதந்திரன் ஒரு போதும் தட்டிக் கழிக்கமாட்டாது என்று உறுதி கூறுகின்றோம். தமிழரசுக் கட்சி தவறான வழியில் நடந்தால் அதைக் கண்டிக்கவும், தமிழ்ப் பொது மக்களைச் சரியான பாதையில் திருப்பிவிடவும் சுதந்திரன் தவறமாட்டாது என்றும் உத்தரவாதமளிக்கின்றோம்.

மேலே கூறப்பட்ட இரண்டு வதந்திகள் சம்பந்தமாகவும் சுதந்திரன் தமிழ்ப் பொது மக்களுக்குத் தரும் விளக்கம் பின்வருமாறு:

தமிழரசுக் கட்சி தகடுதத்தம் புரியும் ஒரு கட்சியோ அன்றித் தடுமாற்றத்தால் தத்தளிக்கும் ஒரு கட்சியோ அல்ல. நிலையான கொள்கையையும் நெறியான அரசியல் ஒழுக்கையையும் கடைப்பிடிக்கும் ஒரு கட்சி அது. அக்கட்சி அற்ப சலுகைகளுக்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் தான் கொண்ட மூலாதாரக் கொள்கையிலிருந்து அடிசறுகும் என்று ஒரு சில ஏமாளிகள் எதிர்பார்ப்பதும், விஷமிகள் பிரசாரம் செய்வதும் நகைப்புக்கிடமானது; வருந்தத்தக்கது.

சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் முழு மந்திரிசபை மந்திரிப்பதவிகளுக்குத் தூண்டில் போடுவதுதான் ஒரு அரசியல் கட்சியின் இறுதி இலட்சியம் என்ற தவறான கருத்து நம் நாட்டு மக்களிடையே துர்அதிர்ஷ்டவசமாக வேர் பிடித்திருக்கிறது.

தமிழரசுக் கட்சி பதவி வேட்டையாடும் இலட்சியத்துடன் ஆக்கப்பட்டதுமல்ல; வளர்க்கப்பட்டதுமல்ல. அதன் இறுதி இலட்சியம் இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கு மட்டும் நன்மை பயக்கும் ஒற்றையாட்சியை மாற்றி, சகல மக்களுக்கும் சுபீட்சமளிக்கும் சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே. இந்த உன்னத இலட்சியம் ஈடேறும்வரை தமிழரசுக் கட்சி எந்த ஒரு அரசாங்கத்திலும் பதவியேற்கமாட்டாது என்பது வெறும் பேச்சல்ல, சாசனரூபத்தில் கையெழுத்திட்ட பிரதிக்ஞையாகும்.

தமிழரசுக் கட்சியில் எந்த அபேட்சகரும் ஒரு வாக்குறுதிப் பத்திரத்தில் கையொப்பமிட்ட பின்னரே பாராளுமன்றத் தேர்தலுக்கோ அன்றிச் செனட்டர் தெரிவுக்கோ நிறுத்தப்படுகின்றார். பிரஸ்தாப பத்திரத்தில் அவர் செய்யும் பிரதிக்ஞை "இந்த நாட்டில் சமஷ்டி அரசமைப்பு ஒன்று ஏற்படும்வரை நான் அரசாங்கத்தில் எந்தப் பதவியையும் ஏற்கமாட்டேன்" என்பதாகும்.

இந்தப் பிரதிக்ஞையை தமிழரசுக் கட்சி திரிகரணசுத்தியுடன் இறுதிவரை காப்பாற்றும், கடைப்பிடிக்கும் என்பதைத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள், நாடு அறியும், நாட்டின் பிரதமரும் அறிவார்.

அரசாங்கத்துக்கு எதிராக எந்தப் பிரேரணை வந்த போதிலும் அந்தப் பிரேரணையின் தாரதம்மியங்களை நன்கு பரிசிலனை செய்து வாக்களிப்பதே தமிழரசுக் கட்சி கடைப்பிடிக்கும் வழியாக இருந்து வந்திருக்கிறது. இந்த அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் ஆராயப்பட்டு வாக்களிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

தமிழ் இனத்தின் நன்மையை, தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வை முன்வைத்தே பிரேரணைக்கு ஆதரவளிக்கப்படலாம் அல்லது ஆதரவு மறுக்கப்படலாம்.

ஆனால் எக்காரணம் கொண்டும், தமிழ் மக்களுக்கு இத்தனை இன்னல்களையும் இடையூறுகளையும் விளைவித்த இன்றைய அரசாங்கத்துக்கு ஆதரவாகத் தமிழரசுக் கட்சி தன் வாக்கினை அளிக்காது என்று சுதந்திரன் துணிந்து கூறக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்கும், மந்திரிப் பதவிகளுக்குமிடையில் முடிச்சுப்போடுவது வேடிக்கை பார்க்க விரும்பும் விஷமிகளின் செயலாகவோ அன்றித் தமிழரசு விரோதிகளின் சூழ்ச்சியாகவோதான் இருக்க வேண்டும்.

அதைப்பற்றி நமக்கு கவலையில்லை. உண்மையை மறைக்க முடியாது. சத்தியத்தை அழிக்க முடியாது. கடந்தகாலத்தைப்போலவே தமிழரசுக் கட்சியின் சொல்லும் செயலும் [illegible] வாய்மையையும், நிதானத்தையும் பிரதிபலிக்கும் என்று தமிழ் மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்.

# நிதிஅமைச்சர் ஸ்டான்லிமீது நம்பிக்கையில்லா தீர்மானம்

## தமிழரசுக்கட்சி ஆதரிப்பதென முடிவு

ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்கள் கடந்த வியாழக்கிழமை மாலையில் கொழும்பில் கூடி நிதியமைச்சர் திரு ஸ்டான்லி டி சொய்ஸா மீது கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப்பற்றி விவாதித்தனர்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனும் சமூகமாயிருந்தார்.

எதிர்க்கட்சியினருடன் சேர்ந்து பிரஸ்தாப நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தமிழரசுக் கட்சியும் ஆதரிப்பதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

விவாதத்தின்போது கட்சியின் பிரதிநிதிகள் அனைவரும் பாராளுமன்றத்தில் சமூகமாயிருந்து தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்றும் தெரிகிறது.

## தமிழர் ஆசிரியர் சங்கச்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டபோது அவர் பின்வருமாறு கூறினார்:—

### செயலாளர் தந்த பதில்

"இப்போது கொழும்புக் கிளை என்று ஒன்று இல்லை. ஆகவே அந்தக் கிளையின் காரியதரிசி என்று சொல்லிக்கொண்டு எவரும் எதையும் எழுதுவது முறையாகாது. முறை கேடாக எழுதுவது எழுதுபவருக்கே அழகல்ல. அப்படி ஒருவர் எழுதிவிட்டால் அதை எவருங் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளத் தேவையில்லையே! — இப்படி திரு தியாகராஜா கூறினார். சங்கச் செயலாளரே மேற் கண்டவாறு அபிப்பிராயம் தெரிவிக்கையில் சுதந்திரன் நிருபர் வேறு விளக்கம் தர வேண்டிய அவசியமில்லை அல்லவா!

ஆயினும் கடந்த வாரச் சுதந்திரன் செய்தியின் பயனாக சங்கத்தில் நடந்திருக்கும் சில நலமான காரியங்களைக் குறிப்பிட விரும்புகிறோம்.

### செயலாளர் உபதலைவர் ராஜிநாமா

பொதுச் செயலாளர் திரு சு. தியாகராஜா 1-12-59 முதல் தாம் பதவியிலிருந்து விலகுவதாகத் தமது ராஜிநாமாக் கடிதத்தைக் கொடுத்துவிட்டார். இவரைத் தொடர்ந்து சங்க உப தலைவர்களில் ஒருவரான திரு ஆ. க. சுப்பிரமணியமும் தாமும் 1-12-59-லிருந்து தமது பதவியைத் துறக்கப் போவதாக ராஜிநாமாக் கடிதம் சமர்ப்பித்திருக்கிறார்.

இவர்கள் இருவருடைய ராஜிநாமாவும் கடந்த 14-11-59-ல் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

### தலைவர் ராஜிநாமா வாபஸ்

எதிர்வரும் 5-12-59-ல் கண்டியில் பொதுச் சபைக் கூட்டம் ஒன்று நடத்துவது என்றும் அப்போது காலியான இரு பதவிகளுக்கும் உத்தியோகத்தர் தெரிவு நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. சங்கத் தலைவர் திரு பொ. சந்திரசேகரி ஏற்கனவே சமர்ப்பித்திருந்த ராஜிநாமாக் கடிதம் அவ்ரால் வாபஸ் பெறப்பட்டது. கண்டிக் கூட்டம் நடைபெறும்வரை தலைவர் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும் என்று சபையோர் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் தமது ராஜிநாமாக் கடிதத்தை வாபஸ் பெற்றார்.

### ஆசிரியர்கள் இடமாற்றம்

கூட்டத்தில் இன்னொரு முடிவும் செய்யப்பட்டது. அதாவது வட மாகாணத்தில் நான்கு வருடங்களுக்குக் குறைந்த காலம் சேவை செய்த ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதை வித்தியாபகுதி புனராலோசனை செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆசிரியர்கள் மாற்றங்கள் பற்றி ஆராயக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

கூட்டத்தின் முதல் கட்டத்தில் திரு ஆ. க. சுப்பிரமணியமும் இடையில் திரு பி. ஈ. டி. ஐயாத்துரையும் கடைசியில் சங்கத்தலைவர் திரு பொ. சந்திரசேகரியும் தலைமைவகித்தார்கள்.

### சூடான பேச்சும் கும்மாளமும்

கூட்டம் வழமைக்கு சற்று மாறாக அமைதியாக நடைபெற்றது. வெளியில் நின்றவர்கள் மட்டும் கும்மாளமடித்துச் சூடாகப் பேசி பிரச்னைகளைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். சுதந்திரன் நிருபரை அங்கு கண்டதும், அவரை எப்படியும் வெளியேற்றிவிட வேண்டும் என்று அவர்கள் வீணில் துடித்தார்கள். மேற்படி ஆசிரியர்கள் தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டிருக்கும் கொழும்புக் கிளையைச் சேர்ந்தவர்கள் என்று அறிய வருகிறது. குழப்படி காரணமாகவே கொழும்புக்கிளைக்கு இன்றைய நிலை ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கோப்பாய்த் தேர்தலில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தி ஏமாற்ற இரு காரணங்களை அடிப்படையில் வைத்திருந்தார்கள்.

புதிய தொகுதியான உடுவிலில் பொதுத் தேர்தலுக்கு அபேட்சகராக வரவிருக்கும் மாஜி சமசமாஜிச் செனட்டர் நாகலிங்கத்துக்கு திரு. பேரின்பநாயகம் அபேட்சகராக வருவதுமூலம் ஏற்படக்கூடிய நெருக்கடியைச் சமாளிப்பது முக்கிய காரணமாயிருந்தது. பொதுத் தேர்தலுக்கு முன்னுடியே திரு. பேரின்பநாயகத்தின் கவனத்தைத் திருப்பிவிட்டுத் தகுதியான ஆள் இடைத்தேர்தலில் தங்களுக்குக் கிடைக்காமலிருந்த குறையை நிவர்த்தி செய்வது மற்றக் காரியமாகும்.

### மாய்மாலம்

எப்படியும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் உடுவில் தொகுதிக்குப் போட்டியிடுவதென்ற பேரின்பநாயகத்தின் பிடிவாதத்தை உடைக்கத் திரைமறைவில் பலசூழ்ச்சிகள் நடந்தன. தன்மீது கருணை கொண்டல்ல மாஜி செனட்டரின் எதிர்கால நலனை உத்தேசித்தே சமசமாஜிகள் மாய்மாலம்போடுகிறார்களென்பதை திரு. பேரின்பநாயகம் உணர்ந்துகொண்டார் போலும். ஒரே பிடிவாதமாக அவர் இடைத்தேர்தலில் கோப்பாய்க்குச் செல்ல மறுத்துவிட்டார்.

### அணில் வந்தும் ஆகவில்லை

அவரை இணங்க வைக்க யாழ்ப்பாணத்திலுள்ள சமசமாஜப் பிரமுகர்கள் படாதபாடு பட்டார்கள். ஆசை வார்த்தை பல கூறினர். இவற்றுக்கெல்லாம் அவர் அசைந்து கொடுக்காமற் போகவே கொழும்பிலிருந்து

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளையும் கொள்கைகளையும் பதவியோடு பொருத்தியா மதிப்பிடுவது?

## இந்த நாட்டு அரசியலில் இது துரதிர்ஷ்டம்: பிரதமரோடு கட்சி பேச்சுவார்த்தை நடத்தவில்லை

## தமிழரசுத் தந்தை எஸ். ஜே. வி. அறிக்கை

"அரசியல் கட்சிகளையும் அவற்றின் கொள்கைகளையும் பதவியோடு பொருத்தித்தான் மதிப்பீடு செய்கிறார்கள். இந்த நாட்டின் அரசியல் துறையில் இது ஒரு துரதிர்ஷ்டமாகும்"—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறார்.

தமிழரசுக் கட்சி எம். பிக்களுக்கு மந்திரிப்பதவிகளும் பாராளுமன்றக் காரியதரிசிப் பதவிகளும் கொடுத்து அவர்கள் ஆதரவைப் பெற அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துகிறது என்று ஒரு கதை அடிப்பட்டது. இரண்டு தமிழரசுக் கட்சி எம். பிக்களைப் பிரதமர் தமது வாசஸ்தலமான டெம்பிள் டிரீஸுக்கு அழைத்து அவர்களிடம் நீண்ட நேரம் பேசியதாக இன்னொரு கதை பரப்பப்பட்டது. இவற்றை மறுத்து இரண்டிலும் உண்மை இல்லை என்று கூறுமுகத்தான் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது திரு. செல்வநாயகத்தால்.

### எதற்கு பேச்சு?

தமிரசுக் கட்சி எம். பிக்கள் தமது தொகுதி விஷயங்கள் சம்பந்தமாகப் பல தடவைகளில் பிரதமரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்களே தவிர அரசாங்கத்தை ஆதரிப்பது சம்பந்தமாகவோ அல்லது அதில் சேர்ந்து பதவி வகிப்பது பற்றியோ எப்பொழுதுமே பேசியது கிடையாது என்றும் அந்த அறிக்கையில் சொல்லப் படுகிறது.

மேலும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

### நமது நிலை

"'சமஷ்டி அரசமைப்பு இந்த நாட்டில் ஏற்படுத்தப்படும்வரை நான் அரசாங்கத்தில் எந்தப் பதவியும் ஏற்க மாட்டேன்'—இப்படிக் கூறும் சத்தியப் பிரமாணப் பத்திரத்தில் கைச்சாத்திட்டு விட்டுத்தான் நாம் தேர்தலுக்கு நிற்கிறோம். இதற்கு நாம் எப்பொழுதும் கட்டுப்பட்டவர்கள்: இது பிரதமருக்கே தெரியும். அப்படியிருக்க, நம் கட்சி எம். பிக்களை அழைத்து அமைச்சு விஷயங்கள் பற்றிப் பேசி நேரத்தை வீணடிக்கப் பிரதமர் அவ்வளவு அறிவிலி அல்ல"—இவ்வாறு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.

## விதவைகள் இருவர் போட்டி

அத்தனகலை தொகுதியில்

முன்னாள் பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா காலமாகியதால் காலியான அத்தனகலைத் தொகுதிக்கு அவருடைய மனைவி சிறிமாவோ பண்டாரநாயகாவும், கடந்த வருட மே-ஜூன் கலவரத்தின்போது பொலீஸாரால் சாகடிக்கப்பட்ட திரு டேவிட் சில்வா என்பவரின் மனைவியும் போட்டியிடுகிறார்கள். பின்னவர் திரு இரியகொல்லையின் சமாஜவாதி மகாஜன பெரமுனையின் ஆதரவில் போட்டியிடுகிறார். இருவரும் தங்கள் நியமனப் பத்திரங்களைக் கடந்த வியாழனன்று தாக்கல் செய்தார்கள்.

## கோப்பாய்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அணில் முனசிங்கா எம். பி. வரவழைக்கப்பட்டார். அவரதுபாச்சாவும்பலிக்கவில்லை.

அடுத்து பேணட் சொய்சா எம். பி. வந்திறங்கினார். அவர் பேரின்பநாயகத்துடன் ஒரு நாள் நள்ளிரவு வரை பேசியும் பயன் கிடைக்கவில்லை. கடைசியில் கொழும்பிலிருந்து டாக்டர் என். எம். பெரேராவின் அழைப்புக் கிடைத்தது நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு ஒரு வாரத்துக்கு முன் கொழும்பு சென்ற பேரின்பநாயகம் தனது கருத்தைத் தெரிவித்து சமசமாஜக் கட்சியின் விருப்பத்துக்குப் பலியாக முடியாதென்பதைச் சொல்லிவிட்டுத் திரும்பினார்.

### இடையிலே மாறிய இராகம் பல்லவி

கோப்பாய் இடைத் தேர்தலுக்கு அபேட்சகரை நியமிக்கப் போகிறோம் என்று கொக்கரித்த யாழ்ப்பாணத்துச் சமசமாஜிகள் இடையிலே இராகத்தை மாற்றி திரு. பேரின்பநாயகம் தன்னை நியமிக்குமாறு கேட்கிறார். மத்திய கமிட்டி விரைவில் முடிவு செய்யும் என்று சொன்னார்கள். நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு இரு தினங்களுக்கு முன் பல்லவையையே மாற்றிக் கொண்டனர். மேற்படி இடைத் தேர்தலில் போட்டியிடும் உத்தேசம் இல்லையென்று வெட்கத்தை விட்டுக் கூறினர்.

போட்டிபோட ஆள் கிடைக்காத குறையை எப்படியும் பேரின்பநாயகத்தின் மூலம் நிறைவேற்ற முயன்ற அவர்களுக்கு பேரின்பநாயகத்தின் முடிவு பேரிடியைக் கொடுத்ததால் வேறு என்ன பதிலைத் தான் சொல்ல முடியும். ஆகவே வகையறியாத சமசமாஜத் தம்பிரான்கள் கடைசி நேரத்தில் வெற்றிரமாகப் பின் வாங்கிக் கொண்டனர்.

## சுயேச்சையா? அன்றி மறைமுக தமிழ் காங்கிரஸா?

### சிவசுப்பிரமணியம் பற்றி கோப்பாய் வாக்காளர் ஆசங்கை

(நமது யாழ்ப்பாண நிருபர்)

யாழ்ப்பாணம் நவ

இதறிக் கிடந்த தமிழ்க் காங்கிரஸ் பிரகிருதிகள் கோப்பாய் இடைத் தேர்தலில் மீண்டும் மாறுவேடத்தில் உலவத் தொடங்கியிருக்கின்றனர். சுயேச்சை அபேட்சகர் ஒருவரை ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கும் அவர்களை வாக்காளர் மிக இலகுவில் அடையாளம் கண்டு பிடித்து விட்டார்கள்.

கட்சியின் நேரடி அபேட்சகர் ஒருவரை நியமிக்கத் தமிழ்க் காங்கிரஸ் சில குசுகுசு கூட்டங்களை நடத்தியது. பரமேஸ்வரக் கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் தலைவர் பொன்னம்பலம் தங்களது செல்வாக்கு தமிழரசுக் கட்சி முன் செல்லாக் காசாகி விட்டதென்ற தொனியில் புலம்பினாராம்.

### நப்பாசையில் மயங்கிவிட்டார்

காங்கிரஸ் என்ற பெயரில் போட்டியிடமுடியாது போகவே அக் கட்சியின் முன்னைநாள் செயலாளரான திரு. சிவசுப்பிரமணியத்தைத் தூண்டி விட்டிருக்கிறார்கள். தூண்டிவிட்டவர்களில் இரு தடவை தோல்வி கண்டு நிலையுணர்ந்த புரக்டர் அருளம்பலம் முக்கியமானவர். தன்னை ஆதரித்து வாக்களித்தவர்கள், இம் முறையும் கைகொடுத்துதவுவார்களென்ற அவரது நப்பாசையில் சிவசுப்பிரமணியம் மயங்கி விட்டாரெனத் தெரிகிறது.

### சில தூண்கள் தலை காட்டின

மறைமுகமான தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகரே திரு. சிவசுப்பிரமணியம், என்பதை நியமனப் பத்திரம் தாக்கல் செய்த தினத்தன்று பகிரங்கமாகக்காணக் கூடியதாயிருந்தது. மரநிழலிலும் கச்சேரி விருந்தையிலும் சில தமிழ்க் காங்கிரஸ் தூண்கள் தலை காட்டின. இணைச் செயலாளர்களில் ஒருவரான புரக்டர் கதிரவேலு தயங்கித் தயங்கி உள்ளே வந்த காட்சி பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சிவசுப்பிரமணியத்தைப் பிரேரிப்பவர்களில் ஒருவராக அவர் சமுகமளித்திருந்தார்.

### பெயரளவில்தான் அவர் ஒரு சுயேச்சை

பழைய காங்கிரஸ் தூண்களில் ஒருவரான சாவகச்சேரி திரு. வி. குமாரசாமியும் திரு. சிவசுப்பிரமணியத்துக்குப் பக்க பலமும், பண உதவியும் செய்து வருவதாக நம்பப்படுகிறது. எனவே திரு. சுப்பிரமணியம் ஒரு சுயேச்சையல்லர் என்பதும் தமிழரசுக் கட்சியின் விரோதிகள் அத்தனை பேர்களும் [illegible] குறிப்பிடத் தக்கது.

சுயேச்சை அபேட்சகரென்ற வேஷத்தில் வெளிவந்திருக்கும் சிவசுப்பிரமணியம் தமிழ்க்காங்கிரசின் ஆதரவு பெற்று நிற்கும் ஒருவரேயென்று வாக்காளர் பேசிக் கொள்கின்றனர்.

### மொழிக் கொள்கை என்னவோ?

அவரது மொழிக் கொள்கை என்ன என்பதை அறிவதில்தான் வாக்காளர் கவனம் செலுத்தி வருகிறார்கள். "சிங்களவர் தமிழ் படிப்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்தக் கூடாது. நமது எதிர்கால நன்மைக்காகச் சிங்களம் படிப்பது அவசியம்" என்று திரு. சிவசுப்பிரமணியம் சொல்லிவருவதாகத் தெரிகிறது. தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதை நிறுத்தியது பெருந்தவறு என அவர் கண்டித்து வருவதாகத் தெரிகிறது.

இக்கருத்துக்கள் திரு. சிவசுப்பிரமணியத்தை ஆதரிக்கும் தமிழ்க் காங்கிரசுக்கும் உடன்பாடானதா என்பதை எதிர்வரும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் எடுத்துரைக்கக்கூடும்.

## விமலாவும் 'டிக்கி' சொய்ஸாவும் கைது

நிதி அமைச்சர் திரு ஸ்டான்லி டி. சொய்ஸாவின் சகோதரரான 'டிக்கி' சொய்ஸாவையும் முன்னாள் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திருமதி விமலா விஜயவர்த்தனவையும் கடந்த வியாழக்கிழமை பொலீஸார் கைது செய்தனர்.

பிரதமர் பண்டாரநாயகாவின் கொலை சம்பந்தமாக இருவரும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். முன்னர் கைது செய்யப்பட்ட சோமராம தேரோ நீதிபதிக்கு கொடுத்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து மந்திரி சபையில் எழுப்பப்பட்ட 'புயலின் பின்னர் மேற்படி இரு பிரமுகர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

## சப்பித் துப்பிய கரும்பு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய ~வண்டு மென்பதில்லை. ஒரு கிராமத்தார் பனையோலையால் பாய் முடையலாம்; மற்றொரு கிராமத்தார் பெட்டி கடகம் இழைக்கலாம்; வேறொரு கிராமத்தார் விசிறி செய்யலாம்; மற்றொரு கிராமத்தார் கூடை பின்னலாம்; இன்னுமொரு கிராமத்தார் கிடுகு தட்டி போடலாம். இவ்வாறு பலவிதமாகப் பிரித்துக்கொண்டு சிறு கைத்தொழில்களை நிறுவி, கிராமவாசிகள் தங்களுக்கிடையே ஒற்றுமையுடன் தொழில் புரிந்தால், உற்பத்தி செய்த பொருள்களைச் சுலபமாக விற்பனை செய்யலாம். வீண் போட்டிக்கும் பொருள் தேக்கத்திற்கும் இடமிருக்காது.

### விற்பனை ஏற்பாடு

பொருள்களை விற்பனை செய்வதற்காகக் கூட்டுறவு முறையில் விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி உயர்ந்த முறையில் விளம்பரஞ் செய்து வியாபாரத்தைப் பெருக்கலாம். இன்னும் ஒருபடி மேலே சென்றால், மேனாட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வோர், அவர்கள் விரும்பி வாங்கத் தக்க விதத்தில், பொருள்களைப் பெட்டிகளில் அடக்கஞ் செய்து, ஏற்றுமதி செய்து பெரும பணம் திரட்டலாம். கூட்டுறவின் அடிப்படையில் சிறு தொழில்களை நடத்துவதினாலும் பொருள்களை விற்பனை செய்வதினாலும், கிராமவாசிகள் கைநிறைய இலாபம் பெறுவர்; கிடைக்கும் ஊதியத்தைத் தரகர் தட்டிப் பறிக்க வழியிருக்காது. இவ்வாறு கிராமவாசிகளின் பொருளாதாரம் சீர்பட இடமுண்டு.

(இக்கட்டுரை உபயம்: இலங்கை வானொலி)

(தொடரும்)


தமிழ் G. C. E.

101 வினா விடை

பரீட்சையில் சித்தி தலைவிதியைப் பொறுத்தல்ல. வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுவதில் தங்கியுள்ளது. பரீட்சைக்கு விடை எழுதும் முறைகளுடன் கூடிய புத்தகங்கள் உங்கட்கும் சித்தியைத் தர வல்லன.

- தமிழ்ப் பாஷை ரூ. 3-00
- எண் கணிதம் ரூ. 3-00
- குடியியல் ரூ. 3.00
- சரித்திரம் ரூ. 3-00
- பூமிசாஸ்திரம் ரூ. 3-00
- சுகாதாரம் ரூ. 3-00
- ஆங்கிலம் ரூ. 3-00
- பயிற்சிச் சிங்களம் ரூ. 3-00
- றோமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
- இந்து சமயம் ரூ. 3-00
- இஸ்லாம் ரூ. 3-00

பரீட்சை துணை நூல்கள்

கடந்தகால வினா விடைகள்

பரீட்சை வினாக்களை அறிந்து விடைகளைப் படிப்பது சிறந்த பாடாயத்தமாகும். மாதிரி வினாவிடைகள் சித்திக்கு வழிகாட்டும்.

- தமிழ்ப் பாஷை ரூ 3-00
- எண் கணிதம் ரூ. 3-00
- குடியியல் ரூ. 3-00
- சரித்திரம் ரூ. 3-00
- பூமிசாஸ்திரம் ரூ. 3-00
- சுகாதாரம் ரூ. 300
- ஆங்கிலம் ரூ. '3-00
- பயிற்சிச் சிங்களம் ரூ. 3-00
- றோமன் கத்தோலிக்கம் ரூ. 3-00
- இந்து சமயம் ரூ. 3-00
- இஸ்லாம் ரூ. 3-00

வி. பி. பி. கிடையாது
தபாற்செலவு 35 சதம்

விபரங்கட்கு:

அற்லஸ் ஹோல்,
723 மருதானைறோட் கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை உள்ளம்

சிறுகதை — எழுதியவர்: அமுதக்குமரன்

ஓர் உருவம் குந்தியிருந்துகொண்டு அவசர அவசரமாகச் சோற்றை அள்ளி அள்ளி விழுங்கிக்கொண்டிருந்தது. முகத்திலே பசி, பயம், அவசரம் இன்னும் எத்தனையோ இனந்தெரியாத உணர்ச்சிகள் முட்டி மோதிக்கொண்டு நின்றது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது.

பல நாட்களாய் எண்ணெயையே காணுதுகாய்ந்து 'செம்பட்டை' பற்றி, காற்றிலே பறந்துகொண்டிருந்த பரட்டைத் தலை. 'மூன்று நாட்களுக்குத் தண்ணீரிலே கட்டி வைத்துச் செங்கல்லினால்' தேய்த்தாலும் கழர மாட்டேன் என்று அடம் பிடித்துக் 'கொங்கிரீட்' ஆகியிருந்த அழுக்கு நிறைந்த உடம்பு. அதிலே முதுகுப்பக்கத்தில் பாதியை இழந்து பரிதாபத்துடன் தொங்கிக்கொண்டிருந்த 'அடுப்புக் கரி'யை விடக் கொஞ்சம் வெண்மையான நிறமுடைய சட்டை. அரையிலே பொலிவை இழந்து பெயரோடு மட்டும் இருந்த ஓர் அரைக் காற்சட்டை—இத்தனை அழகுடன், உட்கார்ந்து உண்டுகொண்டிருந்த உருவத்திற்கு வயதென்னவோ பதின்மூன்றுதானிருக்கும்.

கோணமலை! அது அந்தப் பையனின் பெயர். இளவயதிலேயே தாயை இழந்தான். தந்தையின் அன்ருட உழைப்பினுல் அப்பனும் மகனும் அரை வயிறும், கால்வயிறும் அபூர்வமாகச்சிலவேளைகளில் முழு வயிறுமாய்க் காலத்தைக் கடத்தினர். கோணமலையின் அப்பா கந்தசாமி. ரெயில்வே ஸ்டேஷனில் போட்டர். பாவம் அந்த மனிதன்தான் என்ன செய்வான்? கிடைப்பதைக் கொண்டு ஓடோடியும் வருவான்.

கும்பனித் தெருவை யடுத்து 'பேரை' ஆறு ஒன்று ஓடுகிறது. அந்தக் கரையிலுள்ள குடிசைகளில் முதலாவதாகக் காட்சியளிப்பது கந்தசாமியினுடைய குடிசைதான். அங்கே அவனது மகன் பசியினுல் வாடி, வதங்கி கேள்விக்குறிபோல் சுருண்டு படுத்திருப்பான். எப்படியோ கொண்டுவந்ததைக் காய்ச்சி அவனை எழுப்பிக் கொடுப்பதற்குள் கந்தசாமிக்குப் போதும் போதும் என்ருகிவிடும்.

இப்படிக் கோணமலை அரைவயிறும் கால் வயிறுமாய்க் கிடந்து 'சந்தோஷ வாழ்வு' நடத்துவது கூட சகல சீவராசிகளையும் காத்து இரட்சிக்கும். அந்த அகிலாண்ட பரமேஸ்வரனுக்குப் பொறுக்கவில்லையோ என்னவோ! அன்று மே மாதம் இருபத்தாரும் தேதி வழக்கப்படி எழுந்த கந்தசாமியின் கால்கள் கோட்டைப் புகையிரதநிலையத்தை நோக்கி நடையைக்கட்டின. ஏதாவது நேரகாலத்தோடே பிச்சுப் பிடுங்கினுல்தானே தனக்கும் தனயனுக்கும் அரை வயிற்றுக் கஞ்சிக்காவது ஆகும் என்ற எண்ணம் அவனுக்கு. போனதும் உடனே இரண்டு மூன்று கூலிகள் கிடைத்தன. 'புடிபுடி' யென்று எல்லாவற்றையும் தூக்கி ஏற்றிவிட்டு "பூ......!" என்ருன். கூலி கூலியாய் மூன்று ஒரு ரூபாய் நோட்டுகள் அவனது கைக்குள் மாறின. தனது கறுத்தக் கோட்டின் இடதுபுறக் கிழியாத பையினுள் போட்டு ஒரு தட்டுத் தட்டிவிட்டுக் கொண்டான்.

வீதியில் பலமான இரைச்சல் கேட்டது. கந்தசாமி வெளியே வந்து எட்டிப் பார்த்தான். ஒரு காடையர் கூட்டம் அப்பாவி ஒருவனைப் போட்டு மிதித்துக்கொண்டிருந்தது. இடையிடையே இனவெறி அர்ச்சனை மாலைகள் விழுந்தன. வெறிபிடித்த வாழ்த்தொலிகள் அவை. அவர்களின் வாயினின்றும் வெளிக் கிளம்பிக் காதைப் பிளந்தன.

கந்தசாமி அதைக் கண்டதுதான் கண்டான். விஷயத்தைப் புரிந்துகொள்ள வெகுநேரம் ஆகவில்லை அவனுக்கு. உச்சி தொடங்கி உள்ளங்கால்வரை அவனது உடம்பு 'வெடவெட'வென்று நடுங்கியது பயத்தால். எவ்வளவுதான் உடம்பும் பலமும் இருந்தாலும், இந்தப் பெரிய கூட்டத்தைச் சமாளிக்கக் கந்தசாமியால் முடியுமா என்ன? மெதுவாக அக்கம் பக்கம் பார்த்தான். ஒருவரும் தன்னைக் கவனிப்பதாய் இல்லை. மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுவினுன்.

"ஏதோ புரியாத மொழியில் கேள்வி ஒன்று எழுந்தது. குரல் வநத பக்கம் திரும்பினுன் கந்தசாமி. "படீர்!" அவனது தலையைப் பிளந்தது ஒரு சோடாப் போத்தல். விழுந்து கிடந்த கந்தசாமியினெதிரே அவனது சக தொழிலாளி பெரேரா வெறி பிடித்தவனைப்போல் பார்த்துக்கொண்டு நின்ருன். அவனைப் பார்க்க விரும்பாத கந்தசாமியின் கண்கள் மூடின. அவ்வளவுதான். பின்னர் திறக்கவேயில்லை

பாவம், அப்போது கோணமலைக்குப் பதினெரு வயது. தந்தையை இழந்த அவன் என்ன எட்டாம் வகுப்பா 'பாஸ்' பண்ணியிருந்தான் 'பியோன்' வேலைக்காவது அலைந்து பார்க்க? பள்ளிக்கூடம் என்ருல் பச்சையா சிவப்பா? என்று கேட்கும் நிலையிலிருந்த அவன் வேலைக்கு என்ன செய்வான்? நல்லகாலம் அவன் பட்டினியாவது கிடந்து பழகியிருந்தான். ஆனுலும் நாள் முற்ருக அப்படிக் கிடந்துவிட முடிகிறதா என்ன?

பசிக்கும் வேளைகளில் பஸ் நிலையங்களில் காட்சியளிப்பான் அவன். முளைத்திருந்த பற்கள் அவ்வளவையும் காட்டி "ஐயா!" என்பான். சில 'தர்மப் பிரபுகள்' அவன் கையை நீட்டும்போதுதானு, வேறு பக்கம் பார்க்க வேண்டும்! சிலர் சங்கைக்காகப் பைக்குள் கையை விட்டுத் தட்விக்கொண்டே "சில்லறையில்லை" என்று சொல்லுவார்கள்; வேறு சிலர் தங்களுடன் வந்திருப்பவர் கொடுக்கும் ஒரு சதத்தைப் பார்த்துவிட்டுத் தன்னிடம் கையை நீட்டும்போது "இரண்டு பேரும் ஒன்றுதான்" எனக் கூறுவர். இவற்றையெல்லாம் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போயிற்று கோணமலைக்கு. யாராவது அவனுக்கு "உயர்ந்தபடியில்" உள்ளவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டு அரை ருத்தல் பாண்தான் பதின்மூன்று சதமாச்சே-தனது வயிற்றை நிரப்பிக்கொள்வான்.

அவனது சக தரித்திரங்கள் அப்படியே தெருவோரத்தில் நின்று விளையாடுவார்கள். அவர்களுடன் சேர்ந்துகொண்டால் அவனுக்கு நேரம்போவதே தெரியாது. நித்திரை வந்துவிட்டால், எந்தப் புதுப் பட விளம்பரத் தாளானுலும் பரவாயில்லை—அவனுக்கென்ன வாசிக்கவா தெரியும்—சுவரிலேயிருந்து கிழிப்பான். நடைபாதையிலே விரிப்பான். அப்படியே உறங்கிப்போவான்.

அவனது வாழ்க்கையே ஒரு தனி அலாதி. ஒரு நேரமில்லாவிட்டாலும் ஒரு நேர உணவு; பாதி கிழிந்ததானுலும், உடுப்பதற்கு உடை; பசியாத நேரங்களில் ஓயாத விளையாட்டு; படுப்பதற்குப் பாய் இல்லாவிட்டாலும், விரிக்கப்பட்ட விளம்பரத் தாள்களிலே உறக்கம். வேறென்ன வேண்டும்? எல்லோரது வாழ்க்கையையும் போல் கோணமலையின் வாழ்வும் ஓடிக்கொண்டுதானிருந்தது! தன்னைப்போன்ற மனிதர்களுடனே அவனது வாழ்வு ஆனந்தமாய்க் கழிந்தது.

* * *

இன்று கோணமலை புறக்கோட்டை முழுவதும் சுற்றிவந்து [illegible] ஒரு சதமாவது கிடைக்கவில்லை. தன்னுலியன்ற வித்தைகளெல்லாவற்றையும் பிரயோகித்தான். ஊ ஊும், ஒன்றுமே ஆகவில்லை. அவனுக்கு வயிற்றைக் குடைந்தது பசி. அலைந்து திரிந்த களைப்பினுல் வந்து கோட்டை பஸ் நிலையத்தின் பக்கத்தில் கொழும்புமா நகரிலேயுள்ள காகங்கள் யாவும் தங்கள் மாளிகையாகப் பாவிக்கும் அந்த வாகை மரத்தின்கீழ் அமர்ந்தான்.

வலதுபுறம் திரும்பிய அவனது கண்கள் பிரகாசமடைந்தன. பக்கத்தில் ஒரு கிழவன்! கோணமலையின் உத்தியோகத்தில் அவனைவிடச் சற்று 'சேர்விஸ்' கூடிய அவன் ஏதோ ஒரு பொட்டலத்தைக் கையால் அணைத்தபடி நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான். கோணமலை கிழவனை நெருங்கினுன். பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்களைப் பற்றி அவன் கவலைப்படவில்லை—கவலைப்படும் சூழ்நிலையல்ல அது. அந்த நேரத்தில் அவனுக்குப் பசி! பசி! தீராத பசி!

பொட்டலத்தில் கண்டிருந்த கறிவை உள்ளிருக்கும் சரக்கை என்னவாக இருக்கும் என்று ஊகிக்க வைத்தது அவனை. கண்கள் அகலத் திறந்தன. கைகள் துருதுருத்தன. அப்போது அந்தப் பொட்டலம்—வாய் திறந்து ஒரு வார்த்தைதானும் பேச முடியாத வெறும் பொட்டலம் கோணமலைக்கு கதைகதையாக சொன்னது. தள்ளாத வயதிலே அந்தப் பல்லில்லாத கிழவன் எத்தனை தூரம் அலைந்து எவ்வளவு பாடுபட்டு அதைப் பெற்றிருப்பான்! கிடைத்ததை அனுபவிக்கும் அளவுக்குக் கூட உடலிலே தெம்பு இல்லாமல் படுத்துறங்கிவிட்ட அந்தப் பரிதாபத்துக்குரிய மனிதப்பிறவிக்கு துரோகம் செய்வதா? திருட்டு குற்றமில்லையா?

இதையெல்லாம் சிந்திக்க அவனுக்கு நேரமில்லை. வயிற்று வேக்காடு அப்படி! துணிந்துவிட்டான்-'திர'ஞகிவிட்டான்.

மெதுவாக, ஓசைப் படாமல் அவனது கைகளை விலக்கிவிட்டுப் பார்சலை எடுத்தான். கொஞ்சம் தூரப் போய்ப் பொட்டலத்தைத் திறந்த அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. தன்னையறியாமலே நாவில் ஜலமூறியது. இதுபோல் ஆட்டிறைச்சியையும் சோற்றையும் கண்டு அவன் எத்தனை மாதங்கள்!

கிழவர் விழித்துக் கொள்வதற்குள் முடித்துவிட வேண்டாமா? அவசர அவசரமாக அள்ளி விழுங்கினுன்.

"ஏய் கோணன்!" திடுக்கிட்டு நிமிர்ந்தான் கோணமலை. கிழவன் அவனுக்குப் பக்கத்தில் வந்து நின்ருன்.

(15-ம் பக்கம் பார்க்க)

# ஈழத்தில் இருளடைந்து ........

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஙங்களையும் (Values) இழையோட விடலாம். ஆனுல் அவை குறிக்கோளை விழுங்கி விடாது கண்காணிக்க வேண்டும். குறிக்கோள், பெறுமானங்களோடு நின்றுவிடாமல் உணர்ச்சி நிலை படிப்படியாக ஏறிக்கொண்டுபோய் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் உச்ச நிலையை (Climax) அடையும்படி செய்ய வேண்டும். சில துன்பியல் நாடகங்களிலே சிலவேளைகளில் உணர்ச்சி நிலையை குறைப்பதற்கென்றே சில உத்திகள் கையாளப்பட வேண்டிய அவசியமும் ஏற்படலாம்.

## கூட்டு முயற்சி தேவை

நாடகம் ஒருவருடைய முயற்சியால் உருப்பெறுவது அல்ல. தயாரிப்பாளர், தொடக்கம் நிர்வாகஸ்தர், கதையமைப்பாளர், டைரக்டர், நடிகர்கள், ஸ்டேஜ் மனேஜர், காட்சி அமைப்பாளர்கள், ஒலி ஒளி அமைப்பாளர்கள், எடுபிடி ஆட்கள் ஆகவுள்ள அத்தனை பேரின் ஒத்துழைப்பும் பூரணமாக இருந்தால் தான் நாடகம் நடத்த முடியும்.

நாடகம் நடத்துகிறவர்கள் ஒரு விஷயத்தை மறந்துவிடக்கூடாது. நாடகம் தொடங்கும் கட்டத்திலிருந்து முடியும் கட்டம்வரை நடக்கிறது. பொதுமக்கள் நீதிபதிகளாக வீற்றிருக்கிருர்கள். எந்தக் கட்டத்திலும், எந்த ஒரு நிமிஷத்திலும் அவர்களின் கவனத்தை நாடகம் இழந்துவிடவில்லை என்ற நிலை இருக்கும்வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். அரை நிமிஷத்தில் ஒருவருக்கு நாடகத்தில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டதென்ருல் அதை மாற்றுவதற்கு அரை மணித்தியாலமாக முயன்ருலும் எல்லா நாடகங்களாலும் அதைச் சாதிக்க முடியாது.

## ஒரு குறை

இனி வருவோம் ஏன் இங்கு நாடகக் கலை வளரவில்லை என்ற கேள்விக்கு. கலைத்திறமை உள்ளவர்கள் இருக்கிருர்கள் ஆனுல் அவர்களிடம் போதிய அளவு ஆர்வம் இல்லை. ஆர்வம் உள்ளவர்களிடம் பொதுவாக பொருளாதார பலம் இல்லை. ஆர்வமும் பண பலமும் ஒன்று சேராதது ஒரு குறை.

## மண்டபப் பிரச்னை

கொழும்பிலே நாடகம் நடத்துவதற்கு இங்குள்ள சுமார் 38 மன்றங்களில் எத்தனையோ மன்றங்கள் வசதி இல்லாமல் இருப்பது நமக்குத் தெரியும் இங்கு எல்லோருக்கும் பொதுவான தேசிய மண்டபம் எதுவும் கிடையாது. இரண்டு மூன்று தனியார் மண்டபங்கள் தாம் உள்ளன. அவைதாம் நாடகங்கள் நடத்தத் தரப்படுகின்றன. அவற்றிற்குப் போனுல் கூலியாகப் பணம் எண்ணிக்கொடுக்க வேண்டும். நாடகம் நடத்திய பின்னர் தலையைச் சொறிகிற நிலைமைதான் ஏற்படுகிறது.


## கலைக் கழகம் ஒன்று செய்யலாம்

இந்தக்குறைகளை இலங்கை கலைக் கழகம்போன்ற தேசிய ஸ்தாபனம் முனையுமானுல் களையலாம். அரசாங்கத்திடமிருந்து கலை வளர்ச்சிக்காக இக்கழகம் பெறும் பணத்தில் ஒரு பகுதியை சகல வசதிகளும் உள்ள மண்டபம் ஒன்று கொழும்பில் கட்டுவதற்கு கழகம் பயன்படுத்துமானுல் அது பெரிய கலை வளர்ச்சித் தொண்டாகும். மற்றும் கலைஞர்களை அதிமதிகம் ஊக்குவிக்கும் முயற்சிகளிலும் கழகம் ஈடுபட வேண்டும். ஈழத்தில் அழுக்கடைந்து, துருப்பிடித்து இருளடைந்து போயிருக்கும் நாடகக் கலைக்கு நல்ல காலம் பிறக்க அது உதவும் என்பது எமது நம்பிக்கை"

(திரு கே. கே. இரத்தினசிங்கம் 8-11-59ல் [illegible] எழுத்தாளர் சங்கம் நடத்திய கருத்தரங்கத்தில்பேசிய பேச்சு கட்டுரை ருபத்தில் மேலே தரப்பட்டிருக்கிறது.)


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




- ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி!
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் [illegible] போர்ட் ப்ரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சித்தசுவாதீனம் அற்றவர்கள் பராமரிப்பு முறை

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக்குழு சட்ட ஆலோசகர்

முந்திய தொடரில் சித்தசுவாதீனமற்றவர்களை எப்படிப் பைத்திய ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுவது என்பதைப்பற்றி ஆராய்ந்தோம். இது பெரும்பாலும் தீவிர மூளைக்கோளாறு உள்ளவர்களுக்கே செய்யும் சிட்சையாகும். சாதாரணமான மூளைக் கோளாறுள்ளவர்களைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் அவசியமில்லாவிடினும் அவர்கள் தங்கள் நலனைக் காப்பாற்றவோ அல்லது தங்கள் ஆதனங்களைப் பராமரிக்கவோ சக்தியற்றவர்களெனக் கருதப்படுவர். அவர்கள் அந்நிலையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் சட்டரீதியான விஷயங்களில் ஈடுபட முடியாது: அவர்கள் தங்களை ஒப்பந்தங்களினால் கட்டுப்படுத்தினாலும் அவ்வொப்பந்தங்கள் பெறுமதியற்றவையே. ஆனால் அப்பேர்ப்பட்டவருடைய நலனுக்காக ஒருவர் விசுவாசத்துடன் ஏதும் பணம் செலவழித்தால் அதை அவரிடமிருந்து அறவிட முடியும். சட்ட முறையில் இப்படியான ஒருவர் சந்திரரோகி (Lunatic) என்று அழைக்கப்படுவர். அப்படி ஒருவரைச் சந்திர ரோகியென்று அழைக்கமுன் அவர் சட்டரீதியாக நீதிமன்றமூலம் சித்தசுவாதீனமற்றவரென்றும் தன் விஷயங்களை நன்கு நடாத்த முடியாதவரென்றும் தீர்க்கப்பட வேண்டும். இப்படியான தீர்ப்பு எடுப்பதற்கு என்ன நடவடிக்கை நீதிமன்றமூலம் எடுக்கப்பட வேண்டுமென்பதைச் சற்று ஆராய்வோம்.

## விண்ணப்பம்

ஆதனங்கள் உள்ள ஒருவரை சந்திரரோகி எனச் சந்தேகித்தால் அவர் வசிக்கும் இடத்தை அடக்கியுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கு அவர் சித்தசுவாதீனமுள்ளவரோ அற்றவரோ எனவும் அவர் தன் காரியங்களைச் செவ்வனே நடாத்தக்கூடியவரோ எனவும் ஆராயும் வண்ணம் விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பம் செய்வதற்கு அன்னாருடைய இனத்தவர் அல்லது நகர் காவல் மேற்பார்வையாளர் (Superintendent of Police) அல்லது ராஜாங்கத் தரணியதிபதி (Attorney General) அல்லது காணி பூமி சொத்து அன்னாருக்குண்டானால் அக்காணியிருக்கும் மாவட்டத்தின் அல்லது மாகாணத்தின் அதிபதி தகைமை வாய்ந்தவர்களாவார்கள்.

விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை நீதிமன்றத்துக்குண்டு. விண்ணப்பத்தை தகுதியுடையதெனக் கருதினால் விசாரணை செய்வதற்கு ஒரு தவணையை நீதிமன்றம் ஏற்படுத்தும். தவணை ஏற்படுத்தப்பட்டவுடன் அன்னாருக்கும் அவருக்கு நெருங்கிய ஒரு உறவினருக்கும் மேற்கூறிய விண்ணப்பத்தையும் தவணை நியமனத்தையும் கொடுக்கும்படி செய்யப்படும்.

## விசாரணை

தவணை விசாரணைக்காக நீதிபதியுடனிருந்து ஆலோசனை கொடுப்பதற்காக இரு மத்தியஸ்தர்கள் (Assessors) நியமிக்கப்படலாம். விசாரணையின்போது மேற்கூறப்பட்ட சந்திரரோகியெனப்பட்டவர் உண்மையாக சித்தசுவாதீனமற்றிருக்கிறரோ இல்லையோ என்பதுவும் அவர் தன் கருமங்களைச் செவ்வனே செய்வாரோ இல்லையோ என்பதுமே தீர்க்கப்பட வேண்டிய முடிவுகளாகும். அன்னார் மூளைக்கோளாறின் காரணமாகப் பங்குபற்றுவது உசிதமாயிருந்தால் அவரும் ஒரு பிரதிவாதியாக விசாரணையில் நேராக அல்லது வழக்கறிஞர்மூலம் பங்குபற்றலாம். அதைவிட அவருடைய உற்றார் எவரும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவர் சார்பில் பங்குபற்றலாம். விசாரணையின் பலனாக நீதிமன்றம் அவரின் நிலையைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்து அதைத் தீர்ப்புமூலமாகக் கொடுக்க வேண்டும்.

## தீர்ப்பு

அவரின் மூளை நிலை குற்றமற்றதெனவும் அவர் தன் விஷயங்களைச் செவ்வனே நடத்தும் தகுதியுடையவரெனவும் முடிவுக்கு வந்தால் நீதிமன்றம் விண்ணப்பத்தை தள்ளுபடியாக்கி வழக்குச் செலவையும் விண்ணப்பக்காரர் கொடுக்கும்படி தீர்ப்புக் கொடுக்கலாம். இல்லையேல் மேற்படி நபர் சித்தசுவாதீனமற்றவரென்றும் அவர் தன் விஷயங்களைச் செவ்வனே நடத்தத் தகுதியற்றவரெனவும் ஆகையால் அவர் ஒரு தீர்க்கப்பட்ட சந்திரரோகி எனவும் தீர்ப்புக் கொடுக்கலாம்.

அப்படி ஒருவர் சந்திர ரோகியெனத் தீர்க்கப்பட்டால் உடனே அவரின் ஆதனங்களைப் பராமரிக்க ஒரு ஆதன பராமரிப்புக்காரரும் (Manager of the Estate) அவரின் தேகநலனைப் பேண ஒரு பராமரிப்புக்காரனும் Guardian) நியமிக்கப்பட வேண்டும். நேர்வழி வாரிசுவாக (Heir) இல்லாவிட்டால் ஒருவரே இரு பதவிகளையும் வகிக்கலாம். இவருக்கு நீதிமன்றம் சூழ்நிலைக்குத் தக்கபடி ரோகியின் ஆதனத்திலிருந்து வேதனம் கொடுக்க உத்தரவிடலாம்.

## ஆதன பராமரிப்பாளர் கடமைகள்

ஆதன பராமரிப்புக்காரரின் கடமைகள் உரிமைகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். முதலாக பதவி நியமனமாகிய பிறகு நீதிமன்றத்தால் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஆதன பராமரிப்புக்காரன் நோயாளியின் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் கொண்ட ஒரு பட்டியல் அனைக்க வேண்டும். வருமதி கொடுக்குமதியான கடன்களையும் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு வருடமும் வருடம் தொடங்கி மூன்று மாதத்திற்கிடையில் வரவு பற்றுக்களைக் காட்டி தன்னிடமிருக்கும் எஞ்சிய ஆதனங்களை குறித்துக் காட்ட வேண்டும். இக்கணக்கை அரசாங்க தரணியதிபதி அல்லது ஒரு உறவினர் ஆட்சேபித்தால் நீதிமன்றம் ஆதன பராமரிப்புக்காரனை கட்டளையிட்டு அழைத்து அவ் விஷயத்தை ஒரு சுருக்க விசாரணை மூலம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை யெடுக்கும். மேலும் நோயாளியின் உறவினரா ஆதன பராமரிப்பாளரைக் கணக்கு அனைக்கும்படி வழக்கு மூலம் கோரலாம்.

பராமரிப்பாளரை பதவியிலிருந்து நீக்கிய பிறகும் நீதிமன்றம் கணக்கு அனைக்கும்படியாவது அல்லது ஆதனங்களை, மற்றவருக்குப் பாரப்படுத்தும்படியாவது கட்டளையிடும்; அதை நிறைவேற்றத் தவறினால் ரூபா 750 வரை அபராதம் கொடுக்க நேரிடும். அத்துடன் கட்டளையை நிறைவேற்றுமட்டும் காவலில் வைக்கப்படலாம். செலவுக்கு மேற்பட்ட பணம் கைவசமிருந்தால் அத்தொகையைக் கச்சேரியில் கட்டி வைக்க வேண்டும்.

## உரிமைகள்

இனி ஆதனம் பராமரிப்பவரின் உரிமைகளைச் சற்று கவனிப்போம். ஒரு சந்திர ரோகி மூளைக்கோளாறு இல்லாத நிலையில் தன் ஆதனங்களின் விஷயத்தில் என்ன செயல்கள் செய்ய உரித்துண்டோ அவ்வகை உரித்துக்கள் யாவும் அவரின் ஆதனங்களைப் பராமரிப்பதற்காக நியமிக்கப்பட்டவருக்குமுண்டு. ஆகையால் அவர் நோயாளிக்கு வரவேண்டிய கடன்களை வசூலிக்கவும், கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுக்கவும், ஆதனங்களின் வரும்படிகளை எடுக்கவும் உரித்துடையவராவர். ஆதனங்களை ஐந்து வருஷத்துக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுக்கவும் உரித்துடையவராவார். குத்தகை ஐந்து வருடத்துக்கு மேற்படின் நீதிமன்றத்தின் உத்தரவுடன்தான் அதைச் செய்யலாம். அதேமாதிரி ஆதனங்களை விற்கவும், ஈடு பண்ணவும் நீதிமன்றத்தின் உத்தரவு பெற வேண்டும்.

## பதவி நீக்கம்

இனி பராமரிப்புக்காரனை பதவியினின்றும் நீக்கம் செய்யும் முறையைக் கவனிப்போம். நோயாளியின் உறவினர், அரசாங்கத் தரணியதிபதி மாவட்ட அதிபதி அல்லது நகர்காவல் மேற்பார்வையாளர் பராமரிப்புக்காரனைப் பதவியினின்றும் நீக்கும்படி போதிய காரணம் காட்டி நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம். நீதிமன்றம் போதிய காரணம் கண்டால் அவரைப் பதவியினின்றும் நீக்கி இன்னொருவரை அப் பதவிக்கு நியமிக்கலாம். அத்தருணத்தில் முந்திய பராமரிப்புக்காரன் பிந்தியவரிடம் ஆதனங்கள் யாவையும் பாரப்படுத்தும்படி நீதிமன்றம் கட்டளையிடும்.

## பராமரிப்புக்காரர்

நோயாளியைப் பராமரிப்பதற்காக ஒரு பராமரிப்புக்காரனை நியமிக்க வேண்டுமெனக் கூறினோம். அவரின் கடமையாவது நோயாளியின் உடல் நலனைப் பேணி [illegible] ஒரு பிள்ளையைப் பேணுவது மாதிரிப் பேண வேண்டும். அத்துடன் நோய் மீறிவிட்டால் அவரைக் காப்பாற்றுவதற்காக அறையில் அடைக்கவும் உரித்துண்டு. இக்கடமைகளை யாற்றுவதற்காக ஆதன பராமரிப்பவர் பிரத்தியேகமானவராயிருந்தால் அவரிடமிருந்து நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட தொகையை பெறுவதற்கு பராமரிப்புக்காரனுக்கு உரித்துண்டு. ஆதன பராமரிப்பவரை பதவிநீக்கம் செய்வது போலவே பராமரிப்புக்காரனையும் பதவி நீக்கம் செய்யலாம்.

## நோய் நீங்கிய பின்...

இனிச் சந்திரரோகியின் நோய் நீங்கினால் என்ன செய்வதென்பதை யாராய்வோம். அவரே அல்லது அவரின் சார்பில் வேறு யாரும் நீதிமன்றத்துக்கு அவரின் நோய் நீங்கிவிட்டதென விண்ணப்பம் செய்தால் அல்லது வேறு ஏதும் முறையில் நீதிமன்றத்துக்குத் தெரியவந்தால் நீதிமன்றம் அவரின் நோய் நீங்கிவிட்டதா, அவரிடம் தன் கருமங்களைச் செவ்வனே பார்க்கும் சக்தியுண்டா என்பதை யாராய்வதற்காக ஒரு விசாரணை நடத்தலாம். அவ் விசாரணையின்மூலம் அது உண்மையெனவறிந்தால் நீதிமன்றம் அப்படியே தீர்ப்புக் கொடுத்து அவருக்கு அவரின் ஆதனங்களைப் பாரப்படுத்தும்.

## ஒரு வேறுபாடு

அப்படித் தீர்ப்பளித்தவுடன் அவர் பராமரிப்புக்காரனின் ஆக்ஞையினின்றும் நீங்குவார். அதன்பிறகு அவர் எவ்வித சட்டரீதியான (Legal) விஷயங்களிலும் முறையாக ஈடுபடலாம். ஒரு மனைவி சந்திர ரோகியானால் கணவனின் பராமரிப்பில் விடப்படுவளேயானாலும், கணவன் சந்திரரோகியானால் மனைவியின் பராமரிப்புத்தத்துவத்துக்குள்ளாக்கப்படமாட்டான் அவனென்பது குறிப்பிடத்தக்கது.





இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்
4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ்
சைஸ்களில் கிடைக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:—
சிர்நல் கதீர் அன் கம்பெனி,
43, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு 11.
டெலிபோன்: 6009 & 3710.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நட்சத்திர ஸ்தானம் இனி நிச்சயம் இந்த வெள்ளை நடிகைக்கு. ஈவ் ஈட்டின் அழகு ராணி என்று மேல் நாடுகளில் அறிமுகமானவர். பார்த்தால் தெரிகிறதல்லவா!

# கொழும்பில் நாடகங்கள் நடத்த நல்லதோர் மண்டபம்

## காலஞ் சென்ற சுப்பையா ஆச்சாரி ஞாபகார்த்தமாக எழுப்ப ஆலோசனை

### முஸ்தபா குழுவினர் கதம்ப நிகழ்ச்சி

கொழும்பில பிரபல நகை வியாபாரிகளில் ஒருவராக இருந்து அணிமையில் காலஞ்சென்ற சுப்பையா ஆச்சாரியின் ஞாபகார்த்தமாக ஒரு மண்டபத்தை எழுப்ப ஆலோசனை செய்து வருவதாக சுப்பையா ஆச்சாரியின் மகன் சற்குருநாதன் சுதந்திரனுக்கு தெரிவித்தார்.

தாம் உத்தேசித்துள்ள மண்டபத்தை சென்னை அண்ணாமலை மன்றத்தை அடியொற்றி நாடகங்கள் நடத்துவதற்கு சகல வசதிகளும் கொண்டதாக அமைக்கப் போவதாகவும் திரு சற்குருநாதன் கூறினார். காலஞ்சென்ற சுப்பையா ஆச்சாரி கலைத்துறையில், அதிலும் குறிப்பாக நாடகத் துறையில் மிக்க அக்கறை காட்டியதோடு நாடகங்கள் நடத்துபவர்களுக்கு பேராதரவும் அளித்து வந்தாராகையால் அன்னாரின் ஞாபகார்த்தமாக கொழும்பில் நாடகங்கள் நடத்த உதவக்கூடியதான நல்ல மண்டபம் ஒன்றை அமைப்பதே சாலச் சிறந்தது என்றும் திரு சற்குருநாதன் சொன்னார்.

#### கலைஞர்கள்

கடந்த ஞாயிறன்று ஜனாப்கள் முஸ்தபா, ஹூசேன் தின் பாடகி கே. எஸ் தனலட்சுமி, நடனராணி ரஜனி, நகைச்சுவையாளர் ஜிப்பி-கொக்கோ ஆகியோர் சரஸ்வதி மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்கள்.

கொழும்பு பிரபல வர்த்தகரும் தமிழ்ப் பிரமுகருமான அதிகார் செல்லமுத்து விழாவில் போஷகராகக் கலந்து கொண்டார்.

#### தலைமையுரை

அப்போது நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கிப் பேசிய சுதந்திரன் ஆசிரியர் திரு எஸ். டி. சிவநாயகம் கொழும்பில் நவீன வசதிகளுடன் கூடிய நல்ல மண்டபம் எதுவும் இல்லையே நாடகங்கள் நடத்துவதற்கு என்று வருத்தம் தெரிவித்ததோடு சகல வசதிகளும் உள்ள ஒரு மண்டபம் இல்லாததால் நிகழ்ச்சிகள் நடத்துவதில் கலைஞர்கள் அனுபவிக்கும் சிரமங்களைக் கூடியிருந்தவர்கள் பிரத்தியட்சமாகக் கண்டிருப்பார்கள் என்றும் சொன்னார்.

#### நிலம் கிடைத்தால்

கலை நிகழ்ச்சிகள் முடிந்ததும் திரு சற்குருநாதன், தமது மனதில் அந்த எண்ணம் இருந்தது என்றும் இனிப் பணியை விரைவில் தொடங்கப்போவதாகவும் மிக்க மகிழ்ச்சியோடு கூறினார். "விலை கொடுத்து வாங்குவதற்கு வெற்று நிலம் கிடைப்பதில்தான் சிரமம் இருக்கிறது. அது கிடைக்குமாயின் வேலை இலகுவாக முடிந்துவிடும்" என்றார் அவர்.

#### கலா நிகழ்ச்சிகள்

கலை நிகழ்ச்சிகளுள் ரஜனியின் சிலிமாப் பாணியிலான நடனம் எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்தது. ஜிப்பி—கொக்கோவின் 'குரங்கு நிகழ்ச்சி'யும் அப்படியே. பாடகி தனலட்சுமியும் ஜனாப் ஹூசேன்தினும் சுமாராகப் பாடினர்கள்.

சிவகெங்கைச் சீமை புகழ் ஜனாப் முஸ்தபா கோட்டும் சூட்டுமாக நின்று சிறிது நேரம் வெகு ஜோராகப் பேசினர் குறிப்பாக புரட்சி நடிகர் எம். ஜி. ஆரின் சிறப்பியல்புகள்பற்றியும், கலைஞர்களைக் கைதூக்கிவிட்டு ஆதரிக்கும் அவரது பண்பு குறித்தும் நன்றி உணர்வோடு கூறினர். வெவ்வேறு பாத்திரங்களின் குணசித்திர வேறுபாடுகளை விளக்கிக் காட்டுமுகமாக, அவர் நின்றபடியே அடிக்கொரு தடவை மாறி அருமையான நிகழ்ச்சி ஒன்றும் நடத்திக் காட்டினர்.

திரு கே. பாலச்சந்திரனும் ஜனாப் பாருக்கும் சேர்ந்து இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்.

நாடகம்:

# தீச்சுடர்

தீச்சுடர் என்ற நாடகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கமலா மோடி மண்டபத்தில் எஸ். எஸ். ஆர். நாடக மன்றத்தினால் நடத்தப்பட்டது. அன்று அது தந்த சூடு இன்னும் ஆறவில்லை. நமக்கே அப்படியானல் பெண்களைப் பெற்று கலைத்துறைத் தொண்டுக்கு அவர்களை அனுப்பி வைக்கும் நந் தமிழ்த் தாய் தந்தையருக்கு எப்படி இருக்கும்? எண்ணிப் பார்க்க முடியவில்லை இதை. கலைத்துறையில் கலக்கப்பட்டுவிட்டதே துளி விஷம்-ஏற்படுத்தப்பட்டுவிட்டதே களங்கம் என்பதையும் நினைத்துப் பார்க்கவோ, சகித்துக்கொள்ளவோ இயலவில்லை.

#### வரம்பு மீறக்கூடாது

எல்லாவற்றையும்சொல்ல இங்கு முடியாது. நடந்தது ஒன்றை மட்டும் தரலாம். இடைவேளைக்கு பின்னர் அடுத்து வந்த காட்சி. அழகான பெண் ஒருத்தியும் இரண்டு மூன்று ஆண்களும் சந்திக்கும் கட்டம். அதிலே தொட்டு நடிப்பதைக் குறை கூறவில்லை. சதா நெருக்கியடித்துக்கொண்டு முட்டி மோதி நிற்க முனைவதையும் ஒரேயடியாகத் தவிர்க்கச் சொல்லவில்லை. ஒருமாதிரியாகப் பேசுவதையும் அறவே கூடாது என்று கூற நாம் வரவில்லை. எல்லாம் வரம்பு மீறாமல் அளவோடு இருந்து பண்பும் பாதுகாக்கப்படுமானல் சரி

#### இது நடந்துவிட்டது மேடையில்

தீச்சுடர் நாடகத்தில் இவை மட்டுமா? இன்னென்றும் நடந்ததே! திரை விழும் கட்டத்தில் ஒருவர் பெண்ணின் கையைப் பிடித்துத் தமதுக்குக்கட்டுக்குள் வைத்துக்கொண்டு அவளை இழுத்துச் செல்கிறார். அப்போது சொல்கிறார், "நீ வா பிள்ளை. நம்ம உன்னே போயிடலாம்" என்று. எப்படி இருக்கிறது? சந்தர்ப்பத்தையும் சொல்லையும் செயலையும் ஒருங்கே பார்க்கும்போது பெண்ணைப் பெற்றவள் என்ன எண்ணுவாள்? தன்னுடைய பிள்ளையை நடிக்க அனுப்பியதே தப்பு என்று அவள் நினைப்பாளோ? அப்படி எல்லாப் பெண்களுமே எண்ணுவதாயின் நாடகக் கலைத்துறைக்கு அது நல்லதா?


மேடையில் பிரீ (Free) ஆக, அனாயாசமாக நடிக்கலாம் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் இந்த ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும்.

#### புதுமை

தீச்சுடர் நாடகத்தின் போது புதுமையானதும் வரவேற்கத்தக்கதுமான ஒரு நிகழ்ச்சியும் நடந்தது. நடத்த இருக்கும் நாடகம் ஒன்றிலிருந்து ஒரு காட்சியை இடைவேளையின் போது நடித்துக் காண்பித்தார்கள்.

தீச்சுடர் நாடகத்தைப் பற்றிய விமர்சனம் நாடகம் நடந்தபோதே சோமசுந்தரம் என்பவரால் நாடக நிர்வாகிகளின் வேண்டுகோட்படி தரப்பட்டது. திரு மணவைத்தம்பி தலைமை வகித்து நிகழ்த்தினர்.

—கே. கே. ஆர்.



எட்ட இருந்தோம், ஏங்கினோம், கிட்ட வந்துவிட்டோம், கூடிவிட்டோம். இனி ஏது கவலை இந்த வெட்ட வெளியில்? பாவை விளக்கு என்ற படத்தில் சிவாஜிகணேசனும் கமலாவும்,

## சேரன் எடுத்த சிலை

சேரன் எடுத்த சிலை என்ற நாடகம் செண். ஜோசப் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் மேற்படி சங்க ஆண்டு விழாவின் போது கடந்த ஞாயிறன்று நடித்துக் காண்பிக்கப்பட்டது.

மேற்படி கல்லூரி ஆசிரியர் திரு. இராசலிங்கம் எழுதித் தயாரித்த இப் பண்டைத் தமிழ் வரலாற்று நாடக நிகழ்ச்சியில் வண. தனிநாயக அடிகளாரும் கலந்து கொண்டார்.

பழந் தமிழ் மக்களின் பண்பு கெடாத வண்ணம் பாது காத்து உணர்ச்சியோடு நாடகம் நடத்தப்பட்டது எனபதை அடிகளார் பேசும் போது குறிப்பிட்டார். நாடகத்தின் சிறப்பு குறித்தும் மாணவ நடிகர்களின் திறமை குறித்தும் அடிகளார் அவர்களுக்கு புகழ் மாலை சூட்டினர். சிவாஜிகணேசன் தங்கவேலு போன்றோர் இந்தக் கல்லூரியில் இருக்கிறார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறது என்றார் அவர். நகைச்சுவை நடிகர் சந்திரபாபு செண். ஜோசப் கல்லூரி பழைய மாணவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகத்தில் சிறப்பாக நடித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## தியாகராஜ கான சமாஜம்

ஈழ நாட்டின் கலை வளர்ச்சி கருதி அதற்காக ஒரு சங்கம்—தியாகராஜ சமாஜம் என்ற பெயரில் கடந்த 5-11-59-ல் தொடங்கப்பட்டுள்ளது. திரு. கே. வாசுதேவனைத் தலைவராகவும் திரு. கே. கே. அச்சுதனைச் செயலாளராகவும் கொண்டுள்ள இச் சங்கம் குறிப்பாக இசை, நாட்டியம், நாடகம் ஆகிய முத்துறைகளிலும் தன்னலான தொண்டாற்றும் என்று தெரிகிறது.

இவ்வாண்டு சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் விழா வெகு சிறப்பாகச் சங்கத்தால் கொண்டாடப்படவிருக்கிறது என்றும் அதற்கு பொது மக்களின் ஆதரவையும் சங்கீத வித்துவான்களின் ஒத்துழைப்பையும் சங்கம் வேண்டி நிற்கிறது என்றும் செயலாளர் திரு. அச்சுதன் தெரிவித்தார்.

உள்ளூர், வெளியூர் கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகளை நடத்தச் சங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் திரு. அச்சுதன் மேலும் சொன்னர்.



ரூபாய் நோட்டை நீட்டும் பத்மினி பிரியதரிசினிக்கும் கழுத்தை நீட்டும் காகா ராதாகிருஷ்ணனுக்கும் ஒரே குஷி! குலதெய்வம் ராஜகோபாலுக்கு மட்டும் ஏன் இந்த வாட்டம்? பாண்டுரங்கா புரொடக்ஷன்ஸ் மஹாலக்ஷ்மியில் ஒரு காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட விமர்சனம்:

## ஹாங் டு ஆ

மலாயாவிலிருந்து இங்கு வந்த முதல் பேசும் படமான ஹாங் டு ஆ கொழும்பு நவா தியேட்டரில் காண்பிக்கப்படுகிறது. றன் றன் ஷோ ஸ்தாபனத்தார் தயாரித்து வெளியிட்டிருக்கும் இப்படம் சுமார் இரண்டு மணி நேரம் ஓடுகிறது.

### கருத்து

மலாக்கா(மலேயா)நாட்டு சுல்தான் மன்னருக்கு பூரண விசுவாசமாகத் தன் வாழ்க்கை பூராவும் நடந்த போர் வீரன் ஹாங் டு ஆவின் கதை சரித்திரப் பின்னணியில் தத்ரூபமாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. சுல்தான் ஆணை கிடைத்ததும் தமது ஆப்த நண்பரில் ஒருவனை ஜவாத்தை ஹாங் டு ஆ கொன்று விடுகிறான் மெலோன் என்ற பெண் மீது தாம் கொண்ட காதலையும் துறந்து விடுகிறான் அவன். ஜவாத்தும் மேலோனும் தம் பொருட்டு தம்முடைய உயிரை இழந்தனரே என்பதை அறிந்ததும் ஹான் டுவா மிக்க கவலை கொள்கிறான். ஆயினும் ஒன்று கேட்கிறேன்: "நான் செய்தது சரியா? அல்லது ஜவாத் செய்தது சரியா?" இந்தக் கேள்வியோடு படம் முடிவடைகிறது.

### வெற்றியா? தோல்வியா?

பதிலைப் படம் பார்ப்பவர்கள் சொல்லவிட்டு வைத்திருக்கிறார்கள். ஜவாத் செய்ததுதான் சரி என்றுசொல்லிவிட்டால் ராஜ விசுவாசத்தையும் நாட்டுப் பற்றையும் வலியுறுத்துவதற்கென்றே தயாரிக்கப்பட்ட மேற்படி மலாயாப் படம் தோல்விப் பட்டியலில் சேர்ந்துவிடும். அதற்காக உண்மையை மறைக்கக்கூடாது அல்லவா!

### இருளும் வெளிச்சமும்

ஈஸ்ட்மன் வர்ணத்தில் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக்காட்சிகளில் 'இருள்' அதிகமாகிவிட்டது. போகப் போகத்தான் 'வெளிச்சம்' வருகிறது கதையும் விறுவிறுப்பாகச் செல்கிறது. படத்தில் நடிப்பைக் காட்டிலும் சண்டை (கிறிஸ் கத்திச் சண்டை) அதிகமாக உள்ளது; மயிர்க் கூச் செறியும் கட்டங்கள் பல உள. இரண்டொரு பாடல்கள் வருகின்றன. இனிமை பொலிகிறது அவற்றில். நடனமும் மலாயப் பாணியில் சுமாராக இருக்கிறது.

### எழுத்தில் தாராளம்

காட்சி அமைப்புகள் குறைவு பின்னணி இசையும் கம்மி. மொத்தத்தில் சிக்கனமான தயாரிப்பு. எழுத்தில் மட்டும் தாராளம் காட்டப்படுகிறது படம் ஆரம்பித்து முதல் ஐந்து நிமிடங்கள்வரை நிசப்தமான நிலையில் மலாய எழுத்துக்களில் வாசகங்கள் திரையில் பளிச்சிடுகின்றன. பின்னர்தான் காட்சிகள். காட்சிகள் நடக்கும்போது ஆங்கிலத்தில் அடியில் விளக்கம் தரப்படுகிறது. அது நன்கு வாசித்து அறியக்கூடிய அளவு தெளிவாக இல்லாவிட்டாலும் கதையைப் புரிந்து கொள்ள எப்படியோ உதவுகிறது. நமக்கு முதல் படமாயிற்றே ஹாங் டு ஆ, அதனால் பார்க்கலாம்.

நாடக விமர்சனம்:

## பவளக்கொடி

கடல் கடந்து வந்த கோஷ்டி ஒன்று-மதுரை ஸ்ரீ சுந்தரகான நாடக சபா நடத்திய பவளக்கொடி நாடகத்தைக் கடந்தவாரம் ஜிந்துப்பிட்டி முருகன் தியேட்டரில் பார்க்கக் கிடைத்தது. அப்போதே சந்தேகம் தலையெடுத்தது. விளம்பரப்படுத்தப்பட்டபடி இந்தக் கோஷ்டி உண்மையில் நாடகக் கோஷ்டிதானா? நாடகம் அப்படி நம்ப வைக்கவில்லை. தப்பு, நடந்ததை நாடகம் என்றே சொல்லத் தோன்றவில்லை.

### நாடகக் குடும்பம்

கோஷ்டித் தலைவர் கே. என். கருணாகரம் பிள்ளையின் நட்டுவாங்கமும் பாடலும் உரையாடலும் அவரை நாடக உலகிக்கு புதியவர் என்று அல்ல உபயோகமற்றவர் என்றே காட்டின. அவரது மனைவி சுந்தராம்பாள்-24 வருட நாடக அனுபவம் உடையவர் என்று சொல்லப்படுகிறது-கிருஷ்ணராகத் தோன்றினார். தோற்றத்தாலும், பாட்டாலும், பேச்சாலும் கூடியிருந்தோர் மானஸீகமாகக் கிருஷ்ணா மீது வைத்திருந்த நல்லெண்ணத்தையும் மதிப்பையும் அடித்து நொருக்கிவிட்டு மேடையையும் அதிர வைத்துவிட்டுச் சென்றார்.

இவர்கள் இருவரதும் மகன் கண்ணன்-12 வயதுப் பையன். மிருதங்கம் முழக்குகிறான். வயதுக்கு அவன் வேலை மட்டும் தேவலை. பலே!

### திருமதியும் குமாரியும்

'நாடகக் குடும்ப'த்தின் கதைஇத்தோடு முடிந்ததால் அடுத்து திருமதி வி. ராஜம் வருகிறார். இல்லை, 'தாட் பூட்' என்று காலை உதைப்பதோடும், வாளை உறையிலிருந்து அரைவாசி இழுத்து மறுபடியும் சத்தத்தோடு செருகிக்கொள்வதோடும், 'ஆப் ஊப்' என்று சிறுவதோடும் அவர் பாடு சரி.

### மாரியப்பாவும் காந்திமதியும்

குமாரி நிர்மலாதேவி உடலழகை மூலதனமாக வைத்துக்கொண்டு மேடையில் அவசியமில்லாமல் நின்றும் நடந்தும், நெளிந்தும் சபையைக் கவரப் பார்க்கிறார்.

இசைத் தென்றல் மாரியப்பா பாடத்தான் செய்கிறார் ஆனால் இசைத்தட்டுகள்மூலம் நமக்கு அறிமுகமான இசைத் தென்றல் மாரியப்பாவை மேடையில் காண முடியவில்லை. மேடையில் தோன்றி அவர் பாடியதைக் கேட்ட பின்னர் அவருடைய பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகளைக் கேட்பதும் சங்கடமாக இருக்கிறது. எதற்கும் சுயமாகப் பாடவேண்டுமே! பாட்டு என்றதும் திருமதி வி. என். காந்திமதியின் ஞாபகம் வருகிறது. ஆர்மோனியம் வாசித்த அவர் செய்த தவறு பின்பாட்டுப் பாடியதுதான். ஐயோ கண்ணராவியே, கீச்சுக் குரலில் மூச்சுத்திணறி அவர் பாடியது பரிதாபம்!

### நடிப்பு இல்லை

இப்படி எல்லோருடைய பாட்டையும் பேச்சையும் பற்றிச் சொன்னால், நடிப்பு...? மன்னிக்கவும். அப்படி நடிப்பு என்று ஏதும் நாடகத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்ததெல்லாம் "பம்மாத்து"தான். சுளையாகப் பணத்தை எண்ணிக் கொடுத்துப் பார்க்கப் போனவர்கள் ஏமாந்ததுதான் மிச்சம்.

மேற்படி கோஷ்டியார் இன்னும் சில நாடகங்கள் கொழும்பிலும் வெளியூர்களிலும் நடத்த இருப்பதாகத் தெரிகிறது காசைக் கரியாக்க விரும்புபவர்கள்—வேலையற்றவர்கள் இடத்துக்கு முந்தலாம். இதுதான் நாம் சொல்லக்கூடிய புத்திமதி.

—கே. கே. ஆர்.


வியாபாரத்திற் கழகு
விளம்பரம் செய்தல்

கொழும்பில் 14-வது வாரமாக ஓடுகிறது!
கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
அதிக பணச் செலவில்
தயாரிக்கப்பட்ட அதிஉன்னத படம்!
சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
ஓ. ஏ. கே. தேவர்,
எஸ். வரலக்ஷ்மி, பத்மினி,
ராகினி, முத்துலட்சுமி
நடித்த
வீரபாண்டிய
கட்டபொம்மன்

செல்லமஹால் திரையில்
5-வது வாரம்!
பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன்,
ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசனா
நடித்த

பாண்டித்தேவன்

4-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!
முருகன் (ஜிந்துப்பிட்டி) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) லிபர்ட்டி (பதுளை)
ஆகிய தியேட்டர்களில்

பாக்கிய
தேவதை
தன் தங்கையின் நல் வாழ்வுக்காக தன்
வாழ்வை தியாகம் செய்தாள் நங்கை
ஜெமினி கணேசன்,
சாவித்திரி, நம்பியார்,
ராஜசுலோசனா, கோபால்
நடித்தது
பின்னணி: கண்டசாலா — திருச்சி லோகநாதன் — ஜமுனாராணி — சுசிலா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க தமிழ்!

8-11-59 சுதந்திரன் வளர்மதியில் பிரசுரிக்கப்பட்டிருந்த சகோதரன் சோ. இராசேந்திரன் 'அன்பழைப்பைக்' கண்டு மனம் உவகை கொள்கின்றேன்.

ஆம்! தொன்மைச் சிறப்பு வாய்ந்த நாடுகளிலே, மிகத் தொல் பெருமை பெற்ற நாடு நம் தமிழ் நாடு! பழமைப் புகழ் செறிந்த மொழிகளிலே மிக வளம்பெற்ற மொழி நமது மொழி! இனங்களிலே மிகப் பக்குவம் பெற்ற இனம் நமது இனம்! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியவை நம் தேசக் கலைகள்!

இப்பெருபேறுபெற்றநாட்டிலே இனத்திலே-மொழியிலே உதித்த நாங்கள் அவற்றை வளர்க்க முன்வர வேண்டுவது அவசியம். அது எங்கள் கடமை. அதைச் செய்ய உவகை கொள்கிறோம்! பெருமை கொள்கிறோம்! மலையே பெயர்ந்து வந்தாலும் மனந் தளரோம்!

நாங்கள் இதுவரை 2661. பேர் "சுதந்திரன்", "மாணவர் மன்றத்தில்" அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளோம். நாங்கள் சகோதரன் சோ. இரா.வின் அன்பழைப்பை எங்களுயிரினும்மேலான தமிழ்த் தாயின் அன்பழைப்பாக ஏற்கின்றோம்!

—மு. கனகராஜா

## அறிவு

படித்தோரெல்லாம் அறிஞர்களல்லர். படியாதோரெல்லாம் அறிவிலிகளுமல்லர். படித்த முட்டாள்களுமுளர். படியாத புத்திசாலிகளுமுளர். மக்களுக்கு இயற்கையாகவே ஒருவித அறிவு இருக்கிறது. அதுவே ஆறுவது அறிவான பகுத்தறிவு. இதை நூல்களில் படித்துப் பெற வேண்டியதில்லை. எனினும் இப்பகுத்தறிவைப் பெருக்கி மேலும் விளங்கவைக்க நூற் கல்வி வேண்டியதுதான். எதைப் படித்தாலும் அதையிட்டுச் சிந்தித்து ஆராய்ந்து அதன் உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். அதுதான் அறிவு.

படித்ததை அப்படியே நம்புவது அறிவன்று. "எப்பொருள் எத்தன்மைத்தாயினும்-எப்பொருள் யார் யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும், "எவ்வதுறைவது உலகம் உலகத்தோடவ்வதுறைவது அறிவு" என்றும், "எண்பொருளவாகச் செலச் சொல்லித்தான் பிறர்வாய் நுண்பொருள் காண்பது அறிவு" என்றும், இன்னும் பல படக் கூறியும் அறிவைப் பற்றி நன்கு விளக்குகிறார் நமது வள்ளுவப் பெருந்தகையார். எவ்வளவு படித்தாலும் உலகோடு ஒட்டி வாழ முடியாவிடில் அவ்வறிவால் பயனில்லை. எனவே எதிலும் சிந்தனை தேவை. ஆராய்ச்சி அவசியம். உண்மை வேண்டும். உலகோடு வாழ வேண்டும். பிறர் கேட்க உரைத்து அவரிடமிருந்தும் யாம் பெற வேண்டும் இத்தன்மைகளுடையதே அறிவு. இவ்வறிவு பெற்றவனே அறிஞன். உண்மை அறிவு வளர்க!

—இரா




# தளபதி எங்கே? சொல் தாயே!

அன்பின் அணிகலனே! பண்பின்பனிமலையே!! பாசத்தின் பாசறையே!!! அம்மா! நீ பெற்ருய். பேணிஞய். வளர்த்தாய். ஈன்ற பொழுதில் 'அம்மா' என்று கன்னித் தமிழிலே அழைத்தேன். நீயோ! "கண்ணே மணியே! கற்கண்டே! கண் வளராய்!...என்று தேன் சொட்டும் தமிழிலே கூறிஞய். "தமிழ்" என்ற இனிமையான பாலைஅன்றிருந்தே ஊட்டத் தொடங்கிஞய். பருகினேன். பைந்தமிழிலே மழலை மொழி பேசிக் குறு நடை பயின்றேன். தமிழகப் புழுதியிலே தவழ்ந்து விளையாடினேன். தடுக்கிவிழுந்தேன். சற்றுத் தெம்பு பெற்றுத் துள்ளியோடும் பள்ளிக் குழந்தையாக மாறினேன். அழகு தமிழிலே 'அ' என்று படித்தேன். அத்தனை வகுப்புகளையும் கடந்தேன். பரீட்சையும் எழுதினேன். எல்லாம் நீ ஊட்டிய அமுதத் தமிழிற்ருன். தேர்வும் அடைந்து விட்டேன்-அப்பொழுதுதான்.

மகனே நீ கேள் என்ருய்! கேட்டேன் தமிழ்த்தாயே! "நான் அடையும் துன்பத்தை நீ காணவில்லையா? நீயும் ஒரு கன்னித் தமிழ்க் காளைதானே! உன்னுடலில் ஓடும் இரத்தமெல்லாம் உறைந்து விட்டதா? உணர்ச்சி நரம்பெல்லாம் உக்கிப் போய் விட்டனவா? அ...ம்...மா...!போதும்.இரத்தம் துடிக்கிறதம்மா! புயம் புடைத்தெழுகிறதம்மா! என்ன செய்யச் சொல்! கட்டளை... மகனே! வீரத்தின் விளை நிலத்தில் விளைந்த நித்திலமே! போதுமடா உன் துடிக்கும் ஆர்வம்!

உரிமைப் போர் தொடங்கப்போகிறது. கோப்பாய்க் கோமான் கொட்டும் முரசின் பின்னே கொடியேந்தித் தளபதியாய்ச் செல்வார் ஆம் மகனே! அந்தத் தளபதிக்குப் பின்னல், தண்டமிழ் வீரக்காளையர் செல்வர். அவர்களுடன் செல்லடா கண்ணே! உச்சி முகர்ந்து உணர்ச்சி யூட்டிஞள் தமிழன்னை!

பல நாட்கள் வாரமாகி மாதமாகி வருடமாகிமறைந்தன.

அன்று ஒருநாள்! சோகத்திலே மூழ்கிக் கிடந்தது ஈழகம். எங்கும் ஒரே அமைதி. எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுப் பறந்தன. இதைக் கண்டான் அந்தத் தமிழ்த் தாயின் புதல்வன். ஓடிஞன் எங்கே? தமிழ்த் தாயைத் தேடி!

அன்னையின் அஞ்சனக் கண்கள் கண்ணீரைப் பொழிந்தவண்ணமிருந்தது. துடித்தான் இளைஞன். ஏன் தாயே அழுகிருய் சொல்! அவள் அதரங்களிலிருந்து "தளபதியைத் தென்திசைக் கிறைவன் கவர்ந்தனன்" என்று வெளிப்பட்டது.வீரக் காளையின்காதில் இது புகவேயில்லை. தளபதி எங்கே? சொல் தாயே! என்ற குரல் மென் காற்றிலே மிதந்து வந்தது.

—சித்தாண்டிச்சபா

# நீல நிற இலைகள்

கத்யாவிடம் இரண்டு பச்சைக் கலர்ப் பென்சில்கள். இருந்தன. ஆனல் லேனுவிடம் ஒன்று கூட இல்லை.

"தயவுசெய்து உன்னுடைய பச்சைக் கலர்ப் பென்சிலை கொஞ்ச நேரத்திற்குக் கொடுக்கமாட்டாயா?" என்று கத்யாவிடம் லேனு கெஞ்சினுள்.

"என் அம்மாவைக் கேட்டுவிட்டு கொடுக்கிறேன்" என்ருள் கத்யா.

மறுநாள் காலை இரண்டு சிறுமிகளும் பள்ளிக்கூடத்திற்கு வந்தார்கள். "உன் அம்மாவின் அனுமதியைப் பெற்று விட்டாயா?" என்று லேனு கேட்டாள்.

"ஆமாம். ஆனல் என் அண்ணனிடம்கேட்கவில்லை" என்று கூறி பெருமூச்சு விட்டாள் கத்யா.

"சரி,உன் அண்ணனிடமும் கேள்" என்ருள் லேனு.

மறுநாள் பள்ளிக்கூடம் வந்ததும், "உன் அண்ணனுடைய அனுமதியைப்பெற்று விட்டாயா?" என்று கத்யாவிடம் கேட்டாள் லேனு.

"ஆமாம். நீ எங்கே கலர்ப் பென்சிலை ஒடித்துவிடுவாயோ என்று பயமாயிருக்கிறது."

"நான் மிகவும் எச்சரிக்கையாயிருப்பேன்" என்று உறுதி கூறினுள் லேனு.

"பென்சிலை நீ சீவக்கூடாது. அதிகமாக அழுத்தி எழுதாதே; வாயில் வைக்கக் கூடாது; ரொம்ப அதிகம் உபயோகிக்கக்கூடாது."

"மரங்களிலுள்ள இலைகளுக்கும், புல் தரைக்கும் பச்சை வர்ணம் தீட்டவேண்டும். அவ்வளவுதான்" என்ருள் லேனு.

"அது ரொம்ப அதிகவேலையாச்சே" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறினுள் கத்யா.

லேனு அவளை ஒரு நிமிடம் பார்த்தாள். பென்சிலை வாங்கிக்கொள்ளாமலேயே [illegible] திருப்பிக் கொடுக்கிட்டுவிட்டாள். "லேனு, இந்தா பென்சில், வாங்கிக்கோ" என்று கூவிக்கொண்டு பின்னல் ஓடிஞள் கத்யா.

"எனக்கு வேண்டாம்" என்று மறுத்துவிட்டாள் லேனு.

"ஏன் உன்னுடைய படத்தில் இலைகளெல்லாம் நீல நிறமாயிருக்கின்றன?" என்று வகுப்பில் லேனுவை ஆசிரியர் கேட்டார்.

"என்னிடம் பச்சைக் கலர்ப் பென்சில் இல்லை."

"உன்னுடைய சிநேகிதியிடம் ஏன் கேட்டுவாங்கிக் கொள்ளவில்லை?"

லேனு பேசாமல் இருந்தாள். கத்யாவின் முகம் வெட்கத்தால் சிவந்துவிட்டது.

"நான் கொடுத்தேன். ஆனல் அவள் வாங்கிக் கொள்ளவில்லை" என்ருள் கத்யா.

இரண்டு சிறுமிகளையும் ஆசிரியர் மாறி மாறிப் பார்த்துவிட்டு, "ஒரு பொருளை மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது, அதை அவர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் கொடுக்க வேண்டும்" என்று கூறினர்.

-வி. அசெயேவா

ஔவை அமுதம்: 14

## அஃகஞ் சுருக்கேல்

அஃகம் என்பது தானியம் அல்லது தானியம் விளைவிக்கும் நிலமென்றும் சுருக்கேல் என்பது குறைக்காதே என்றும் பொருள்படும்.

அதிக இலாபத்துக்காகத் தானியத்தைக் குறைக்கும் வியாபாரிகள் அநேகரைக் காண்கிறோம். பணத்துக்கு ஆசைப்பட்டு இவர்கள் இப்படிச் செய்கிருர்கள். தகாத வழியில் சேர்க்கும் பணம் எம்மிடம் ஒருபோதும் தங்கி நிற்காது. அதை நாம் எப்படிப் பெற்ருேமோ அதே போல் இழக்க நேரிடும்.

தன் வயிற்றிலே விளைந்த தானியத்தை அநீதியாக விற்கும்போது நாம் பூமகளை இம்சிக்கிறோம். அதனல் அவள் எம்மில் கோபமும் வருத்தமும் கொள்ளுவாள். நாம் அவளை இம்சிக்க அவள் எம்மை வஞ்சித்தால் மக்கள் பட்டினியால் மடியவேண்டியதுதான்!

நிலமகள் பொறுமையும் அன்புமுடையவள். அவள் பொறுமையை நாம் சோதிக்கக்கூடாது. அவளை அணுகிப் பாடுபடுபவர்கள் நிச்சயம் பலன் பெறுவர். அவளின் கடாட்சம் கிடைத்துவிட்டால் எமக்கு வேறு கவலையே ஏற்படாது.

அதனல், எம்மிடமிருக்கும் நிலத்தை நாம் குறைத்துக் கொள்ளக்கூடாது. பாகப் பிரிவினைகளால் பொன் விளையும் நிலம் துண்டுபட்டுப் பங்கப்படுவதை நாம் உணர்வதில்லை. காலப்போக்கில் துண்டுபட்ட நிலங்கள் ஒருவருக்கும் உபயோகப்படாத அளவுக்குச் சிறுத்துவிடும். குடும்பங்களுக்கிடையே நிலம் பிரிந்துகொண்டுபோக நாட்டில் பஞ்சமும் பட்டினியும் உண்டாகும். இதை நாம் இப்பொழுதாவது உணரவில்லையாயினும் ஔவை, அப்பொழுதே உணர்ந்துவிட்டாள். அதனல் அவள் விடுத்த எச்சரிக்கை தான் 'அஃகஞ் சுருக்கேல்.'

"காணி நிலம் வேண்டும்..."

—பாரதி.

—ஏ. ஜீ. ஆனந்தம்

(குறிப்பு: சென்றவாரம் ஔவை அமுதம் தொடர் கட்டுரையின் 13-வது கட்டுரை என்பதற்குப் பதிலாக 14-வது கட்டுரை என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது.)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 8.

பெயர்...............................................................

பாடசாலை...............................................................

விலாசம்...............................................................

...............................................................

............................................ ............................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

# வளர்மதி புதிய மருமக்கள்

2640. க. அ. அரிராசசிங்கம், டிக்கோயா.

2641. செல்வி கே. தமயந்தி, தாமரைக்கேணி.

2642. யோ. மார்க்கண்டு, நிலாவெளி.

2643. கந்தையா பாலச்சந்திரன், சாவகச்சேரி.

2644. செல்வி க. தவமணி தேவி, மண்டூர்.

2645. க. இராசையா, கைதடி.

2646. ச. சுப்பிரமணியம், கைதடி.

2647. கு. திருச்செல்வக்குமாரன், திருகோணமலை.

2648. ச. சுப்பிரமணியம், லப்பந்துறை.

2649. இ. செபமாலை, மட்டக்களப்பு.

2650. ஏ. ஆதம்லெவ்வை, ஆமன்கோணர்.

2651. க. கணேசன், புங்குடுதீவு.

2652. சு. செல்வராஜா, திருநெல்வேலி கிழக்குடி.

2653. எம். வை. முஹம்மது இஸ்மயில், காத்தான்குடி.

2654. செல்வி யசோதரா சின்னத்துரை, உரும்பராய்.

2555. செல்வி வை. நாகம்மா மணிபல்லவம் (நயினுதீவு) வடக்கு.

2656. த. பாலசுப்பிரமணியம், கைதடி கிழக்கு.

2657 ப. பரந்தாமன், கலஹா.

2658. செல்வி ச. மல்லிகா லோகநாயகி, அச்சுவேலி.

2659. க. வைத்திலிங்கம், யாழ்ப்பாணம்.

2660. டானியல் ஜெயநாயகம், நுகேகொடை.

2661. செல்வி ஏ. ருெத்மணி சேவியர் கிரிளப்பனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### சட்டக் கல்லூரி தமிழ்க் கழகம்

"தமிழரிடையே ஒற்றுமையில்லாத காரணத்தினுற்ருன் இன்று எமக்கு இந்த நாட்டில் இவ்வளவு இழிநிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களிடையே அபிப்பிராய பேதங்களும் ஒற்றுமையின்மையும் வேறெந்தச் சமூகத்திலும் காணப்படாத அளவிற்கு நிலவி வருகின்றன. இந்த அபிப்பிராய பேதங்கள் ஓரளவிற்காவது நீங்க வேண்டும்; ஒற்றுமை வளர வேண்டும் தாழ்ந்து கிடக்கும் தமிழினத்தின் எதிர்கால சுபீட்சம் இன அடிப்படையிலே ஏற்படக் கூடிய ஒற்றுமையிலே தான் தங்கியிருக்கிறது. இந்த ஒற்றுமையை வளர்ப்பதற்குச் சட்டக் கல்லூரி மாணவர்கள், பெருமளவுக்கு உதவி செய்யக் கூடிய ஆற்றலும் அறிவும் நிரம்பியவர்கள். அந்தக் கடமையை நீங்கள் நிறைவேற்றுவீர்களென்பது என் பூரண நம்பிக்கை" இவ்வாறு இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ்க் கழகத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய இ. ச. க. கழகத் தலைவர் திரு. அ- குமரகுரு குறிப்பிட்டார்.

கூட்டத்திற்குச் சகலதமிழ் மாணவரும் சமுகமளித்திருந்தனர். வழமைபோல் காரசாரமான பல விவாதங்களும் நடைபெற்றன. இறுதியில் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 18-11-59 இல் கூட்டப்பட வேண்டுமென்றும் கழகத்தால் பிரசுரிக்கப்படவிருக்கும் "நீதி முரசு" டிசெம்பர் மாதத்தில் வெளியிடப்படவேண்டுமென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. முதன் முதலாக இவ் வருடம் பிரசுரிக்கப்படவிருக்கும் இச் சஞ்சிகையில் பல வழக்கறிஞர்களினதும் சட்ட வல்லுநர்களினதும் கட்டுரைகள் இடம் பெறுமெனத் தெரிய வருகின்றது.

---

### வாலிபர் நாணய சங்கம்

வாலிபர் நாணய சங்க செயற்குழு கூட்டம் கடந்த 7-11-59-ல் சாஞ்சி ஆராச்சி தோட்டத்திலுள்ள சங்க அலுவலகத்தில் செயலாளர் திரு வி. இ. எம். சுப்பையா தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் காலஞ்சென்ற திரு. எம். கே. தியாகராஜபாகவதரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

---

### கரப்பந்தாட்ட நிலைய திறப்பு விழா

"ஒளிபடைத்த கண்ணினுய் வா வா வா — உறுதி கொண்ட நெஞ்சினுய் வா வா வா—என்று அமரகவி பாரதி அன்று பாடினுன். தாழ்ந்து வரும் எம் சமுதாயத்தைச் சீர்தூக்கி விடுவதற்கு உடல் வலியும் உள்ளத் திடமும் படைத்தவாலிபர்கள் தேவை. கூன் விழுந்த முதுகும் கூடுபாய்ந்த நெஞ்சும்—நமக்கு வேண்டவே வேண்டாம்."

இவ்வாறு கடந்த விஜய தசமித் திருநாளன்று—புங்குடுதீவு இளைஞர் கழகத்தினரினுதரவில்—அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்ட கரபந்தாட்ட நிலையத் திறப்பு விழாவில் பந்தாட்டத்தை ஆரம்பித்து வைத்துப்பேசிய புங்குடுதீவு வைத்திய அதிகாரி திரு. எஸ். பசுபதிராஜா குறிப்பிட்டார். நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய புங்குடுதீவு அரசினர் மகா வித்தியாலய உதவி அதிபர். திரு. எஸ். அமிர்தலிங்கம் 'எந்த ஒரு நாட்டிலும்' டாக்டர்கள் தொகை அதிகரித்து வருவது விரும்பத்தக்க நிகழ்ச்சியல்லவென்றும் உடற்பலமற்ற வாலிபர்கள்—சமுதாயத்தில் நடைப்பிணமாகக் கருதப்படுவார்களென்றுங் கூறினுர்.

புங்குடுதீவு தபாற் கந்தோரதிபர் திரு. யோ. த. சேனுதிராஜா கூட்டத்துக்குத் தலைமை தாங்கினுர்.

இருபிட்டி சன சமூக நிலையக் கோஷ்டியினர்கட்கும்; இளைஞர் கழகக் கோஷ்டியினர்கட்குமிடையில் சினேகபூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியொன்று நடைபெற்றது.

வெற்றி பெற்ற சன சமூக நிலையக் கோஷ்டியினர்கட்குத் திருமதி பசுபதிராஜா பரிசு வழங்கினுர்.

பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை, புங்குடுதீவு கிராமச் சங்கத் தலைவர் திரு. க. செல்வத்துரை வித்துவான் பொன். கனகசபை ஆகியோருட்பட அநேகர் சொற்பொழிவாற்றினர்.

---

### வ. மே. மா. த. ச. பிரியாவிடை

நாற்பது வருட கால ஆசிரிய சேவைக்குப் பின் 31-10-59 உடன் இளைப்பாறும் எத்தாலை உரோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஜே. பீற்றர் டீ சோஸா விற்கு வடமேல் மாகாணத் தமிழாசிரிய சங்கத்தின் சார்பில் அணிமையில் பிரியாவிடையளிக்கப்பட்டது.

மேற்படி பாடசாலை மண்டபத்தில் சலாபமேற்றிராசனக் கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமைக்காரர் அதி வண வி. மைக்கல் பெரேரா சுவாமியாரின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஆசிரியர் திரு. லியாண்டர்லோவின் தமிழ் மொழி வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பிக்கப்பட்டமேற்படி கூட்டத்தில் சங்கத் தலைவர் சங் சகோதரர் டப்ளியூ. எஸ். பீரிஸ் விழா நாயகர்க்கு மாலை சூட்டி வரவேற்புரை நிகழ்த்தினுர். அடுத்துக் காரியதரிசி திரு. வி. எஸ். பிள்ளையவர்களால் அழகிய சித்திர வேலைப்பாடமைந்த வாழ்த்துப் பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது. தனுதிகாரி திரு. எம். நி. லெம்பட் சங்கச் சார்பில் விலைமதிப்புள்ள உபசாரப் பொருளொன்றை வழங்கியபின், திருவாளர்களான எஸ். எஸ். றெட்றிக்கு, எஸ். ஏ. பிள்ளை, டப்ளியூ. விக்டோறியான் பெர்ணேண்டு ஆகியோரும், சலாபமேற்றிராசனச் சோமா விருத்திச் சங்கத் தனுதிகாரியும் ஆசிரியரின் குணநலன்கள் சிறந்த சேவைகளைப் "பாராட்டிச்—சொற்பொழிவுகளாற்றினர். பிரியாவிடை நாயகர் ஆசிரிய சங்கத்தினர்க்கு நன்றி பாராட்டிப் பேசியதும், சிற்றுண்டி உபசரணையுடன் கூட்டம் முடிவெய்தியது.

---

### ஐ. ச. சே. இ. கலவன் இராப்பாடசாலை மாணவர் சங்கம்

ஐக்கிய சகாய சேவா இலவச இராப் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மாணவர் சங்கக்கூட்டம் மாணவர் தலைமன்ற சார்பில் கடந்த 7-11-59-ல் மன்றத் தலைவர் அ. ஆ. சுமனதா[illegible] யில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. காரியதரிசி ஜே. அகுஸ்தீன் பர்ணந்து, பொக்கிஷதார் எஸ். தியாகராஜா, டைரக்டர். பி. எஸ். கிருஷ்ணகுமார், மாணவ, மாணவிகளான வ. சூசை அந்தோணி, ஆ. மயில்வாகனம், சு. மாணிக்கம், லாரன்ஸ் லியோ, ச. கந்தநாதன், ரா. ஜோசப், ச. நாகேஸ்வரி, ஜெயமணி ஆகியோர் பல அரிய கருத்துரைகளை வழங்கினர்.

---

### மாணவர் முன்னேற்ற மன்றம்

"தனி மொழி வைத்துத் தரணி புகழும்படி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். வாழ்ந்த இனம் இன்று வீழ்ந்து கிடக்கின்றது. மேலும் இந்தவீழ்ச்சிக்கு தமிழர்களும் [illegible]ருவியாக இருப்பதா? ஏன் [illegible]ந்த இழி நிலை?" இவ்வாறு செல்வன் க. சுதர்சன் அணிமையில் நடைபெற்ற கொழும்பு யூனியன் கல்லூரி மாணவர் முன்னேற்ற மன்ற பொதுக் கூட்டத்தில் தமிழும்—தமிழரும் என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறினுர்.

கூட்டத்தில் செல்வர்கள் திரு. ஏ. சாமுவேல், திரு. எஸ். மகாலிங்கம், திரு. எஸ். பிரமநாயகம், திரு. எஸ். குணரெட்டினம் ஆகியோரும் பேசினர்.

---

### சங்கானை பட்டின சபை

சங்கானை பட்டின சபைத் தலைவர் திரு. நா. முத்தையா கீழ்கண்ட கடிதத்தை சுகாதார மந்திரிக்கு அனுப்பியுள்ளார்:-

சங்கானை ஆஸ்பத்திரியின் அபிவிருத்திபற்றி நான் தங்களுக்கு ஏற்கனவே விடுத்த வேண்டுகோள்கள் பல இன்னும் நடைமுறைக்கு வராதிருக்கின்றன என்பதை இவ்வூர்ப் பொது மக்கள் சார்பில் மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் முன்பு குறிப்பிட்டிருந்த அவசர அத்தியாவசிய தேவைகளான, வைத்திய அதிகாரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வீடுகள் அமைத்தல், ஆஸ்பத்திரிக்கு தெலிபோன் வசதி செய்து தருதல் முன்பக்கம் மதில்ச் சுவர் கட்டுதல், இரவு நேரங்களில் நோயாளரை அனுமதிக்க இன்னுமோர் வைத்திய அதிகாரியை நியமித்தல் போன்றவைகளுடன் இன்றுள்ள அதிமுக்கியமான தேவை ஓர் பிரேத அறை கட்டுவதாகும். இது சம்பந்தமாகச் சமீபத்தில் ஓர் இறந்தவரின் உடல் காலை தொடக்கம் மாலைவரையும் வார்டிலேயே கிடக்க நேரிட்டதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

இவ்வூர் வாழ் ஏழைப் பொது மக்களின் சார்பில் அவர்கள் நலன் கருதி இத்தேவைகளை தற்போது அரசாங்கத்திஞல் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகுதிகளுக்கான சுகாதார அபிவிருத்தி நிதியில் உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

---

### கைதடி கிழக்கு சன சமூக நிலையம்

கைதடி கிழக்கு ஜன சமுக நிலையத்தின் ஆதரவில் மேற்படி நிலையத்தில் 6-11-59-ல் வருடாந்தக் கூட்டம் செல்வன் வி. ச. இராசதுரையின் தலைமையில் ஆரம்பமாகியது. அத்தருணம் கீழ் கண்ட [illegible] தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: செ. வேலாயுதம், உப தலைவர்: க. ச. சிவசுப்பிரமணியம், கௌரவ காரியதரிசி: ஆ. கந்தையா, உப காரியதரிசி: க. இராசையா, தனுதிகாரி: வி. ச. இராசையா, உப தனுதிகாரி: சி. சுப்பிரமணியம். நிர்வாக சபை அங்கத்தவர்களாக இராசகுல வீரசிங்கம், கந்தசாமி, பொன்னம்பலம், சிற்றம்பலம், சுப்பிரமணியம் ஆகியோரைத் தெரிவு செய்யப் பெற்றனர். மேற்பார்வையாளராக திரு. த. சங்கரப்பிள்ளையையும், உப மேற் பார்வையாளராக திரு. க. முருகேசும் தெரிவு செய்யப்பெற்றனர்.

---

# தேர்தல் நிதி தருக

வட மாகாணத்தில் இரண்டு உப தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. வன்னியசிங்கத்தின் மரணத்தால் காலியான கோப்பாய்த் தொகுதியிலும், திரு வி. சுந்தரலிங்கத்தின் ராஜிஞமாவிஞல் காலியான வவனியாத் தொகுதியிலும் அந்த உபதேர்தல்கள் நடக்கும்.

இந்த இரண்டு உப தேர்தல்களும் பொதுவாகத் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்கும் விடப்பட்டிருக்கும் சவாலாகும். எங்கள் மக்களும் கட்சியும்தமிழுக்கும் தமிழருக்கும் பரிபூரண விசுவாசமாக இருந்து, தமிழர் நலனுக்காகப் போராடக் கூடிய தகுதி வாய்ந்த அபேட்சகர்களை உபதேர்தல்களுக்கு நிறுத்த முடியுமா என்பதுதான் அந்தச் சவால் ஆகும்.

குறிப்பாக வவனியா, நன்ருக உழைக்கக் கூடிய சிறந்த ஒரு தொண்டரை—அந்தப் பிராந்தியத்தைத் தமிழர் பிரதேசத்தின் ஒருபகுதியாகப் பாதுகாத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க அயராது போராடக் கூடிய ஒரு வீரரை, தெரிவு செய்தாக வேண்டும். தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணுக அமைந்திருப்பது வவனியா.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருப்பதாஞல் அவருக்கு கணிசமான அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். துரதிர்ஷ்ட வசமாக தமிழர்களுள் சொந்த வருமானம் உள்ளவர்களிடம் இலங்கையில் தமிழினம் அழிந்து போகாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம், அதற்கான உணர்வு போதிய அளவில் இல்லை. அதே நேரத்தில் தமிழினத்தின் நலனிலும் நல் வாழ்விலும் அக்கறை கொண்ட ஆண்கள்பெண்கள்—இரு பாலரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட பணபலம் இல்லை. அதாவது வருமானம் கிடையாது.

இந் நிலையில், தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணி நாட்டமும் கொண்ட ஒருவரையே வவனியாத் தொகுதித் தேர்தலுக்கு அபேட்சகராகத் தெரிந்தெடுக்க வேண்டும்; அத்தோடு அவருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்வதையும் பணம் செலவு செய்து உழைப்பதையும் கட்சியே பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது.

இதே போன்ற நிலைமை[illegible]தான் கோப்பாய்த் தொகுதியிலும், நாம் அங்கு நிறுத்தும் அபேட்சகரான திருமதி கோமதி வன்னியசிங்கத்துக்கு ஆதரவு தருவது மட்டுமல்ல, அவருக்காக தேர்தல் வேலைகளைச் செய்து செலவினங்களைக் குறைக்கவும் அந்தத் தொகுதி மக்கள் ஆயத்தமாக இருக்கிருர்கள். அப்படி இருந்தும், ஒருசில ஆயிரம் ரூபாய்கள் அங்கே செலவு செய்துதான் தீர வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது அந்தச் செலவினம் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி நிதி உதவியையும் வேறு உதவிகளையும் கோரி நிற்கிறது. கட்சி கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்திருக்கிறது; வருங் காலத்திலும் அது தொடர்ந்து செய்து வரும் எனவே கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாகத்தந்து உதவுங்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,

கொழும்பு—3.

---

## ஏழை உள்ளம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கோணமலையின் உடல் 'கிடு கிடு'வென்று நடுங்கியது. கடைசியாக அள்ளிய சோற்றுப் பிடியையும் அவசர அவசரமாக தனது வாய்க்குள் திணித்து விட்டான். அடுத்த கணம் என்ன நடக்குமோ...?

கிழவன் தொடர்ந்தான், "தின்னுறியா? தின்னு, தின்னு! இண்டைக்குப் பள்ளிவாசலிலை 'புஹாரி'. நானும் திண்டுட்டு உனக்கும் கொண்டு வந்து வைச்சன்". கிழவரின் வாயிலே ஒரு கொட்டாவி பிறந்தது.

கோணமலையின் வாயிலிருந்து சோறு ஒவ்வொரு பருக்கையாக வெளியே உருண்டு விழுந்தது. 'இந்தத் தயாள மனம் படைத்த கிழவனிடம் உனது தரித்திர புத்தியைக் காட்டிவிட்டாயே' என்ற அந்தராத்மாவின் வினுவுக்கு விடை சொல்லத் தெரியாமல், நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் கோணமலை.

---

## உயர் பதவிக்காக

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் சிங்கள தமிழ்க் கலாசாரத்தை வளர்ப்பதற்கும்,இந் நாட்டு நிருவாகத்தைத் தேசிய மொழிகளில் நடத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்வதற்கும் எடுக்கப்படும் முயற்சிகளை நான் ஆதரிக்கிறேன்; ஆனுல் நாட்டு ஒற்றுமையைத் தகர்த்தெறிந்து, இந் நாட்டிலுள்ள இரு பெரும் சமூகத்தாரிடையில் நிரந்தர பிளவையும் பகைமையையும் வளர்த்து, கடைசியில் ஒரு வேளை இந் நாடே பிரிக்கப்பட வேண்டிய நிலைமைக்கு வரக்கூடியவாறு மக்கள்மேல் சிங்களத்தைத் திணிக்க வேண்டுமா? அரசாங்க மொழிக் கொள்கையைச் செயற்படுத்த முனையும்போது மேற்கூறிய விடயங்களை நாம் நன்கு ஆராய்தல் வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 6-வது வாரம்!

ஆயிரமாயிரம் ரசிகர்கள் கண்டு களித்து விட்டார்கள்! காணத் தவருதீர்கள்!!
கருத்து நிறைந்த படம்! கண் விழித்துக் காண வேண்டிய படம் இது!!

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது! ★ இன்றே பாருங்கள்!!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) நியூசினிமா (குருணகல்) தீபொளி (நுவரெலியா) லக்ஷ்மி (ரத்தினபுரி) சரசாவி (அக்கரப்பத்தனை) விஜிதா (மஸ்கேலியா)



உள்ளத்தை உருக்கும் **கதை** மட்டுமல்ல....
நெஞ்சையே கொள்ளை கொள்ளும் **காதல்**
நினைத்து நினைத்து சிரிக்க வைக்கும் **ஹாஸ்யம்**
இவையனைத்தும் கொண்டதுதான்.....

**வீனஸ்** பிக்சர்ஸ்

# கல்யாண பரிசு

கதை, வசனம்
டைரக்ஷன்
ஸ்ரீதர்

சங்கீதம் · A.M. ராஜா
காமரா · வின்சென்ட்
ஆர்ட் · கங்கா
எடிட்டிங் · N.M. சங்கர்
ஸ்டுடியோ
விஜயா-வாஹினி

**ஜெமினி கணேசன்,**
**சரோஜாதேவி, விஜயகுமாரி,**
தங்கவேல் நடித்தது.



நீண்ட நாட்களுக்குப் பிறகு அருமையான குடும்பக் கதை ஒன்று. திரை ஓவியமாக்கி அளிக்கப்பட்டிருக்கிறது. உள்ளத்தை உருக்குகிறது; உணர்ச்சிகளை மீட்டுகிறது; ஒருகணமும் படத்தில் பதித்த கவனத்தைத் திருப்பாதிருக்கத் தூண்டுகிறது. பார்ப்பவர்களையே கதாபாத்திரங்களாக்கி திரையில் நடப்பதெல்லாம் நமக்கு நடப்பதுபோன்ற உணர்வில் மகிழவும், நெகிழவும், துவளவும், துணுக்குறவும், கண்ணீர் கொட்டவும் வைக்கிறது படம்.

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் ... சிவநாயகம் அவர்களால் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 நவம்பர் மாதம் 22-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org